


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெயர் ஒன்று வேண்டும்

MANN (ERDE) MAGAZIN
V. Sivarajah
Am Windhövel 18a
47249 Duisburg
Germany

மணிமேகலைப் பிரசுரம்
[illegible]
Manimekalai @ [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெயர் ஒன்று வேண்டும்

(சிறுகதைகள்)

ஆசிரியர் :

## இராஜன் முருகவேல்


## மணிமேகலைப் பிரசுரம்

தபால் பெட்டி எண் : 1447
7 (ப.எ.4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர்,
சென்னை - 600 017.
தொலைபேசி : 4342926
தொலைநகல் : 044-4346082
மின் அஞ்சல் :
Manimekalai @ eth.net


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விவரம்

| | |
|---|---|
| நூல் தலைப்பு | பெயர் ஒன்று வேண்டும் |
| ஆசிரியர் | இராஜன் முருகவேல் |
| மொழி | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | 2000 |
| பதிப்பு விபரம் | முதல் பதிப்பு |
| உரிமை | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | 11.2 கி.கி. |
| நூலின் அளவு | கிரெளன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | 160 |
| நூலின் விலை | ரூ. 33.00 |
| லேசர் வடிவமைப்பு | கிறிஸ்ட் டி.டி.பி. சென்டர், சென்னை - 24. |
| அச்சிட்டோர் | ஸ்கிரிப்ட் ஆப்செட், சென்னை - 94. |
| நூல் கட்டுமானம் | தையல் |
| வெளியிட்டோர் | மணிமேகலைப் பிரசுரம், சென்னை - 17. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | பெயர் ஒன்று வேண்டும்! | 13 |
| 2. | அகத்தில் அரும்பிய ஆரூடம் | 25 |
| 3. | விரிசல் | 40 |
| 4. | அதில் என்ன தவறு?! | 50 |
| 5. | தனக்கென வேறு | 59 |
| 6. | நாளைக்காக இன்றா?! | 70 |
| 7. | கருகிய மொட்டுக்கள் | 77 |
| 8. | மன விகாரங்கள் | 89 |
| 9. | சர்ப்பங்கள் | 96 |
| 10. | சிறு துளி | 104 |
| 11. | வாசம் இழந்த மலர்கள் | 116 |
| 12. | சாகாவரம் | 125 |
| 13. | மறு விசாரணை | 137 |
| 14. | கூண்டுப்பறவை | 148 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

ஒரு மனிதன் இன்னொரு மனிதனைச் சந்திப்பதாலேயே வாழ்க்கை நகருகிறது என நினைக்கிறேன். தனிமைப்படுத்தப்பட்ட மனிதனால் வாழவே முடியாது. அவ்வாறு வாழ்ந்தாலும் அதற்குப் பெயர் வாழ்க்கை அல்ல.

இந்தச் சந்திப்புக்களால் ஏற்படும் தாக்கங்கள் ஒவ்வொரு மனிதனையும் ஒவ்வொரு போக்கில் கொண்டு செல்கின்றன.

அந்தவகையில் எனக்கேற்பட்ட சந்திப்புக்கள் என்னை எழுதுகோலின் பக்கமாக நகர்த்தி, தற்போது மணிமேகலைப் பிரசுரத்தின் சந்திப்பையும் தந்து 'பெயர் ஒன்று வேண்டும்' என்ற இச் சிறுகதைத்தொகுதியின் வரவிற்கும் ஏதுவாக உள்ளது.

எழுத்தைப் பொறுத்தவரையில் நான் மு.வரதராசன், கல்கி, சாண்டில்யன், தமிழ்வாணன், சுஜாதா, பாலகுமாரன் என்று பல இந்திய எழுத்தாளர்களையும் செங்கை ஆழியான், இந்துமகேஷ், பாலமனோகரன் என்று பல ஈழத்து எழுத்தாளர்களையும் வாசிப்புமூலமாக சந்தித்ததின் பலனாகத்தான் என்னால் இவ்வளவுதூரம் எழுதமுடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயகத்தில் நான் பாடசாலை மாணவனாக இருந்தபொழுதில் 'ஒரு விலைமகளைக் காதலித்தேன்' என்னும் நாவலினூடாக என்னுள் புகுந்தவர் திரு. இந்துமகேஷ் அவர்கள். புலம்பெயர் நாடு அவருடனான நேரடி அறிமுகத்தைத் தந்து, அவரூடான எனது முதல் சிறுகதைத்தொகுதியான 'யௌவனமில்லாத யதார்த்தங்கள்' என்ற நூலின் வரவிற்கும் காரணமாக அமைந்தது.

இது எனது இரண்டாவது சிறுகதைத் தொகுதி. 90களில் எழுதிய சிறுகதைகள். இவற்றுள் சில அவ்வப்போது நிகழ்ந்த சம்பவங்களின் அடிப்படையிலும் எழுந்தவை. உதாரணமாக 'வாசம் இழந்த மலர்கள்' நிகழ்ந்த சூழலுக்கும் தற்போதைய சூழலுக்கும் வித்தியாசம் உண்டு. எனினும் கதைகளில் வரும் கருத்துக்களை இன்றும் அவதானிக்கக் கூடியதாகத்தான் உள்ளது.

இதில் வரும் கதைகள் பூவரசு, மண் சஞ்சிகைகளில் பிரசுரமானவை.

'சிறுதுளி' என்னும் சிறுகதையை ஈழத்து 'வில்லிசைச் செம்மல்' நாச்சிமார்கோயிலடி இராஜன் வில்லிசையாகவும் ஜேர்மனி மேடைகளில் நிகழ்த்தி எனக்கு உற்சாகம் தந்தார்.

இந்த நேரத்தில் எனது சிறுகதைத் தொகுதியை வெளியிடும் மணிமேகலைப் பிரசுரத்தினருக்கும், குறிப்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து எழுத்தாளர்கள்பால் அக்கறையும் ஆதரவும் கொண்டுள்ள திரு. ரவி தமிழ்வாணன் அவர்களுக்கும், அணிந்துரை தந்த எனது அபிமான எழுத்தாளர் திரு. இந்துமகேஷ் அவர்களுக்கும், எனக்கு ஊக்கமளிக்கும் சஞ்சிகையாளர்களுக்கும் வாசகர்களுக்கும் எனது பணிவான வணக்கங்களையும் நன்றிகளையும் கூறிக்கொள்ளுகிறேன்.

மீண்டும் எழுத்துக்கள்மூலம் சந்திப்போம்.

வணக்கம்.

அன்புடன்,

இராஜன் முருகவேல்

Buntentorsteinweg 395,
28201 Bremen, Germany.
03.07.2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வாசகனாக நின்று....

நமக்குத் தொழில் கவிதை. நாட்டிற்குழைத்தல். இமைப்பொழுதும் சோராதிருத்தல் என்பான். எங்கள் உணர்ச்சிக் கவிஞன் பாரதி. தொழில் என்று கொள்ளமுடியாத சில சங்கதிகள் எம்மிடம் உண்டு. எழுத்தும் அதில் ஒன்று— எம்மைப் பொறுத்தவரை— ஈழத்தமிழ் எழுத்தாளர்களைப் பொறுத்தவரை!

□

ஆனால்—

எழுதுகிறோம்—

எங்கள் எண்ணங்களுக்கு ஒரு வடிகால் தேவை என்பதற்காக! எழுதுகிறோம்—

எங்கள் உணர்வுகளை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளவேண்டும் என்பதற்காக! எழுதுகிறோம்—

வாழ்வின் நிகழ்வுகளை வருங்காலத்திற்காக பதிவுசெய்து வைக்கவேண்டும் என்பதற்காக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

□

புலம்பெயர் மண்ணிலும்–

பலரும் எழுதுகிறார்கள்–

ஏதோ ஒரு காரணத்தை முன்வைத்து!

எழுத ஆரம்பித்த சிலர் ஒதுங்கி நிற்கிறார்கள்–

அதற்கும் சில காரணங்கள் உண்டு!

ஒதுங்கிப் போகிறவர்கள் பொதுவாகச் சொல்லிக்கொள்ளும் ஒரு காரணம்– எழுதுவதற்கு என்ன இருக்கிறது!

அவர்களுடனேயே உலகவாழ்க்கை ஒட்டுமொத்தமாக முடிந்துபோவதான ஒரு மாயத்திரைக்குள் அவர்கள் வசப்பட்டு நிற்கிறார்கள். அதனால் அவர்கள் எழுதுவதில்லை!

□

தன்னில் அக்கறைகொண்டவன் தனது சமுதாயத்தின்மீது அக்கறைகொண்டவன் அதற்கும் மேலாக தான்வாழும் உலகத்தின்மீது அக்கறைகொண்டவன் ஒருபோதும் சோர்ந்துவிடுவதில்லை. வாழ்தலுக்கான ஒரு பிடிப்பு ஒரு அக்கறை அவனை எப்போதும் பற்றிநிற்கிறது. அதனால் அவன் தன்னால் இயன்றளவு எப்போதும் எதையாவது படைத்துக் கொண்டிருக்கிறான். அது எழுத்தாகவும் இருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

□

புலம்பெயர் மண்ணில் தமிழ்க் கலை இலக்கியங்கள்பற்றி பல்வேறு வகையான விமர்சனங்கள் அவ்வப்போது வெளிவந்துகொண்டிருக்கின்றன. பல சமயங்களில் தத்தம் சார்புநிலையில் தத்தமக்குத் தெரிந்த படைப்பாளர்கள் எழுத்தாளர்கள் என்று ஒரு பட்டியலை நீட்டிக்காட்டி அதற்குள்ளேயே புலம்பெயர் கலை இலக்கியம் அடங்கிவிட்டதாக சிலர் பாவனைகாட்டுகிறார்கள். சில சமயங்களில் புலம்பெயர்ந்தோர் இலக்கியம் என்று எதுவுமே இல்லை என்று நக்கல் பண்ணுகிறார்கள். பயிர்விளையும்போது களைகளும் கூடவே விளைவதைத் தடுத்துவிட முடியாதுதான். ஆனால் அவர்களது கூற்றுக்குள்ளேயே பலம்பெயர்ந்தோர் இலக்கியம் புதைந்துவிட்டதாக எந்தத் தேர்ந்த வாசகனும் ஒப்புக்கொள்ளமாட்டான்.

□

புலம்பெயர்ந்தோர் இலக்கியம் சரியாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டுமானால் அவைகள் வாசகர் மத்தியில் பரவலாக எடுத்து வரப்படவேண்டும். இதைச் செய்வது யார்? படைப்பாளனே தன் கைப்பொருளையும் இழந்து கலை இலக்கியம் வளர்க்கவேண்டுமெனில்– அது எல்லாநாடுகளிலும் ஒரு தொடர்கதையாக அமைந்தபோதிலும்– எத்தனைகாலத்துக்கு இது சாத்தியப்படும் என்பது வாசகர்களால் உணரப்பட வேண்டும். தரமான வாசகர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியானமுறையில் ஆதரவு தரும்போதுதான் இது சாத்தியமாகும் என்பது என் கருத்து.

□

புலம்பெயர்மண்ணில் ஒரு எழுத்தாளனாக சஞ்சிகையாளனாக நான் சந்தித்த படைப்பாளர்கள் மிக அதிகம். இளைய தலைமுறையில் பலரது எழுத்துக்கு நான் வாசகனாக இருப்பதில் பெருமிதம் வருகிறது. எழுத்தில் எனது தலைமுறைக்கும் இளையதலைமுறைக்கும் இடையில் ஒரு தலைமுறை உண்டு. அதில் முன்னிடம் வகிக்கும் எழுத்தாளர்களில் என்னைக் கவர்ந்த எழுத்தாளர் இராஜன் முருகவேல். பூவரசு கலை இலக்கியப் பேரவையின் முதல் வெளியீடாக ஜெர்மனியில் வெளிவந்த இவரது சிறுகதைத்தொகுதியான யௌவனமில்லாத யதார்த்தங்கள் முன்னுரையில் இவரைப்பற்றி நான் குறிப்பிட்டதை மறுபடியும் இங்கே குறித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

□

இராஜன் முருகவேல்!

இப்போது பூவரசு வாசகர்களுக்கு மிகவும் நெருக்கமாகிவிட்ட பெயர். இவரது எழுத்துக்கள் யதார்த்தங்களைப் பேசுகின்றன என்பது சிறப்பு. இராஜனின் கதை மாந்தர்கள் அனைவருமே நமக்கு அறிமுகமானவர்கள்போல் தோன்றுவதற்கு காரணங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு. ஒன்று சமுதாயம் பற்றிய இராஜனின் ஆழமான பார்வை. மற்றது கதைமாந்தர்களின் இயல்பான குணாதிசயங்களை அவர் சித்தரிக்கும் விதம். புலம்பெயர் மண்ணில் நமது சமூகத்தின் நிலைபற்றி இராஜன் அதிகமாகவே அக்கறைகொள்கிறார் என்பதற்கு அவரது கதைமாந்தர்களே சாட்சி. உள்ளே வந்து நீங்களும் அவர்களைச் சந்திக்கும்போது உங்களுக்கும் அது புரியும்.

□

இராஜனின் இரண்டாவது சிறுகதைத் தொகுதியாக வெளிவரும் இந்தச் சிறுகதைத் தொகுதியும் அந்தக் கருத்துக்குள் அடங்கி நிற்கிறது. அவரது எழுத்துப்பணி மேலும் தொடரவேண்டும். தமிழ்கூறும் நல்லுலகம் அவருக்கு ஆதரவு தந்து வரவேற்பளிக்கவேண்டும். எனது வாழ்த்துதலும் வேண்டுதலும் இதுவே.

அன்புடன்,

இந்துமகேஷ்,

(ஆசிரியர், பூவரசு)

பூவரசு கலை இலக்கியப் பேரவை– ஜேர்மனி.

12.07.2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனையாகும் இதர நூல்கள்!

## சிறுகதை - Short Story

| | |
|---|---|
| யானைக் கதைகள் | 13.00 |
| வைரக் கதைகள் | 20.00 |
| மாபசான் கதைகள் | 10.50 |
| பாம்புக் கதைகள் | 11.50 |
| கஞ்சன் கதைகள் | 22.00 |
| வேதாளக் கதைகள் | 17.00 |
| டால்ஸ்டாயின் கதைகள் | 30.00 |
| மூடன், மட்டி, மடையன் கதைகள் | 30.00 |
| சிறந்த இந்தியச் சிறுகதைகள் பாகம்-1 | 14.00 |
| பாகம்-2 | 25.00 |
| இராமகிருஷ்ணர் சொன்ன குட்டிக் கதைகள் | 11.00 |
| புதையல்களைப் பற்றிய சுவையான கதைகள் | 17.00 |
| பல்சுவைக் கதைகள் | 58.50 |
| அறிஞர்கள் சொன்ன அருமையான குட்டிக் கதைகள் | 21.00 |
| அறிவை வளர்க்கும் அற்புதக் கதைகள் | 20.00 |
| கதையாம், கதையாம் காரணமாம் | 47.00 |
| வாழ்க்கைக்கு வளம் சேர்க்கும் சிறுகதைகள் | 20.00 |
| லவ்லி எஸ்டேட்- P.K. இராமச்சந்திரன் | 27.00 |
| அனைவரும் விரும்பும் அறிவுக்கதைகள் | 33.00 |
| நகைச்சுவை ததும்பும் நாடோடிக் கதைகள் | 29.00 |
| பாப்பா பாப்பா கதைகேளு பாகம்-1 | 35.00 |
| பாகம்-2 | 35.00 |
| நேர்மை வேண்டும் | 36.00 |

## மர்மச் சிறுகதை

| | |
|---|---|
| தமிழ்வாணனின் சிறுகதைகள் - பாகம்-1 | 9.00 |
| பாகம்-2 | 10.00 |
| ஹிட்ச்காக் கதைகள் | 20.00 |
| ரயில் திருடன் | 27.00 |
| பண நோட்டுக்கள் பறந்தன! | 9.50 |
| பிரேத மனிதன் | 8.75 |
| உண்ணக் கொடுத்திட்டான் உயிர்களை! | 8.75 |
| போலீசைக் கூப்பிடுங்கள்! | 10.25 |
| கீக்கீ | 6.50 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெயர் ஒன்று வேண்டும்

அருளம்பலம் அண்ணருக்கு மனதில் ஒரு பெரிய கவலை! ஜேர்மனிக்கு வந்து பத்து வருடங்களுக்கு மேலாகியும் அவரது நீண்டநாள் ஆசையொன்று நிறைவேறாமலேயே இருக்கின்றது.

அந்த ஆசை....

'பெவுக்னிஸ் விசா'வுடன் ஸ்ரீலங்காவுக்குச் சுற்றுலாப் போய் வரவேண்டும் என்பதல்ல.

'சோசல்'காசில் இருந்து களவாக வேலைசெய்து வட்டிக்குக் கொடுத்துவரும் குட்டியால் தொந்தியை நிரப்ப வேண்டும் என்பதும் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி என்னதான் ஆசை...?!

ஏதாவது ஒரு விசயத்தைப்பற்றிப் பேசும்போது,

"அட அந்த அருளம்பலத்தைப்போல வருமே" என்று பலரும் பேசிக்கொள்ள வேண்டும் என விரும்பினார்.

பகலும் இரவும் இந்த ஆசை அவரை அலைக்கழித்தது. அதனால் அருளம்பலம் அண்ணரின் பப்படம்போன்ற வதனம்கூடக் கருகிப்போன கடலை வடையாட்டம் இருண்டு கிடந்தது.

அதனைக் காண அண்ணரின் தர்மபத்தினியான அருந்ததி அண்ணிக்குக்கூடச் சகிக்கவில்லை.

'வேலைத்தலத்தில் ஏதாவது கஸ்டமான வேலைதான் அண்ணரின் வாட்டத்துக்குக் காரணமோ?'

'மார்க்' இப்ப இலங்கையில் முப்பத்துநாலு ரூபாய் என்றால் எந்த வேலையும் அண்ணருக்குத் தூசிமாதிரி என்பது அருந்ததி அண்ணியாருக்கு நன்கு தெரிந்த விடயம்.

நேரிடையாகவே கேட்டுவிட்டார்.

"என்னப்பா! எப்ப பார்த்தாலும் எதையோ பறி குடுத்தமாதிரி முகட்டை முகட்டைப் பாத்துக் கொண்டிருக்கிறியள்?"

"முகட்டிலை பிலாக்காய் தொங்குது.... வாய்க்கை வந்து விழுமெண்டு பாத்துக் கொண்டிருக்கிறன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிச்சலுடன் கீழேவிழுந்த தகர 'டப்பா'வைப்போல் கணகணத்தவரை விசித்திரமாகப் பார்த்தார் அண்ணியார்.

"வெளியிலைபோய் பனிகினி பிடிச்சிட்டுது போலை! அப்பவும் சொன்னனான் வெளியிலை போகேக்கை தொப்பியைப் போட்டுக்கொண்டு போங்கோ எண்டு" என்று அருந்ததி அண்ணியார் கூறியதுதான் தாமதம், 'செற்றி'யில் இருந்து முன்னே தொங்கிச் சரிந்துபோன வண்டியுடன் எகிறிக் குதித்தார் அருளம்பலம் அண்ணர்.

"ஓ.... அருந்ததி! மைன லீப்லிங்.... கண்டுபிடிச்சேன்.... கண்டு பிடிச்சேன்..." என்று கத்தியவரைக் கண்டு பதைபதைத்தார் அருந்ததி அண்ணியார்.

"என்னப்பா செய்யுது உங்களுக்கு? ஐயோ கடவுளே...! வேப்பங்குத்திமாதிரி நல்லாயிருந்த மனுசனை இப்பிடி ஏன் நாசமாக்கிப்போட்டாய்?" என்று ஒப்பாரி வைக்க ஆரம்பித்துவிட்டார் அண்ணியார்.

"எடியாத்தை.... நிப்பாட்டு உன்ரை கத்தலை.... என்ரை கனகாலத்தை ஆசை நீ சொன்ன தொப்பியாலை நிறை வேறப்போகுது...."

"கனகால ஆசையோ...?! அதென்னப்பா அப்பிடியொரு ஆசை இந்த வயசிலை?! வாற சம்பாத்தியம் காணாதெண்டு தொப்பியோடைபோய் 'வானோவ்'வுக்கு முன்னாலை நிண்டு பிச்சை கேக்கப் போறியளே?!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அடி செருப்பாலை.... இந்த அருளம்பலத்தைப்பற்றி நாலு பேர் கதைக்க வேணும்..."

"அது பெரிய வேலையே...? நான் சொல்லுவன்... உங்கடை அருமை மேள் அம்பிகா சொல்லுவள்.... உங்களைக் கண்டால் சோசல்காரன், அவுஸ்லாண்டர் பொலிஸ் எண்டு அஞ்சாறு பேராலும் சொல்லீனம்தானே!!"

"இந்த வயசிலை உனக்கொரு நக்கல்.... இந்த ஜேர்மனியிலை ஆராலும் ஒருத்தன், 'அருளம்பலத்தைத் தெரியுமே' எண்டு விசாரிக்கேக்கை, 'எட அந்தாளைத் தெரியாதெண்டால் 'வேறை ஆரைத் தெரியும்?' எண்டு சனங்கள் சொல்லவேணும்..."

"நான் உங்கடை துள்ளலைக் கண்டு ஏதோ பைத்தியம் கிமித்தியம் பிடிச்சுப்போச்சோ எண்டெல்லே பயந்து போனன்.."

"ஹி... ஹி.... அன்புதான்... என்ன அருந்ததி...!!"

"பைத்தியக்காரன்ரை மேளை ஆர் கலியாணங்கட்ட வருவினம்.... சொல்லுங்கோ பாப்பம்?!"

அசடு வழிய நின்றார் அருளம்பலம் அண்ணர்.

"தொப்பியை வைச்சு என்ன செய்யப்போறியள்?!"

"எல்லாரும் சமயம் மாறீனம்... நானும் மாறப்போறன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ப்பூ.... பத்தோடை பதினொன்டெண்டு கதைப்பினம்...."

"நான் முஸ்லீமாக மாறப்போறன். எங்கடை ஆக்கள் எவனும் செய்யாத புதுமை. இதைப்பற்றி எல்லாரும் கதைப்பாங்கள்.."

"கதைப்பினமோ இல்லையோ. நிச்சயமாக் காறித் துப்புவினம். கட்டையிலை போற வயசிலை கண்டறியாத ஆசை ஒண்டு. நீங்கள் ஆட்டைக் கடிச்சு மாட்டைக் கடிச்சு என்னத்துக்கு வாறியள் எண்டு விளங்குது...!"

"என்னடியாத்தை?!"

"முஸ்லீமானால் ரண்டு மூண்டைப் பெஞ்சாதியாய் வைச்சிருக்கலாம் எண்ட ஐடியாதானை ஐயாவுக்கு?! ரீவியிலை சுவுடு பாக்கேக்கையே நினைச்சனான், இப்பிடி என்னவாலும் கந்தல்கள் வருமெண்டு."

"எடியே கண்கெடுவாளே! சத்தியமா அப்பிடி எல்லாம் இல்லை..."

"உங்களை நம்பேலாது.... செய்தாலும் செய்வியள்.... நான் இதுக்கு ஒருக்காலும் சம்மதிக்கமாட்டன்..."

மறுபடியும் சோர்ந்துபோனவராய் 'செற்றி'யில் அமர்ந்து முகட்டைப் பார்த்தார் அருளம்பலம் அண்ணர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இனிமேல் தொப்பியைப்பற்றிக் கதைப்பதில்லை!' என்று மனதிற்குள் தீர்மானித்துக் கொண்டார் அருந்ததி அண்ணியார்.

அருளம்பலம் அண்ணர் கையில் ஒரு கட்டுக் கடிதங்களுடன் பதினாறு வயது வாலிபனாகத் துள்ளிக் குதித்தபடி வந்தார்.

"அருந்ததி! பிள்ளை அம்பிகா!! எல்லாரும் வாங்க இங்கை.... கைமேல் பலன்.... 'பரிஸ்'ஸிலை இருந்து வாற தமிழ்ப்பேப்பரிலை போட்ட விளம்பரத்துக்கு கைமேலை பலன் கிடைச்சாச்சு..."

"என்ன... 'பலருக்குத் தெரிந்த மனிதராக வாழ வழிமுறை கூறுவோருக்கு ஆயிரம் மார்க் பரிசு' எண்ட விளம்பரம்தானே...? ஆராலும் வேலைவெட்டி இல்லாததுகள் எழுதியிருக்கும்!" என்ற அருந்ததி அண்ணியாரைச் சுட்டெரிப்பதுபோலப் பார்த்தார் அண்ணர்.

"எதுக்கும் அபசகுனமாய் ஒவ்வொண்ட சொல்லிப் போடுவாய். பிள்ளை அம்பிகா... நீ இப்ப ஒவ்வொண்டாய் உடைச்சு வாசி!"

அம்பிகா ஒவ்வொரு தபாலாக வாசிக்க ஆரம்பித்தாள்...

"அன்புள்ள அருளம்பலம் ஐயா! தங்கள் சுகம் எப்படி?..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மடையன்! மடையன்!! 'ஐடியா' சொல்லெண்டு கேட்டால் சுகம் விசாரிக்கிறான்... எனக்கென்ன குறைச்சல்?! ஊரிலை சாப்பிட்ட ஒடியலும் குரக்கனும் இன்னும் வயித்துக்கை இருக்கு!"

"அப்பா! குரக்கன் இப்ப முளைக்குதுபோலை...!"

"என்ன?!"

"உங்கடை வயிறு வரவரப் பெருக்குது!"

"உதைவிட்டுப்போட்டு முக்கிய 'ஐடியா'க்களைமட்டும் படி மேனை!"

"நான் குடி சூது எண்டு கண்டபடி சுத்திறனான்.... அதனால் என்னால் திருமணம் செய்ய முடியவில்லை. உங்கள் மகளை எனக்குக் கலியாணம் கட்டிவைத்து, என் வாழ்க்கைக்கு உதவினால், உங்களைப்பற்றி நல்லவிதமாய்க் கதைப்பார்கள்."

"அடி செருப்பாலை.... துப்புக்கெட்டவன்ரை தப்புத் தப்பான 'ஐடியா'.... அடுத்த கடிதத்தைப் பார் பிள்ளை...."

"எனக்குக் கொஞ்சக் காசு தேவைப்படுகிறது. பத்தாயிரம் மார்க் தந்தால் உங்கள் பெயர் வெளியே தெரியும் மார்க்கத்தைக் காட்டுவேன்!"

"ஒரு கல்லிலை ரண்டு மாங்காய் அடிக்கப் பாக்கிறான்... போக்கிரிக் கழுதை. காசை ஏமாத்திப்போட்டு என்னை 'ஏமாந்த சோணகிரி' எண்டு நாலுபேர் நக்கலடிக்க 'ஐடியா' சொல்லுறான்...!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த கடிதத்தை எடுத்தாள் அம்பிகா.

"நீங்கள் ஜேர்மன் ஜனாதிபதித் தேர்தலில் நிற்கலாம்...!"

"நாசமாய்ப்போச்சு...! தனித்தமிழ் ஜேர்மனி கேட்டுப் போராடலாம் எண்டு எழுதாமல் விட்டான்...!"

தலையில் அடித்துக்கொண்டார் அருந்ததி அண்ணியார்.

கடிதங்கள் எவையுமே உருப்படியாக இல்லாத கவலையில் முகட்டைப் பார்க்கலானார் அருளம்பலம் அண்ணர்.

அருளம்பலம் அண்ணர் 'செற்றி' ஒன்றில் உட்கார்ந்தவாறு 'றெஸ்லிங்' (றுசநளவடலைெ) பார்த்துக் கொண்டிருக்கிறார்.

"அப்பிடிப் போடு. பூட்டெண்டால் உதுதான் பூட்டு. எங்கை கழட்டட்டும் பாப்பம்.... எணேய் அருந்ததி! இஞ்சை ஓடி வாணை...!"

"உங்களுக்கு வேறை வேலை இல்லை. அவங்கள் ஆரோ அடிபடுறாங்கள் எண்டால் உங்களுக்குக் கொள்ளை புளுகம். இங்கை அடுப்படீக்கை நான் ஒருத்தியாய்க் கிடந்து காயுறன்!"

"ஐயோ கெதியா இஞ்சை வாணை.... அண்டரேக்கர் என்னமாய்ப் பூட்டுப் போட்டிருக்கிறான் பாரன்.... அசைக் கேலாது!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்ப அண்டரேக்கர்தான் கேக்குதோ...? நேரகாலத்தோடை அம்பிகா ரேக்கரைப் (taker) பாக்கக் காணேலை...!"

"உனக்குக் காலநேரமில்லாமை உந்தக் கதைதான்...! அம்பிகா ஆர்...?! அந்த அருளம்பலத்தின்ரை ஒரேமேள்.... அவளை எடுக்க ஒருத்தன் வாறதெண்டால் ஒரு தகுதி தராதரம் பாக்க வேண்டாமே...?!"

"அவள் ஜேர்மனியிலை எல்லே படிச்சவள்.... அதுக்கேத்த மாதிரிப் பாக்காமைத் தராதரம் அது இதெண்டு அவளை இப்பிடியே வைச்சிருக்கப்போறியளே...?"

"அதைப் பேந்து பாக்கலாம்... இப்ப அண்டரேக்கற்ரை பூட்டை வந்து பாரன். இன்னும் அசைக்க முடியேல்லை!"

"ஊரிலை எண்டாலும் ஆரையாலும் கொண்டு துறப்பீக்கலாம். இஞ்சை ஆரைப் பிடிக்கிறது...?"

"அருந்ததி!"

"என்னப்பா! எப்ப பாத்தாலும் அருந்ததி அருந்ததி எண்டு உயிரை வாங்குறியள்..."

"மனுசன் எவ்வளவு களைப்போடை வாறானெண்டு கவலைப்படாமை ஏனப்பா எரிஞ்சுவிழுறாய்...?! அந்தக் காலத்திலை எண்டால் அடிச்சுப் புரண்டுகொண்டு வருவாய்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள்மட்டும் என்னவாம்.... தென்னங்கண்டுகளுக்குத் தண்ணி இறைக்கிறன் எண்டு துலாவிலை நிண்டு என்னைத்தானை பாத்தனீங்கள்..."

"எல்லாத்துக்கும் ஒண்டு வைச்சிருக்கிறாய். நான் போன விசயத்தைக் கேளன். பொடியன்ரை தாய் தேப்பனோடை எல்லாம் பேசி நாள் வைச்சாச்சு. கலியாணத்துக்கு இன்னும் ஒரு மாதம்தான் கிடக்கு."

"கலியாணச் செலவெல்லாம் ஆரப்பா...?"

"ஆரோ...? நாங்கள்தான்!"

"ஏனப்பா ஓமெண்டு சொன்னனீங்கள்?"

"நல்ல கதையிது. அம்பிகா ஆர்...? இந்த அருளம்பலத்தின்ரை ஒரே மேள்... இந்த அருளம்பலத்தின்ரை வீட்டுக் கலியாணம் எண்டால் எப்பிடி இருக்கும் எண்டு செய்து காட்டப்போறன். அதைப் பாத்துப்போட்டு மற்றாக்களின்ரை கலியாண வீடுகளிலை, 'இதென்ன கலியாணம். அருளம்பலம் வீட்டுக் கலியாணம்போலை வருமே?' எண்டு ஒவ்வொருத்தனும் கதைக்கவேணும்..."

"மேளின்ரை கலியாணத்தை நடத்திப் பேரெடுக்கலாம் எண்டு பாக்கிறியள். பெரிய எடுப்பெல்லாம் எடுக்காதீங்கோ. எதுக்கும் விரலுக்கு ஏத்த வீக்கம் வேணும்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எல்லாத்துக்கும் அபசகுனம்மாதிரி ஒவ்வொண்டு சொல்லிப்போடுவாய். கலியாணக் 'காட்' பெரிய 'சைஸ்'ஸிலை அடிக்க வேணும். ஒரு பக்கத்திலை மாப்பிளையின்ரை கலர்படம். மற்றப் பக்கத்திலை அம்பிகான்ரை படம். கடைசிப் பக்கத்திலை சம்பந்தியின்ரை படமும் எங்கடையும். ரண்டு செற் மேளம். ரண்டு வீடியோ. எதிரெதிராய் ரண்டு மணவறை. மூண்டு வேளைச் சாப்பாடு. பதினைஞ்சுவகைப் பலகாரங்கள்."

"நீங்கள் எனக்குத்தான் வேலை காட்டுறியள்!"

"எல்லாம் 'ஓடர்' பண்ணினால் வந்து குவியும்.... பொம்பிளையும் மாப்பிளையும் மண்டபத்துக்குப் போற வழியெல்லாம் பூமாரி பொழிய வேணும்..."

"றோட்டிலை குப்பை போட்டால் குற்றமெல்லே..."

"தண்டனையைக் காசாய்க் கட்டலாம். காசு எவ்வளவு போனாலும் பறுவாயில்லை. இது அருளம்பலத்தின்ரை கலியாண வீடு. இப்பிடி ஆராலையும் நடத்தேலாதெண்டு எல்லாரும் கதைக்க வேணும்...!"

தலையில் துண்டுடன் கல்யாண மண்டபப் படிக்கட்டில் தலைகுனிந்து அமர்ந்திருந்தார் அருளம்பலம் அண்ணர்.

"எல்லாரும் என்னைப்பற்றிக் கதைக்க வேணும் எண்டு ஆசைப்பட்டனே.... கதைக்க வைக்கப்போறாளே என்ரை மேள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொம்பிளையைப் படம் எடுக்கவேணும் எண்டு உள்ளை போனான் வீடியோத்தம்பி. என் அழகை அணுவணுவாக இரசித்துப் படம் எடுத்தவர்தான் எனக்கேத்தவர் எண்டு எழுதி வைச்சுப்போட்டு வீடியோத் தம்பியுடன் கம்பி நீட்டிவிட்டாளே என்ரை மேள்..."

கலியாணமண்டபத்தில் ஏற்பட்ட குசுகுசுப்புக்கள் நாளை ஜேர்மனியிலுள்ள ஒவ்வொரு தமிழ் வீடுகளிலும் பேசப்படலாம்.

அந்தவகையில் அருளம்பலம் அண்ணரின் பெயரும் பிரபலமாகிவிட்டதுதானே?!

பெவுக்னிஸ் விசா – அகதியாக வந்தவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் வழங்கப்படும் தற்காலிக வதிவிட அனுமதி.
சோசல்காசு – சமூக உதவிப் பணம்
மார்க் – ஜேர்மன் நாணயம்
மைன லிப்லிங் – எனது அன்பானவரே
வானோவ் – புகையிரத நிலையம்
சோசல்காரன் – சமூகசேவை அதிகாரி
அவுஸ்லாண்டர் பொலிஸ் – வெளிநாட்டவருக்கான பொலிஸ்
சுவுடு – ஜேர்மன் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றின் பெயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகத்தில் அரும்பிய ஆரூடம்

முடிவு ஆரம்பம், ஆரம்பம் முடிவு. ஆக்கம் அழிவு, அழிவு ஆக்கம். இரவு பகல், பகல் இரவு. ஒன்றின் எல்லையைத் தொட்டவாறு அதன் எதிர்மறையின் எல்லை. இந்த எல்லைகளின் விரிவும் சுருக்கமும் ஒரு உயிரினது சூழ்நிலையின் போக்கைமட்டுமல்ல, மொத்தத்தில் உலகினது போக்கையே நிர்ணயிக்கின்றது. ஒவ்வொன்றின் முடிவும் தோற்றமும் வித்தியாசமானவை. அதேபோல் ஒன்றின் ஆக்கம் மற்றையதின் ஆக்கத்தில் இருந்து வேறுபட்டது. அதேபோல் எல்லா இரவுகளும் ஒரேமாதிரியானவையல்ல. பகலும் அவ்வாறே. அளவால் தன்மையால் வேறுபட்டவை. ஆனால் எல்லாம் ஆரம்பம்தான். முடிவுதான். ஆக்கம்தான் அழிவுதான். இரவுதான் பகல்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய நிகழ்வுகளின் முன்னால் இன்பம் துன்பம், துன்பம் இன்பம்– இவை சர்வசாதாரணம்.

ஆனால் இந்தச் சாதாரண சங்கதிகளுக்குள் தமது வாழ்க்கையையே அடகு வைத்த, உலகின் நியதிகளுக்குப் பயந்து முடங்கும் மனித உயிர்கள்தான் எத்தனை?

இவர்கள் வாழப் பிறந்தவர்கள்.

வாழவெனக் கருவில் உருவாகிச் சதையாகி அவயவங்களால் அலங்கரிக்கப்பட்டு பாசக்கரங்களால் பற்பல எதிர்காலத் திட்டங்களைச் சொல்லிச் சொல்லியே வளர்க்கப்பட்டவர்கள். ஆனால் இந்தச் சிலரால் ஏன் வாழ முடியாமல் போகிறது? ஏன் வாழ்க்கையோடு போராடி வெல்ல முடியவில்லை?

இவர்களும் வாழப் பிறந்தவர்கள். ஏன் இவர்களால்மட்டும் தோல்வியையே சந்திக்க முடிந்தது? யாரால் தோற்கடிக்கப்பட்டார்கள்? தங்களால்தான். தாங்களே தங்களைத் தோற்கடித்து வாழ்வைத் தொலைத்தவர்கள்....

அதோ....

ஜேர்மனியில் ஒரு நகரம். தொழில் வளர்ச்சியில், நாகரீகத்தில் முன்னேறிய நகரம். எங்கு நோக்கினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றத்தையே எடுத்தியம்பும் செயற்பாடுகள். அதையும் தாண்டித் தபாற்கந்தோர்ப் பக்கமாக பார்வையைத் திருப்பினால் சற்றுத் தள்ளிப் பலமரங்கள் பசுமைகளால் குளுமையை அள்ளி வீசியவாறு அடர்ந்திருக்க, சிறுவர்களுக்குக் களிப்பூட்டவெனச் சில விளையாட்டுச் சாதனங்களைத் தன்னகத்தே அடக்கியவாறு ஒரு அழகிய பூங்கா. அந்த நகரத்தின் மிகப் பெரிய பொழுதுபோக்குப் பூங்கா அது. அதனுள் ஓங்கி உயர்ந்து கிளைகளைப் பரப்பியவாறு இறுமாந்து நிற்கும் ஒரு வயதான உறுதிமிக்க மரம். அந்த மரத்தின் பலமான கிளை ஒன்றில் இறுகப் பிணைக்கப்பட்ட நைலோன் கயிறு.

தலைகீழாகத் தொங்கிய அக் கயிற்றின் மறுமுனை கழுத்தை நெரிக்க, பிளந்திருந்த வாய்வழியாக நாக்கு வெளியே தள்ளியவாறு ஒரு உடல் அசைந்தாடுகிறது. அந்தச் சடலம் தன்னை ஒரு இலங்கையனின் உடல் என அடையாளம் காட்டவெனப் பல குறியீடுகளைக் கொண்டிருந்தது.

சுற்றிலும் நீல நிற வெளிச்சத்தை மினுக்கியவாறு பச்சைநிறப் பொலிஸ்காரர்களும், சிவப்புநிற அம்புலன்ஸ் வண்டிகளும். வேடிக்கை பார்க்கவெனச் சூழ்ந்த பலநூறு மக்கள் கூட்டம். அவர்களோடு முண்டியடித்துக் கொண்டு கடமையைக் கவனிக்கும் பத்திரிகை நிருபர்களும் புகைப்பட நிபுணர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையைப் பொறுத்தவரையில் ஒரு மரமும் அதில் தொங்கும் கயிறும் பிணமும் பழசு. ஆனால் ஜேர்மனிக்கு இந்த மரத்தில் அசையும் உடல் புதிது. அதுவும் பிரபலமான பொதுப்பூங்காவில் ஒரு அந்நிய நாட்டவனின் கொடூரமான உயிர்த்துறப்பு.

சுற்றிலும் ஒரே பரபரப்பு.

சில முதியவர்களின் பயம் கலந்த அலறல் ஒலிகள்.

பிள்ளைகளின் கண்களைப் பொத்தியவாறு அப்பால் விலகி ஓடும் தாய்மார்கள்.

முகம் வியர்க்க கண்கள் மேலே செருக ஒரு ஜேர்மன் மாது மயங்கி விழ, அவளைச் சுமந்தவாறு விரைந்தது சிவப்புநிற வண்டியொன்று.

"சைஸ அவுஸ்லாண்டர்...."

"சாவதற்கு ஜேர்மனிக்கா வர வேண்டும்...."

"கறுப்பன்... எமது தந்தைநாட்டை அசிங்கப்படுத்தி விட்டான். வீதியைக் குப்பையாக்கினார்கள். புல்லை மிதித்தார்கள். பொது இடங்களில் துப்பினார்கள்.... இப்போது பொது இடத்தையே மயானமாக்குகிறார்கள்...."

"எல்லோரையும் துரத்தவேண்டும். இது ஜேர்மனியரின் நாடு...."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சற்றுப் பொறு நண்பனே.... அந்த உடலின் வாயில் இருந்து வழியும் இரத்தத்தைப் பார். சிவப்பு.... சிவப்பு.... எமது நாட்டுக் கொடியிலும் சிவப்பு உள்ளது."

"அதற்காக இப்படியா.... உயிரின் பெறுமதியே ஒரு நைலோன் கயிற்று முடிச்சில் என்பதுபோல்.... காட்டு மிராண்டித்தனம்...."

அந்த உடல்.... தெரிகிறதா?

இலங்கையன்.

அகதியாக அடைக்கலம் தேடிவந்து நாதியற்று ஒரு நகரத்தில் சவமாகக் கிடக்கும் தமிழன். தனக்கென நாடு ஒன்றில்லாத இலங்கைத் தமிழன். கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக ஜேர்மனியில்தான், அந்த நகரத்தில்தான் வாழ்கிறான்.

இப்போது தெரிந்திருக்குமே?!

அந்த உடலின் பெயர்தான் அமரர் சந்திரன்.

"ஏன் இப்பிடிச் செய்தனி? இத்தினை வருசமாய் இந்த அகதி முகாமிலை ஒண்டாய் வாழுறம். ஒருத்தருக்கு ஒரு பிரச்சினை எண்டால் மற்றவர் உதவி செய்யுறம். ஒருத்தனுக்கு வருத்தமெண்டால் மற்றவன் ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக்கொண்டு போறதிலை இருந்து சாப்பாடு கொடுக்கிறதுவரை கவனிக்கிறான். இப்பிடி ஒருத்தருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருத்தர் எவ்வளவோ உதவியாய் இருக்கேக்கை நீ ஏன் இப்பிடிச் செய்தனி?"

"இலங்கையிலை திக்குத்திக்காய் வாழ்ந்து ஜேர்மனிக்கு வந்தம். இந்த அகதி முகாமிலை ஒருத்தரை ஒருத்தர் அறிமுகப்படுத்திக் கொண்டம். பாசை தெரியாமைக் கூட்டம் கூட்டமாய் 'ராத்தவுஸ்'க்கும் கடையளுக்குமாய் அலைஞ்சு திரிஞ்சம். ரின் இறைச்சி எண்டு நினைச்சு நாய்ச் சாப்பாட்டைக்கூட வாங்கிக்கொண்டு வந்தம். கொஞ்சக்காலம் போகப் பழைய சைக்கிள்களை வாங்கி ஓடித் திரிஞ்சம். வேலை தேடினம். குடிச்சு வெறிச்சம். 'பேர்த்டே' கொண்டாடினம். 'பொலிபோல்', 'புட்போல்' விளையாடினம். கார் வாங்கினம். இப்ப கொஞ்ச நாளாய் பெஞ்சாதி பிள்ளையள் எண்டு குடும்பங்களைக் கூப்பிடத் தொடங்கிவிட்டம். இப்பிடி ஒருத்தருக்கொருத்தர் ஒரு குடும்பமாய் வாழ்ந்து மற்றவற்றை முன்னேற்றத்துக்கு உதவி செய்து வாழேக்கை.... ஒருத்தரிட்டையும் சொல்லாமை இப்பிடி ஏன் செய்தனீ....? உனக்கு அப்பிடி என்ன பிரச்சினை சந்திரன்?!"

"எல்லாரும் எனக்கு எதிரியாயிட்டாங்கள். ஒட்டி நிண்டு கழுத்தறுக்கத் திரியுறாங்கள்.... ஆரை நம்புறது எண்டு தெரியேல்லை.... உனக்குத் தெரியாது. போனமாதம் ஒரு சனிக்கிழமை.... இரவு எட்டு மணியிருக்கும்..... எல்லாரும் 'புட்போல் மாட்ச்' எண்டு போவிட்டாங்கள். நான் மட்டும்தான் தனிய.... படுத்திருந்தனான்.... ஒரு கார்வந்து நிக்கிற சத்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுது. யன்னலாலை எட்டிப் பாத்தன்.... நாலைஞ்சு பேர்.... கையளிலை கத்தி.... பொல்லு.... கம்பி.... என்னைத்தான்.... ஓமோம்.... என்னைத்தான் அடிக்க வந்தவங்கள்.... நல்ல காலம். நான் கட்டிலுக்கடியிலை ஒளிச்சதாலை தப்பிச்சன்.... அறையுக்கை வருவாங்கள் எண்டு பாத்தன். வரேலை. கொஞ்ச நேரத்தாலை கார் போன சத்தம் கேட்டுது. இனியும் தனிய அங்கையிருக்க எனக்கென்ன விசரே.... பேசாமை வேறை 'சிற்றி'க்குப் போவிட்டன்...."

"என்னடா கதை உது?! உன்னை அடிக்க ஏன் காரிலை வரவேணும்.... கண்டதை நினைச்சு மனதைக் குழப்பாதை....!"

"இல்லை.... நீ நம்பாய்.... எனக்கு நல்லாய்த் தெரியும். என்னைத்தான் அடிக்க வந்தவங்கள்...."

"காரிலை வந்தாக்களைத் தெரியுமே?"

"தெரியாது.... ஏன் தெரியாத ஆக்கள் வரப்படாதே? ஏவல்.... ஏவல்.... ஏவி விட்டிருக்கிறாங்கள்.... பக்கத்துக் கட்டிலிலை படுத்திருக்கிறவனையே நம்ப முடியேலை. நித்திரை கொள்ளேக்கை என்ன செய்வானோ தெரியாது.... அதாலைதான் கட்டிலுக்கடியிலை கம்பி ஒண்டு வைச்சிருக்கிறன்.... கிட்ட வந்தால் மண்டை ஓடு வெடிக்க ஒரே போடு...."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சந்திரன்! நீ உன்ரை பாட்டிலை எதையோ கற்பனை பண்ணிக் கொண்டு சொல்லாமைக் கொள்ளாமை எங்கையோ போவிட்டு, இப்ப வந்து கதை அளக்கிறாய். வேலைத் தலத்துக்குக்கூட அறிவிக்கேலை. இந்த நேரம் வேலையும் போயிருக்கும்...."

"வேலை.... கண்டறியாத வேலை.... என்னைக் கொல்ல எல்லாரும் திட்டம் தீட்டுறாங்கள். நான் எங்கையோ போய் ஒளிஞ்சிருந்து போட்டு வந்திருக்கிறன். நீ என்னடாவெண்டால் வேலையைப்பற்றிக் கதைக்கிறாய்...."

"ஆர் உன்னைக் கொல்லப் போறவன்?"

"இந்த முகாமிலை இருக்கிற எல்லாரும்...."

"நானுமா....?!"

"நீ இல்லை. மற்ற எல்லாரும்...."

"நம்ப முடியேலை சந்திரன்.... நானும் உன்னோடை இந்த அகதி முகாமிலைதான் இருக்கிறன். இன்னும் பத்துப் பேர். ஒரு குடும்பம். இப்பதான் மனுசியைக் கூப்பிட்டுக் குடும்பமாயிருக்கிறான். அந்தக் குடும்பமும் பிறிம்பாக இருக்கவெண்டு வீடு தேடுது. கிடைச்சவுடனை போவிடும். இந்த முகாமிலை எங்களைத் தவிர வேறை வெளிநாட்டவரும் இல்லை. நீ என்னடாவெண்டால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலையைப்பற்றிக் கதைக்கிறாய்.... கனவு கினவு கண்டனியே?"

"நம்பு.... என்னை நம்பு.... நான் சொல்லுறது உண்மையடா. உவங்கள் எல்லாம் பசுத்தோல் போத்தின புலியள்.... சந்தர்ப்பத்துக்காகக் காத்திருக்கிறாங்கள்.... எம்பிட்ட இடத்திலை மாட்டிப் போடுவாங்கள்...."

"ஏன்.... என்ன காரணம்?"

"காரணம்.... இந்த முகாமுக்கை எண்டைக்கு ஒரு பெண் வந்தாளோ.... அதுதான்.... அதுதான் காரணம்!"

"அந்தக் குடும்பமோ....?"

"ஓம்.... உங்கள் எல்லாருக்கும் பகல் வேலை.... எனக்கு இரவிலை. பகல் வேளையிலை இங்கை நானும் அவளும்தான்.... அதாலை சந்தேகம்....!"

"ஆர் சந்தேகப்படுறது....?"

"புருசன்காரன்.... அவனோடை சேர்ந்து மற்றவங்களும் என்னைக் கொல்ல நிக்கிறாங்கள்...."

"எட சந்திரன்.... அவனும் அவளும் ஊரிலையே காதலர்கள். இப்பதான் அவளை இங்கை கூப்பிட்டிருக்கிறான்.... அவளைப் பார்த்தால் எவ்வளவு நல்ல குணமானவள்போலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கு.... அவனும்தான். நீ சும்மா கதைச்சுக் கரைச்சலை விலைக்கு வாங்காதை...."

'நீயும் எனக்கு எதிரியா?' என்பது போலிருந்தது சந்திரனின் பார்வை.

சந்திரனின் வார்த்தைகளில் ஏதோ ஒரு நெருடல் தொனித்ததை உணர முடிந்தது.

சந்திரனின் பிரச்சினையைப்பற்றி எவரிடமாவது ஆலோசனை கேட்க வேண்டும். சிலவேளை அவனுடைய பிரச்சினை உண்மையானதாக இருக்குமோ? ஒருவன் அடிக்க நினைக்கலாம் அல்லது கொல்ல முயற்சிக்கலாம். ஆனால் 'எல்லோரும் எதிரி' என்று அவன் கூறும்போது நம்ப முடியவில்லை.

"சந்திரனோ....? அவன்ரை கதையை விடு. இப்பிடித்தான் எல்லாரிட்டையும் சொல்லிக் கொண்டு திரியுறான்.... இதாலை பாவம் அந்தக் குடும்பத்துக்குத்தான் கெட்டபேர். இப்ப உன்னோடை கதைக்கேக்கை நீமட்டும்தான் நல்லவன் என்பான். பேந்து என்னோடை கதைக்கேக்கை நீயும் தன்னைக் கொல்லத் திரியுறாய் என்பான்...."

"ஏன் இப்பிடி?"

"அவனுக்குள்ளை ஒரு தாழ்வு மனப்பான்மை...."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விசர் என்கிறியோ....?"

"இல்லை. இது சட்டையைப் பிச்சு மண்டையைப் பிசையுற விசயம் இல்லை. மனசை விடுற விசயம்.... ஒரு வகையான மனோவியாதி.... தன்னோடை இருக்கிறவங்கள் எல்லாரும் குடும்பமாகேக்கை தான்மட்டும் தனிச்சுப் போவனோ எண்ட பயம்.... முப்பத்தைஞ்சு வயசாச்சு.... இனி ஒரு வாழ்க்கை அமையுமோ எண்ட ஏக்கமாய்க்கூட இருக்கலாம்...."

இப்படி இருக்குமோ....?

ஒவ்வொருவனின் பரிவைப் பெறுவதற்குத்தான் இத்தகைய கதை அளப்போ? மனித வாழ்வில் தினமும் புதுப் புது அனுபவங்கள்.... அதனால் எழும் பாதிப்புக்கள், தாக்கங்கள். இவற்றின் தாக்குதலால் பலவீனமடையும் மனித மனங்களில் ஒன்றுதானா சந்திரனின் மனம்? இவ்வாறே போனால் அவனது மனோவியாதி வளர்ந்து அவனையே அழித்துவிடும்.

இதற்கு மருந்து....?!

மனம்திறந்து பேசிப் பார்க்கலாம்!

முகாமில் சந்திரனைக் காண்பதே அரிதாகிவிட்டது.

மாலைவேளைகளில் நகரத்தின் நடுவே உள்ள பெரிய தபாற் கந்தோருக்கு அருகிலுள்ள பொழுதுபோக்குப் பூங்காவில் (Freizeit Park) தினமும் 'பியர்' போத்தல்களுடன் இருப்பதாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி. சந்திரன் இப்பொழுதெல்லாம் தனிமையை நாடத் தொடங்கிவிட்டான். நெருங்கிச் சென்றவர்களையும் அவனாகவே விலத்த ஆரம்பித்தான்.

"சந்திரன்! உனக்கொரு அண்ணன் ஊரிலை இருக்கிறார். அவருக்கு ரண்டு பிள்ளையள். முந்தி மாஸ்டராக இருந்தவர். இப்ப வேலை இல்லாமை உன்ரை உதவியிலை வாழுறார். வயசான அப்பா அம்மா.... உன்னை நம்பி வெளிநாட்டுக்கு வரவெண்டு கொழும்பிலை வந்து நிற்கிற உன்ரை தம்பி.... இவளவு பேரையும் மறந்து ஏன் இப்பிடித் திரியுறாய்?"

வெறுமையாகப் பார்த்தான்.

"அதுகளுக்கு உன்னைவிட்டால் வேறை ஆர் இருக்கினம்... நீ இருக்கிறாய் எண்ட நம்பிக்கையிலைதானை வாழுதுகள். ஏதாலும் ஒரு வேலையைத் தேடிச் செய்யாமல் ஏன் இப்பிடி அழியுறாய்?"

"வேலை....?" என்றவாறு வெறுப்புடன் பற்களைக் கடித்தான்.

"எத்தினையோ வேலைக்குப் போனன்.... ரண்டு நாள்... மூண்டு நாள்... பேந்து எல்லாரும் என்னோடை கதைக்கவே பயப்பிடுறாங்கள்.... என்னைக் கண்டவுடனை தூர நிக்கிறாங்கள்...."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன்....?"

"நான் வேலைக்குப் போற இடத்திலை எல்லாம் உவங்கள் எனக்கு விசர் எண்டு ரெலிபோன் அடிச்சுச் சொல்லுறாங்கள்."

"நீயாய் எதையோ கற்பனை பண்ணுறாய். ரெலிபோன் அடிச்சுச் சொன்னாப்போலை நம்புவாங்களே.... டேய் சந்திரன்! சும்மா தேவையில்லாததுகளை நினைச்சு உன்னையும் உன்ரை சொந்தங்களையும் பாழாக்கிப் போடாதை!"

"உனக்கென்ன.... சொல்லிப் போட்டாய்.... நீகூட அவங்கடை பக்கம்தான் கதைக்கிறாய்.... உன்னையும் நம்பேலாது....!" என்று முகம் சிவக்கக் கூறியவன் தொடர்ந்தான்.

"நீ இனிமேல் என்னோடை கதையாதை. நீயும் அவங்கடை ஆள். எனக்குத் தெரியும் என்னைப் பார்த்துக் கொள்ள....!"

"நான் உன்ரை எதிரியாயே இருந்துபோட்டுப் போறன். ஆனால் ஒண்டு.... நீ இன்னும் கனகாலத்துக்குச் சிறப்பாய் வாழவேண்டியவன். முப்பத்தைஞ்சு வயது பெரிய வயசில்லை. காலாகாலத்திலை ஒரு கலியாணத்தைக் கட்டி உருப்படுற வழியைப் பார்...."

சந்திரனின் தனிமையானபோக்கு அவனது வாழ்க்கையையே சூன்யமாக்கிவிடும் என்பது நடைமுறையில் காணும் சாதாரண நிகழ்வு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனின் தனிமையைப் போக்க மிகவும் எளிதான வழி, உடனே அவனுக்கொரு வாழ்க்கைத் துணையைத் தேடுவது.

முடியுமா?!

முயற்சிப்பதில் தவறென்ன?!

அவனுடைய பெற்றோர், சகோதரங்களுடன் தொடர்பு கொள்ளலாமா?

"மடையா, உனக்கேன் தேவையில்லாத வேலை? அதுகள் நாட்டிலை வாழவழியில்லாமை இவன்ரை உதவியை எதிர்பார்க்குதுகள். இந்த நிலைமையிலை அதுகள் எங்கை பொம்பிளை தேடும்.... அப்பிடித் தேடினாலும் இங்கை கூப்பிடுறதெண்டது எவ்வளவு கஷ்டமான காரியம்...."

"அப்ப இங்கையே ஒண்டைத் தேடினால்....?"

"ஆரை.... எங்கை.... கார் இருக்கோ.... சொந்தவீடு இருக்கோ.... வேலை செய்யிறாரோ.... இல்லாட்டிக் காலவரையற்ற விசா கிடக்கோ.... சரி போகட்டும். வங்கியிலை எவ்வளவைத் தாண்டும்?"

"என்னடா இது....?!"

"இப்பிடித்தான் கேப்பினம்...."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்ப இதுக்கு வழி?"

"இந்த உலகத்திலை ஒருத்தனுக்கு எண்டு ஒருத்தி எங்கையோ பிறந்துதான் இருக்கிறாள்.... சமய சந்தர்ப்பம் கூடி வரேக்கை இதுகள் எல்லாம் சரிவரும்...."

"அதுமட்டும் சந்திரன்ரை நிலை?"

ஆடியடங்கும் வாழ்க்கையடா....

ஆறடி மண்ணே சொந்தமடா....

அந்தப் பூங்கா.... அந்த அடர்த்தியான மரம்.... எல்லாம் அப்படியே.

ஆனால் சந்திரன்....?

வாழ்வையே தம் மன ஆரூடங்களின்படி மாற்றியமைக்கும் சந்திரன் போன்ற இளைஞர்களால் மனிதத் தோற்றத்தின் காரணம் வெறுமையாக அர்த்தப்படுகிறதோ?

சைஸ அவுஸ்லாண்டர் – வெளிநாட்டுச் சனியன்
ராத்தவுஸ் – கச்சேரி (அலுவலகம்)
சிற்றி – நகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரிசல்

அன்று ஒரு கலைமன்றத்தின் ஆண்டுவிழா.

மேடையில் ஒரு வெள்ளைக்காரப் பெண்மணி, கழுத்தில் தொங்கிய மலர்மாலை கொடுத்த பூரிப்புடன் வெளிநாட்டவர்களுக்குச் சார்பாக உரையாற்றிக் கொண்டு இருந்தாள்.

அவளின் பேச்சில் தமக்கேதோ பல சலுகைகள் கிடைத்துவிட்டன அல்லது கிடைத்துவிடும் என்ற மாதிரிக் கை தட்டி ஆரவாரம் செய்து கொண்டிருந்தார்கள் அங்கு கூடியிருந்த தமிழர்கள்.

பெண்கள்கூட அக்கம்பக்கத்தில் மினுமினுக்கும் ஆடை ஆபரணங்கள் தங்கள் அணிகலன்களிலும் பார்க்கத் தகுதி கூடியதா குறைவா என்ற ஆராய்ச்சியை ஒத்திவைத்துவிட்டு அவளின் பேச்சில் அக்கறையாக இருந்தார்கள். ஏனெனில் ஜேர்மனியில் வருடாவருடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டவருக்காகவே உருவாக்கப்படும் புதுச் சட்டங்களைப்பற்றிக் கூறிப் பயமுறுத்திவிடுவாளோ என்ற பதட்டம்.

இவ்வளவு காலம் இங்கிருந்துவிட்டு தாயகத்துக்குப் போகவேண்டி நேரிட்டால் பதட்டமாகத்தானே இருக்கும்?!

அங்கே கிணற்றில் தண்ணீர் அள்ளத்தான் முடியுமா?

தினம் தினம் இறைச்சி இல்லாமல் வாழத்தான் முடியுமா?!

ஏன் இவ்வளவு?!

திராட்சைப்பழம் வேண்டுமானால்கூட ஊரிலிருந்து டவுனுக்குத்தானே போக வேண்டும்?!

அப்போது மண்டபத்துள் நுழைந்த கோபாலைப் பார்த்ததும் வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டான் கேசவன்.

கேசவனின் முகமாற்றத்தைக் கவனித்த அகல்யாவுக்கு மனம் சங்கடப்பட்டது.

ஒரு சிறு சம்பவம் கேசவனையும் கோபாலையும் பரம எதிரிகளாக்கிய விந்தையை அகல்யாவால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ தமிழர்கள் மத்தியில் ஏற்படும் சண்டை சச்சரவுகளைப் பார்த்து, உயிர் வாழத் தஞ்சம் கேட்டுவந்த நாட்டில் தங்களுக்குள்ளேயே பிரச்சினைப்பட்டு, ஏன் ஒற்றுமையில்லாமல் இருக்கிறார்கள் என்று புலம்பெயர்ந்த தமிழர்கள்மீது ஆத்திரப்பட்டிருக்கிறாள்.

ஆனால் தற்போது அவளின் கண் முன்னாலேயே ஒரு சிறு விசயத்துக்காக கணவன் கேசவனுக்கும் கோபாலுக்கும் பிரச்சினை ஏற்படும் எனக் கனவில்கூட எதிர்பார்க்கவில்லை.

கடந்த எட்டு வருடங்களுக்கும் மேலாக கேசவனும் கோபாலும் நெருங்கிய நண்பர்கள். ஆபத்து அந்தரமென்றால் ஒருவருக்கு ஒருவர் வலியச்சென்று உதவி செய்வதில் முன்னிற்பார்கள்.

கேசவன் ஜேர்மனிக்கு வந்து நான்கைந்து வருடங்களுக்குப் பின்புதான் ஒரு ஏஜென்சிமூலம் அகல்யா வந்தாள்.

"அகல்யா! கோபால் மட்டும் இல்லையெண்டால் உன்னை நான் கலியாணமே கட்டியிருக்க ஏலாது. ஏஜென்சிக்கும் டெலிபோனுக்கும் காசில்லாமை எத்தினை பேரிட்டை அலைஞ்சிருப்பன். எல்லாரும் பொறுப்புக்குப் பவுண் இருக்கே, பவுண் தந்தால்தான் காசு தருவம் எண்டு கைவிரிச்சுப் போட்டினம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கோபாலிட்டை நான் காசு கேக்க விரும்பேலை. அவன் பாவம். குடும்பப் பொறுப்புள்ளவன். சகோதரங்களைக் கரை சேர்க்க ஏலாமைக் கஸ்டப்படுறவனை நானும் கஸ்டப்படுத்தக் கூடாதெண்டு கேக்கேலை!"

"அப்படியிருந்தும் நான் படட்பாட்டைப் பார்த்து பொறுப்பும் இல்லாமை வட்டியும் வேண்டாமெண்டு வலிய வந்து உதவி செய்தவன்."

இப்படித்தான் கோபாலை அகல்யாவுக்கு அறிமுகம் செய்தான் கேசவன். அந்த அறிமுகமே அவளுக்குக் கோபாலிடம் தனி மரியாதையை ஏற்படுத்தியிருந்தது.

ஒருமுறை கேசவனின் ஒரு சில நண்பர்கள் வீட்டுக்கு வந்திருந்தனர்.

அரசியல், உலக நடப்புக்கள் என்று உரையாடல் மணித்தியாலங்களை விழுங்கிக் கொண்டிருந்தது. அவர்களில் மூர்த்தி என்ற ஒருவன். ஜேர்மனிக்கு வந்து பல வருடங்களாம்.

வார்த்தைக்கு வார்த்தை 'டேய் கேசவன், வாடா கேசவன், போடா கேசவன்' என்று மரியாதையில்லாமல் விளித்துக் கொண்டிருந்தான்.

நண்பன்தானே, 'வாடா, போடா' எனக் கதைப்பது இயற்கைதானே என அவளால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் மூர்த்தியின் வார்த்தைகளில் நட்பின் நேசத்திற்குப் பதிலாக ஏதோ ஒரு அதிகாரம் தொனிப்பதை அவளால் உணர முடிந்தது.

ஒருமுறை மூர்த்தியைத் தனியே சந்திக்க நேரிட்டபோது மனதில் தோன்றியதைத் தெளிவாகக் கூறிவிட்டாள்.

"நீங்களும் அவரும் நண்பர்களாய் இருக்கலாம். ஆனால் எனக்கு முன்னாலை அவரை வாடா போடா எண்டு கூப்பிடாதையுங்கோ. எனக்குப் பிடிக்கேலை."

மூர்த்தி பதில் ஏதும் சொல்லாமல் மௌனமாகச் சென்றுவிட்டான்.

விசயம் அறிந்த கேசவன் துள்ளிக் குதித்தான்.

"நீ அவமானப்படுத்திப் போட்டாய் அகல்யா. எங்களுக்குள்ளை ஆயிரம் இருக்கும். அதை ஏன் நீ கவனிக்கிறாய்?"

அப்போது கோபாலும் அங்கிருந்தான்.

"இதோ பாருங்க கோபால் அண்ணை! நான் சொன்னதிலை என்ன பிழை? இவர் பலபேருக்கு முன்னாலை கை கட்டிச் சேவகம் செய்யலாம். பலபேருடன் சினேகிதமாய் இருக்கலாம். ஆனால் வீட்டிலை என்னுடைய கணவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத் தலைவன். தலைவனுக்குக் கிடைக்க வேண்டிய மரியாதை கிடைத்துத்தான் ஆகவேணும்!"

"என்னை ஜேர்மனிக்குக் கூப்பிட எவ்வளவோ கஸ்டப்பட்டு இருக்கிறார். உங்களைத் தவிர வேறை ஆர் உதவி செய்தவை? ஆபத்துக்கு உதவாதவை அதிகாரமாய் என்ரை கணவரை நடத்துறதை எப்பிடி என்னாலை பொறுத்துக் கொள்ளமுடியும்? இண்டைக்கு நாங்கள் சேர்ந்து வாழுறத்துக்கு நீங்கள் ஒருத்தர்தான் உதவியிருக்கிறியள். அதனாலை உங்களை என்ரை அண்ணர் ஸ்தானத்திலை வைச்சிருக்கிறன். அண்ணை என்ரை கணவரை உரிமையோடை வாடா போடா எண்டு கூப்பிடுறதைப்பற்றி நான் கவலைப்படமாட்டன்" என்று நன்றி உணர்வுடன் கூறிய அகல்யாவைப் பாசத்துடன் நோக்கினான் கோபால்.

இவ்வளவுதூரம் குடும்பத்தில் ஒருவனாகப் பழகிய கோபாலுக்கும் கேசவனுக்கும் இடையே பிளவு ஏற்பட அன்று நிகழ்ந்த சம்பவம்தான் காரணமாயிற்று.

மாலை ஐந்து மணி.

தொலைபேசி மணி அலறி அழைத்தது.

"நான் கோபால் கதைக்கிறன். நீ செய்யுறது கொஞ்சங்கூட நல்லாயில்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னடாப்பா ஏறிப் பாயுறாய்?"

"நான் பாயேல்லை. நீதான் என்னை மறந்து பாயுறாய். ஹோட்டல் கூட்டுற வேலைக்கு ஏன் அந்த மாதவனைக் கூட்டிக்கொண்டு போனனீ?! நான் வந்திருப்பன்தானே?!"

"அதைக் கேக்கிறியே? மாதவனுக்கு ஓமெண்டு சொல்லிப்போட்டன். அதிலை என்ன தப்பு?!"

"ஏன்.... நான் செய்யமாட்டனே? எனக்கு இப்ப வேலை இல்லை எண்டு உனக்கு நல்லாய்த் தெரியும். அப்பிடி இருக்கேக்கை என்னைவிட்டுட்டு அவனை ஏன் கொண்டு போறாய்?"

"இஞ்சை பார் கோபால். நீ வேலை இல்லாமை இருக்கிறது நினைவில்லாமை மாதவனை வேலைக்குக் கூட்டிக் கொண்டு போறதாய்ச் சொல்லிப்போட்டன். இனி சொன்ன சொல்லை எப்பிடி மாத்தேலும்?"

"எனக்கு அதைப்பற்றித் தெரியாது கேசவன். நான்தான் போன வருசம் மூண்டு மாதம் அந்தக் ஹோட்டலிலை உன்னோடை வேலை செய்தனான். இந்த முறையும் அந்த வேலை எனக்குத்தான் உரியது. அதாலை சொல்லுறன். மாதவனை நிப்பாட்டிப்போட்டு என்னைக் கூட்டிக்கொண்டு போ!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒமெண்டு சொல்லிப்போட்டு இல்லை எண்டு சொல்ல என்னாலை ஏலாது."

"அப்ப நான் நேரடியாய் ஹோட்டல் முதலாளியோடை கதைச்சுக் கொள்ளுறன்."

"என்னை மிஞ்சி அவன் ஆருக்கும் வேலை குடுக்கமாட்டான்!"

"அதையும் பாப்பம்."

கோபாலின் குரலில் கோபம் பொங்கிவழிந்தது.

"என்னத்தைப் பாக்கப் போறாய்?!"

"எனக்கில்லாத வேலையை அந்த மாதவன் எப்பிடிச் செய்வான் எண்டு பாப்பம். ஒரு ரெலிபோன் சொன்னது கேக்கும்!"

"ஓகோ களவாய் வேலை செய்யுறதைக் காட்டிக் குடுக்கப் போறியா? ச்சீ.... நீயும் ஒரு மனிசனே! இனிமேல் இந்த வீட்டுப் பக்கம் வராதை."

'ரிசீவரைப் படாரென அறைந்து வைத்தான்.

அன்றிலிருந்து கேசவனும் கோபாலும் எதிரிகளாகிவிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெலிபோனில் கூறியபடி கோபால் காட்டிக் கொடுக்கவில்லை.

ஏதோ ஆத்திரத்தில் பேசிய வார்த்தை அது. அதற்காக நல்ல நண்பர்கள் பிரிந்திருப்பது அகல்யாவுக்கு மனவருத்தத்தைத் தந்தது.

பழைய நினைவுகளிலிருந்து மீண்ட அகல்யா மேடையைக் கவனித்தாள்.

நாலு ஐந்து சிறுமிகள் பாடல் ஒன்றுக்கு அபிநயம் பிடிக்க முயற்சித்துக் கொண்டிருந்தனர்.

இந்த முயற்சியை மேடையேற்ற முதல் செய்திருக்கலாமே என்று எழுந்து நின்று ஓங்கிக் கத்தவேண்டும் போலிருந்தது.

அப்போது இரண்டு மூன்று இளைஞர்கள் திடீரெனக் கேசவனைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்களின் மேல் மதுவின்வாடை அமர்க்களமாக வீசியது.

"டேய் கேசவன். எங்கடை மன்றத்தைப்பற்றி 'மூளை' எண்ட சஞ்சிகையிலை என்னடா தாறுமாறாய் எழுதனீ?! பேனையும் பேப்பரும் கிடைச்சாப்போலை என்னத்தையும் எழுதலாம் எண்ட நினைப்போ? வாடா வெளியிலை. எழுதின கை எப்பிடி இருக்கெண்டு பாப்பம்" என்றவாறு ஒருவன் கேசவனின் 'சேட்'டைப் பற்றி இழுத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகல்யா பயந்து நடுங்கினாள்.

கூடியிருந்தவர்கள் விடுப்புப் பார்த்தார்களே தவிர, உதவிக்கு வந்து அவர்களைத் தடுக்கவில்லை.

அப்போது–

''டேய் விடுடா சட்டையை. அவன் உள்ளதைத்தானேடா எழுதினவன். கேசவனிலை தொட்டியெண்டால் குடலை எடுத்துப் போடுவன்" என்ற கர்ஜனை கேட்டு நிமிர்ந்து பார்த்தாள் அகல்யா.

அங்கே கோபால்!

அவர்கள் அங்கிருந்து அகன்றார்கள்.

ஆபத்துக்கு வலியவந்து உதவிய சகோதரனைக் கண்ட ஆனந்தத்தில் அகல்யாவின் கண்கள் கலங்கின.

கோபாலின் கையைப் பிடித்தபடி ஏதோ பேச முயற்சித்தான் கேசவன்.

அவர்கள் பேசட்டும். விட்டுவிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதில் என்ன தவறு?!

வெள்ளைத்தோல்கள், பழுப்புத்தோல்கள், கறுப்புத்தோல்கள் எனப் பலதரப்பட்ட பன்னாட்டு மக்கள் கூட்டம் கூட்டமாகத் தாறுமாறாக- அவசர அவசரமாக வாகனங்களோடு வாகனங்களாக- இயந்திரகதியில் இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

அது ஜேர்மனியிலுள்ள பிறேமன் என்னும் நகரின் பிரதான புகையிரத நிலையம்.

முன்வாசலில் வலப்புறமாக நிரையாக 'டக்சி'கள் ஒன்றன்பின் ஒன்றாக இடத்துக்காக முன்நகர- அதை ஒட்டிய தொலைபேசிக் கூண்டுகளின் பக்கத்தில் நிரம்பிவழியும் சைக்கிள்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பியர் ரின்களுடன் தள்ளாடிவந்த இரண்டு செம்பட்டைப் பரட்டைத் தலைகள் முரட்டுச் சப்பாத்துக் கால்களால் முன்னால் நின்ற சைக்கிள் ஒன்றை உதைத்து நெளித்து, தமது போதைக்குக் குறியீடு வைத்து நகர, சைக்கிள் உரிமையாளரின் வருகைக்காக அனாதையாய்க் கிடந்தது.

சற்றுத் தள்ளி இருந்த பெட்டிக்கடைகளில் இரண்டு பெண்கள் வியாபாரம் செய்வதில் தம்மை மறந்திருந்தார்கள். அந்தப் பெட்டிக்கடைகளொத்த சிற்றுண்டிச்சாலைகளின் முன்னால் உள்ள இரும்புப்பாதைகளில் 'கிறீங், கிறீங்' என்ற அபாய ஒலியால் மக்களை விலத்தியபடி, 'ட்ராம்' வண்டிகள் பாம்புகளாக நெளிந்து கொண்டிருந்தன.

தூரத்தே தெரிந்த 'மக்டொனால்'டின் விளம்பர எழுத்துக்கள் பசிக்காதவர்களையும் புசிக்கத் தூண்டியது. புகையிரத நிலையத்தின் முன்புறமிருந்த ஒன்றிரண்டு காவியேறிய வாங்கில்களில், சில வெள்ளைத்தோல்கள் அரைகுறையாகச் சிதைக்கப்பட்டுக் கண்டபடி நிறங்களைக் கடுமையாக அப்பிய தலைமுடிகளுடன் ஒருவர்மீது ஒருவர் உரசியவாறு, ஏதோ ஒருவித மயக்கநிலையில் உளறிக் கொண்டிருந்தனர்.

அவர்களுடனிருந்த ஒரு வயதான பெண்மணி, கையில் வைன் போத்தலொன்றை உயர்த்திக்காட்டி ஏதோ பாடலை உரத்த குரலில் சிதைத்தபடி, விகாரமாக உடம்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெளித்து ஆடுவதுபோல் பாவனை செய்து கொண்டு இருந்தாள்.

வேறு இரு இளம்பெண்கள் ஒருத்தியின் தோளை மற்றவள் தாங்கியபடி தள்ளாடிக் கொண்டிருந்தார்கள். அந்த நீல விழிக்கண்கள் மயங்கிவிடத் தயாரானவைபோல மேலே செருகிக் கொண்டிருந்தன.

அவர்களில் ஒருத்திக்கு வயது இருபதுக்குள்தான் இருக்கும். செந்நிறக் கூந்தல் ஒழுங்காக வாரிவிடப்படாமல், ஒற்றைக் காலில் பாதணிகூட இல்லாமல், கீழே விழுந்துவிடத் தயாராகிக் கொண்டிருந்தாள்.

அவளை உற்றுப் பார்க்க வேண்டும்போலிருந்தது.

பளிங்குக்கல்லில் செதுக்கப்பட்ட சிற்பம்போன்ற முகம். மாசு மருவற்ற கண்கள். மேலோட்டமாகப் பார்க்கையில் அப்பழுக்கில்லாத அழகுச்சிலை. திரும்பத் திரும்பப் பார்க்க வைக்கும் தோற்றம். ஆனால் மற்றவளின் பிடியில் தள்ளாடிக் கொண்டிருந்தாள்.

மற்றவள் அவளை எச்சரித்தாள்.

"அன்யா கவனம்.... சமாளித்துக் கொள்!"

"என்னால் முடியாது.... என்னால் நிற்க முடியவில்லை.... காற்றில் பறப்பதுபோலிருக்கிறது.... வீட்டுக்குக் கூட்டிப்போ! இப்படியே படுக்கவேண்டும் போலிருக்கிறது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உளறாதே... பொலீஸ் கவனிக்கிறாங்கள்! கோப்பி குடிப்போம். உனக்குச் சரிவரும்....!"

"இல்லை வீட்டை போவோம்....!"

"எப்படிப் போவது...? கையில் அவ்வளவு பணம் இல்லை. கோப்பிக்கு மாத்திரம்தான் போதும்!"

"இல்லை.... நான் - வீட்டுக்குப்போய்ப் படுக்கவேண்டும்."

"கொஞ்சம் பொறு.... மாக்கூஸ் வருவான். பணம் தருவான்."

"மாக்கூஸா...? அவனிடம் பணம் வாங்காதே! நேற்று என்னைக் கட்டிப் பிடித்து முத்தமிட்டான். சனியன்.... இதோ பார் காயத்தை.... அவன் ஒரு மிருகம்...!"

"அப்போ எப்படி வீட்டைபோவது...?" என்றவாறு போதை நிறைந்த விழிகளைப் பெரிதாக்கிச் சுற்றுமுற்றும் நோட்டமிட்டாள்.

அவளது விழிகள் என் விழிகளைச் சந்தித்தபோது நான் தலையைத் திருப்பிக்கொண்டாலும், செவிகள் என்னவோ அவர்களின் உரையாடலையே ஒட்டுக் கேட்க விழைந்தன.

"அந்தக் கறுப்பன் எங்களைத்தான் உற்றுப் பார்க்கிறான்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதற்கு முன் பெண்களைப் பார்த்திருக்கமாட்டான்!"

"சிலவேளை அவனிடமும் ஈயப்பொட்டலம் இருக்கும்... கேட்டுப் பார்ப்போம்...!"

அவர்கள் ஈயப்பொட்டலம் என்று கூறியது போதை மருந்தை என்பது எனக்குத் தெரியும். ஏற்கெனவே அந்தப் புகையிரத நிலையத்தின் முன் பகுதிகளில் சில ஆபிரிக்க இளைஞர்களும் ஜேர்மனிய இளம் யுவதிகளும் ஈயப் பொட்டலங்களைப் பரிமாறிக் கொள்வதைப் பார்த்திருக்கிறேன்.

"காசில்லை...!"

"காசில்லை என்றால் என்ன? படுக்கக் கேட்பான்...."

"சிலவேளை வெறும் ஈயச்சுருளைக் காட்டி ஏமாத்திவிடுவான். உள்ளே ஒன்றும் இருக்காது...!"

"அதுவும் சரிதான்...!"

ஏனக்கு என்னவோபோலிருந்தது. மேலும் அங்கே நின்று என்னைப்பற்றிய விமர்சனங்களைக் கேட்குமளவிற்குத் தன்மானம் இடங்கொடுக்கவில்லை.

போதைக்கு அடிமையாகி, சுத்தத்தைச் சுத்தமாக விரட்டி, அசுத்த ஆடைகளுடன் தள்ளாடுபவர்களுக்கு நான் ஒரு காமுகனாம். வேடிக்கையாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடவே என்நிலையை எண்ணிப் பார்க்கையில் வேதனையாகவும் இருந்தது. தாயகத்தில் எப்படியெல்லாம் நெஞ்சை நிமிர்த்தி வாழ்ந்துவிட்டு, இங்கே இப்படி இவர்களின் பார்வையில் காமுகனாக, பெண்களையே பார்த்தறியாதவனாக உருவகமானதை என் விதி என்பதா? அல்லது என் இனத்தின் விதி என்பதா?

என்னைப்போல் இன்னும் எத்தனை ஆயிரம் பேர் இப்படியாக...!!

அங்கிருந்து மெதுவாக 'ட்ராம்' பாதைகளைத் தாண்டி, தபால் கந்தோர் பக்கமாக வந்தேன். அங்கே ஒரு தார் பரப்பிய முற்றத்தில் சிலமரங்கள். அவற்றின் அடியில் சில வாங்கில்கள். ஒரு வாங்கிலில் ஒரு மெல்லிய உருவம் என்னையே உற்று நோக்கியவாறு இருந்தது.

பின்னங்கரிய தலைமுடி நீண்டுவளர்ந்து காதுகளை மூடி நெற்றிவரை கசிந்திருந்தது. ஏதோ பழங்கால முனிவர்களைக் கண்முன்னால் கொண்டு வருவதுபோல் தாடியும் மீசையும் நீளத்தில் ஒன்றையொன்று போட்டிபோட்டவாறு முகத்தின் பெரும்பகுதியை ஆக்கிரமித்திருந்தன.

கறுப்புநிற உடைகள் அழுக்கடைந்திருந்தது. விழிகள் இரண்டிலும் இரத்தச் சிவப்பு. கையிலே பியர் ரின் பச்சை நிறத்தில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாடியைத் தடவுவதும் வானத்தை அண்ணாந்து பார்த்துச் சிரிப்பதும், பின்னர் என்னை உற்று நோக்குவதுமாக...!!

இப்படியே மீண்டும் மீண்டும்....

இலங்கையனாக இருக்கவேண்டும். எனினும் வலிய நெருங்கிச் செல்ல மனம் ஒப்பவில்லை. காரணம் அழுக்கு உடைகளும் தாடியும் மீசையும் காவியேறிய பற்களும் சிவந்த கண்களும் சராசரி இலங்கையனிலிருந்து வேறுபட்டிருந்தது.

ஆனால் அந்த மனிதன் திடீரென எழுந்து என்னை நோக்கி நெருங்கினான்.

பைத்தியமாக இருப்பானோ? மனதிற்குள் பயமாக இருந்தது.

"நீ.... இலங்கையன்...?"

'டொச்'சில் தெறித்தன வார்த்தைகள்.

"இல்லை!" – அவசரமாக மறுத்தேன்.

நம்பாமல் பார்த்தான்.

சிறிதுநேரம் நின்று யோசித்து, தனக்குள் சிரித்துத் தலையாட்டியவாறு நகர்ந்தான்.

ச்சீ.... எனக்கே என்மேல் வெறுப்பாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஏன் இலங்கையன் இல்லை என்று பொய் கூறினேன்?! அப்படிப் பொய் சொல்ல வேண்டும் என்று நினைக்கவில்லை.

திடீரென்று வந்து விழுந்த கேள்விக்கு என்னை அறியாமல் கூறிய பதில் அது.

அவன் நிச்சயம் இலங்கையனாகத்தான் இருக்க வேண்டும். என்ன கவலைகளால், எந்தச் சூழ்நிலைகளால் இப்படி மாறினானோ?

நான் என்னை இலங்கையன் என்று அடையாளம் காட்டியிருந்தால், அவனின் வாழ்வின் அனுபவங்களைக் கதையாகக் கேட்டு, அவனுக்காகப் பரிதாபப்பட்டிருக்கலாம் அல்லது பரிகசித்திருக்கலாம்!

ஆனால் நான் ஏன் வலிய வந்தவனிடமிருந்து அந்நியன்போல விலகிக் கொண்டேன்?

அவனது தோற்றம், என்னை அவனது நாட்டுக்காரன் என்று சொல்ல மறுத்ததா? அல்லது அவனுடன் கதைத்தால் அவனைப்போல்தான் நானும் என்று மற்றவர்களால் விமர்சிக்கப்படுவேன் என்ற பயமா? அல்லது அவனிலும் பார்க்க நான் உயர்ந்தவன் என்ற அகம்பாவமா?

புரியவில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகையிரதநிலையத்தில் யாரோ இரு ஜேர்மன்காரிகள் குடிபோதையில் என்ன பேசுகிறார்கள் என ஆர்வமாகச் செவிசாய்த்த நான், வலிய வந்து அறிமுகம் செய்ய விரும்பியவனை விலத்தி நின்ற போக்கு எனக்கே விளங்கவில்லை.

எனக்கே எந்நாட்டவனின் அறிமுகம் வேண்டாதபோது, வேறு நாட்டவர்கள் என்னைப்பற்றிக் கண்டபடி விமர்சிப்பதில் என்ன தவறிருக்கமுடியும்?!

டொச் - ஜேர்மனிய மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனக்கென வேறு

மாலைநேரம். கீழ்வானத்துச் சூரியனின் ஒளிக் கீற்றுக்கள் யன்னல் கண்ணாடிகளால் பொசிந்து தரையை அலங்கரித்த செங்கம்பள விரிப்பில் மஞ்சள் கோலமிட்டன.

தொலைக்காட்சியில் திருமணவிழா ஒன்றைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள் பாலனும் அவனது மனைவி பிள்ளைகளும். நண்பன் பாலனுக்கு இரண்டு பிள்ளைகள். இருவருக்கும் ஆறு அல்லது ஏழு வயதுக்குள்தான்.

கடை ஒன்றினுள் சந்தித்தான் பாலன்.

"கனகாலம் வீட்டுக்கு வரேலை. எங்களை எல்லாம் மறந்து போனாய்!" என்று குற்றம் சாட்டினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்கு லீவு எண்டால் உனக்கு வேலை. உனக்கு லீவு எண்டால் எனக்கு வேலை!" என்று அலுத்துக் கொண்டான் கணேஸ்.

"மனமிருந்தால் இடமுண்டு. சாக்குப்போக்குச் சொல்லாமல் வாடா" என்று உரிமையுடன் அழைத்தான்.

அன்று பாலன் வீட்டிற்குப் போகவேண்டும் போலிருந்தது. மனைவி விமலாவையும் கூட்டிக்கொண்டு வந்திருந்தான்.

"வாடாப்பா வா..."

வாயெல்லாம் பல்லாக வரவேற்றான் பாலன்.

"என்ன எந்த நேரமும் படம்தானா?" என்று ரீவியைப் பார்த்தவாறு கேட்டான் கணேஸ்.

"படம் இல்லை. எங்கடை கலியாணவீடு. கனகாலமாய் போட்டுப்பாக்காமல் கொப்பி பழுதாப் போச்சு."

"எல்லாத்துக்கும் ஒரு காலம் இருக்குதானே? குறிப்பிட்ட காலம் வந்தால் வீடியோக் கொப்பியளும் பழுதாகும்தான். முழுக்கப் பழுதாக முந்தி வேறையொரு புதுக்கொப்பியிலை அடிச்சுவை."

"ஊரை ஊரச்சனங்களைப் பார்க்கேக்கை எவ்வளவு ஆசையாய் இருக்கு. இப்ப உதிலை எத்தினை உயிரோடை இருக்குதோ தெரியேலை..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஊரிலை சிறப்பாய்த்தான் கலியாணவீடு செய்திருக்கிறாய்!"

பாலனின் மனைவி தேனீர் கொண்டு வந்தாள்.

"எட்டு வருசம் இருக்குமா?"

"பத்து வருசம். நேற்று நடந்தமாதிரி இருக்குது!"

"மலரும் நினைவுகளாக்கும். என்ன சுலோக்குட்டி ஏன் அழுகிறாள்?" என்று பாலனின் மகள் சுலோசனாவைச் சுட்டிக்காட்டினான் கணேஸ்.

"அதையேன் கேக்கிறாய்? கலியாணவீட்டுக் கொப்பியிலை தன்னைக் காணேலையாம். ஏன் தன்னைவிட்டுப்போட்டுப் படம் பிடிச்சவை எண்டு கேட்டு ஒரே அழுகை" என்ற பாலனுடன் சேர்ந்து சிரித்தான் கணேஸ்.

திருமணத்தை நடத்திவைத்த குருக்கள் காவி வேட்டியும் தாடி மீசையுமாக ஒரு முனிவரைப்போலக் காணப்பட்டார்.

"என்னடா... இவர் குருக்களா? முனிவரா?"

"இவர் ஊரிலை பிரபலமானவர். இவருக்கு எத்தினை வயதிருக்கும் எண்டு சொல்லு பாப்பம்?"

"ஐம்பது...?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓமோம்... அப்ப ஐம்பது வயசு எண்டால் இந்தப் பத்து வருசத்திலை அறுபது வயசாக இருக்குமெல்லே?"

"அதுக்கு என்னடா இப்ப?"

"இந்த அறுபது வயசிலை பிள்ளைப் பெத்திருக்கிறாரடா..."

நம்பாமல் பார்த்தான். இந்த வயதில் பிள்ளை பெறுவது சாத்தியமா?

"நம்படா. மூண்டு வருசத்துக்கு முந்தி இவற்றை மனுசி செத்துப்போச்சு! போனவருசம் ஒரு பதினெட்டு வயசுப் பெட்டையைக் கட்டி இப்ப ஒரு பொம்பிளைப் பிள்ளை பிறந்திருக்கு" என்று வியப்புடன் கூறினான் பாலன்.

கேட்பதற்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. ஆனால் சற்று யோசித்துப் பார்த்தபொழுது இதிலென்ன தப்பென்று தோன்றியது. எத்தனையோ மனிதர்கள் கட்டிய மனைவி உள்ளபோதே கண்டநிண்ட இடங்களுக்கெல்லாம் அலையும்வேளையில் முதல் மனைவியை இழந்த பின்புதானே இவர் மறுமணம் செய்திருக்கிறார்.

"இப்பிடியும் ஒரு ஐயர் இருப்பாரே? இந்த வயசிலை இவருக்கு இப்பிடி ஒரு ஆசை தேவையே?" என்ற விமலாவை முறைத்தான் கணேஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதிலை என்ன தப்பு? ஐயருக்கு இந்த வயசிலை ஒரு துணை தேவைப்பட்டிருக்கும். தேடிக்கொண்டார். ஒரு மனைவியை இழந்த கணவனோ, ஒரு கணவனை இழந்த மனைவியோ வயசான காலத்திலை மற்றவையின்ரை ஆதரவை எதிர்பார்த்துக் கஸ்டப்படுறது என்ன நியாயம்?"

"நீங்கள் சொல்லுறது நல்லாய்த்தான் இருக்கு.... இதையே ஒரு பெண் செய்தால் இந்தச் சமுதாயம் ஏற்றுக் கொள்ளுமா?"

"ஏற்றுக் கொள்ளும். பணக்கார வர்க்கத்திலையோ அல்லது பாட்டாளி வர்க்கத்திலையோ இதெல்லாம் நடந்து கொண்டுதானிருக்கு. இதுகள் பெரிசுபடுத்தப்படேலை. ஆனால் நடுத்தர வர்க்கத்திலைதான் இப்பிடியான விசயங்கள் பூதாகாரமாய் விசுவரூபம் எடுக்கிறது" என்ற கணேஸின் கூற்றில் நியாயமிருப்பதாகப்பட்டது பாலனுக்கு.

என்றாலும் ஒரு விசயம் மனதை உறுத்தியது.

"அதுக்காக ஒரு வயசான மனுசனுக்கு ஒரு இளம் பெண்தான் துணையாக வரவேணுமா? ஒரு வயசான பெண்ணைத் துணையாக ஏற்றுக் கொண்டால் என்னவாம்? இன்னும் ரண்டு மூண்டு வருசத்திலை ஐயர் செத்தால், அந்த இளம் பெண்ணின்ரையும் குழந்தையின்ரையும் எதிர்காலம் நாசமாக வேண்டியதுதான்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உண்மைதான். ஆனால் ஒரு மனுசனிட்டை எல்லா நல்ல குணங்களையும் எதிர்பார்க்க முடியாது. ஐயர் முன் மாதிரியாய் இருக்கவேணும் எண்டு எப்பிடி எதிர்பார்க்கலாம்?! சிலவேளை ஒரு இளம் துணையாலைதான் தன்ரை முதுமையை மறக்கமுடியும் எண்டு நினைச்சிருக்கலாம். அதேமாதிரிப் பொருளாதார ரீதியிலும் அவர்களின்ரை பின்னடிக்கு ஏதாலும் ஒழுங்கு செய்திருக்கலாம்..."

"நான் கேள்விப்பட்டது வேறை."

"என்ன அது?"

"மனைவியை இழந்த குருக்கள்மார் சமயசம்பந்தமான கிரியைகளைச் செய்ய முடியாதாம். அதுக்காகத்தான் கலியாணம் கட்டினவராம்!"

"அப்பிடி வா வழிக்கு. மனைவியை இழந்ததாலை தொழில் இல்லை. அதனால் வருமானம் இல்லை. மறுபுறம் முதுமையும் தனிமையும். இந்த நிலமையிலை ஒரு துணையைத் தேடினதிலை என்ன பிழை?!" என்று நிதானமாகக் கூறினான் கணேஸ்.

என்னதான் கணேஸ் அப்படிக் கூறினாலும், பாலனுக்கு குருக்கள் அறுபது வயதில் ஒரு குழந்தைக்குத் தந்தையானதை நினைக்கும்போது அதிசயமாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் நீராடிச் சுத்தமான ஆடைகளை அணிந்து நேரம் தவறாமல் மந்திரங்களை உச்சாடனம் செய்வதுதான் அவரது இளமைக்குக் காரணமோ?

இருக்கலாம்.

இளமை என்பது உடலைப் பொறுத்ததல்ல. மனிதனின் செயற்பாடுகளைப் பொறுத்தது. செயற்பாடுகளின் மூலப் பொருள் மனம். எனவே மனம் என்ற அகத்தின் அழகு முகத்தில் தெரிவதில் வியப்பென்ன?

முதற்தடவையாக எண்ணினான் பாலன்.

நகரத்தின் மையத்தில் உள்ள அழகிய பூங்கா. குளிர்காலத்தில் வாடிவதங்கி அழகிழந்து சுருங்கிப் போயிருந்த பூங்கா, சூரியனைக் கண்டதும் பசுமைகளால் வளைவுகள் அமைத்துக் குதூகலத்துடன் வரவேற்புக் கூறுவதுபோல் செழுமையாகக் காட்சியளித்தது.

சிறுவர்கள், இளைஞர்கள், வயதானவர்கள் என எங்கும் கலகலப்பு.

அருகே ஓடுகின்ற சிற்றருவியில் பாதங்களை அலம்பியவாறு இயற்கை அன்னையின் விநோதத் தழுவலில் தம்மை மறந்திருந்தனர் சிலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்காங்கே பல காதல்சோடிகள் கட்டிப் புரள்வதும் இதழ் சேருவதுமாகக் கிளுகிளுப்பை ஊட்ட, சற்றுத் தள்ளி அமர்ந்திருந்த ஒரு சோடி, பாலனின் கவனத்தைக் கவர்ந்தனர்.

தலை நரைத்த வயதான தம்பதிகள். ஒருவர் கரத்தை மற்றவர் பற்றியபடி ஏதோ தமக்குள் கதைப்பதும் தோளோடு தோள் சேர்த்து உரத்த குரலில் சிரிப்பதுமாக அமர்ந்திருந்தனர்.

அவர்களுக்கு அறுபது வயதுக்குமேல் இருக்கும். எனினும் இளைஞர்களுக்குத் தாம் சளைத்தவர்கள் அல்ல என்பதுபோல் இருந்தது அவர்களது செய்கை. முதலில் பார்த்தபோது அவர்களது செய்கை சிரிப்பை மூட்டியது.

மீண்டும் நோக்கியபோது அதில் என்னவோ பொதிந்திருப்பதாகத் தென்பட்டது. சற்றுநேரம் கவனித்தபோது அதில் புனிதம் தெரிந்தது. அந்தப் புனிதத்தில் அன்பு ஒன்றே ஜீவனாகப் பிரகாசித்தது.

அவர்களில் இளைஞர்களைப்போல் கவர்ச்சி இல்லை. தோற்றத்தில் கௌரவமான தன்மை தெரிந்தது. செய்கைகளில் அவர்கள் இளைஞராயினர்.

இப்படியொரு வயதான சோடி எமது தாயகத்தில் இருந்தால்– ஏன் இந்நாட்டில் தமிழருள் இருந்தால்– அதுவும் இம்மாதிரியான பொது இடத்தில் தம்மை மறந்த நிலையில் இருந்தால்– எத்தனையோ பேரின் கேலிக்கும் கிண்டல்களுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளாகி அவமானப்பட்டிருப்பார்கள். அந்த அவமானங்களுக்குப் பயந்தே தமக்குத்தாமே கட்டுப்பாடுகளை விதித்தவர்களாய், தமது சுய உணர்வுகளையும் ஆசாபாசங்களையும் அமுக்கியவர்களாய் மனதிற்குள்ளேயே மறுகுவார்கள்.

ஆனால் இங்கே....

இந்தத் தம்பதிகளைப்போல் எத்தனையோ பேர் வீதிகளிலும் பூங்காக்களிலும் கடைகளிலுமாக....!

தினசரி பத்திரிகைகளைப் புரட்டினால், 'ஐம்பது வயது மாது நல்ல துணையைத் தேடுகிறாள், எழுபது வயதானவர் நல்ல சிநேகிதியையோ தகுந்த துணையையோ தேடுகிறார்' என்ற விளம்பரங்கள் பக்கம் பக்கமாக...!!

வீதிகளில் இறங்கினால், கிழவர்களை விளிக்கும் கிழவிகளின், 'இளைஞனே... இளைஞனே...' என்ற ஒலிகள்...!!

இளவயதில் வாழ்வின் வரம்புகளை மீறிப் பட்டாம் பூச்சிகளாய்ச் சிறகடித்தவர்களுக்கு வயதாகத்தான் மனித மனங்களின் தேவையும் அருகாமையும் எவ்வளவு அவசியமானவை என்ற உண்மை புரிய ஆரம்பிக்கிறது. அதற்காக அவர்கள் தொலைந்துபோனவைகளைத் தேடாமல் வருவனவற்றை வாஞ்சையோடு வரவேற்று அனுபவிக்கும் செய்கை பாலனைப் பொறுத்தவரையில் ஒரு படிப்பினையாகத் தோன்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதமனங்களின் பரிமாற்றத்தால் ஏற்படும் மனித நேயத்தால் அந்த வயோதிபர்களின் செயற்பாடுகளில் தோற்றமாகும் இளமையான உணர்வுகளை அவதானித்தவாறே வீதியை நோட்டமிட்டவனின் பார்வையில் கணேஸ் தென்பட்டான்.

"கணேஸ்...." என்று அழைத்தவாறே வீதியை நோக்கி ஓடினான் பாலன்.

கணேஸின் முகம் வழமையான மலர்ச்சியின்றி இருண்டிருந்தது.

"என்னடா? என்ன கோலம் இது...? வீட்டிலை ஏதாலும் பிரச்சினையே?"

"வீட்டிலை இல்லை. ஊரிலை. எல்லாம் என்ரை அப்பாவாலை...!"

வெறுப்புடன் கூறினான் கணேஸ்.

"அப்பாவுக்கு என்ன?" என்று பதட்டத்துடன் கேட்டான் பாலன்.

"அவருக்கென்ன.... பிள்ளை இல்லாத வீட்டிலை துள்ளிக் குதிச்சுதாம் கிழம்.... இந்த வயசிலை ஒரு கொழுப்பு. மண்டையைப் போடுற வயசிலை ஒருத்தியைக் கலியாணம் கட்டிக்கொண்டு கூத்தடிக்கிறாராம்...!" என்று சினந்தவனை வியப்புடன் பார்த்தான் பாலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அன்றைக்குக் குருக்கள் செய்தது நியாயமென்று வாதிட்ட கணேஸா இப்படி வெறுப்பை உமிழ்கிறான்?!'

"ஏன்டா கணேஸ், இதிலை என்ன தப்பு? ஊரிலை ஆள் உதவி இல்லாமைக் கஸ்டப்படாமை இப்பிடி ஒரு துணையைத் தேடுறதிலை என்ன தவறு? நீகூட அண்டைக்குக் குருக்கள் செய்தது நியாயமெண்டாய்.... இப்ப...?"

"அது குருக்கள்.... இது என்ரை அப்பா.... நாளைக்கு ஊருக்குப் போனால் எனக்கெண்டு வீடு, வளவு, காணி இருக்கெண்டு நினைச்சன். இப்ப அதுகளைப் பங்குபோட ஒருத்தி வந்திட்டாள்.... இதை நான் விடமாட்டன்.... சொத்துக்கு ஆசைப்பட்டுத்தானே இந்த வயசான கிழவனைக் கட்டினவள்..." என்று ஆக்ரோசமாகக் கூறியவனைப் பார்க்க வெறுப்பாக இருந்தது.

என்ன மனிதர்கள் இவர்கள்? தனக்கென வந்ததும் தடம் புரள்கிறார்களே?

வயதானவர்களின் உணர்வுகளையும் தேவைகளையும் நசித்து, அவர்களை முடமாக்கி முடங்கவைக்க, எமது சமுதாயத்தின் பொருளாதாரத்தை ஒட்டிய சமூகம்தான் முக்கிய காரணமோ?!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளைக்காக இன்றா?!

என்னால் நம்ப முடியவில்லை. இந்த ஐரோப்பிய மண்ணில் இப்படியானதொரு நிகழ்வு இடம் பெறுமா? – என்பதை இற்றைவரை நான் நினைத்துப் பார்த்ததில்லை. அதனால்தான் என்னால் நம்பமுடியவில்லை.

'நீ நம்பித்தான் ஆகவேண்டும். எங்களை ஒருமுறை உற்றுப் பார். எவ்வளவோ கனவுகளுடனும் எதிர்காலத் திட்டங்களுடனும் ஜேர்மனியை மிதித்தோம்.... அவைகள் எல்லாம் அரைகுறைகளாக அரங்கேறியவேளையில், தட்டிக் கொட்டிச் சிதைத்த பாவிகளின் வன்முறைகளுக்கு இரையாகிப்போய்க் கிடக்கிற எங்களைப் பார்த்தாவது நம்பித்தானாக வேண்டும்....' என்பதுபோல அந்தப் பெட்டிகளுள் மார்பளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைத்துணிகளைப் போர்த்தியவாறு அவனும் அவளும்... அல்ல... அல்ல... அந்தப் பிணங்கள் சலனமில்லாமல் ஊதுபத்தி மணத்துள் கிடந்தன.

தலைப்பக்கத்தின் அருகே ஒரு விளக்கு காற்றில் சுடரை அலைபாயவிட்டிருந்தது.

அந்த அவனும் அவளும் ஒரு இளம் தம்பதி. இரு சிறு பிள்ளைகளின் பெற்றோர். இலங்கையில் இருந்து அகதியாக வந்தவர்கள். ஒரே நகரத்தில் வசித்ததால் எனக்கு ஓரளவு அறிமுகமானவர்கள். ஓரிருமுறை அந்த இரண்டு சிறு பிள்ளைகளின் பிறந்தநாள் விழாக்களுக்கு அழைப்புக் கிடைத்து வந்திருக்கிறேன்.

ஆனால் இன்று.... அவர்கள் யாரோ கொடியவர்களால் கொலை செய்யப்பட்டதை அறிந்து அழையாமல் வந்திருக்கிறேன்.

பிள்ளைகள் இரண்டும் பாடசாலைக்குச் சென்றவேளையில் யாரோ சிலர் வந்து துப்பாக்கியால் சுட்டுவிட்டு ஓடிவிட்டார்களாம்.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தம்கேட்டு அயல்வீட்டுச் சனங்கள் ஓடிவரும்போது கொலைகாரர்கள் தப்பிச் சென்றுவிட்டார்கள். ஆனால் கொலைகாரர் இலங்கையர்தான் என அந்த அயல்வீட்டுச் சனங்கள் உறுதியாகச் சொன்னபோது வெட்கமாக மட்டுமல்ல– ஆவேசமாகவும் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் நாட்டின் துப்பாக்கிகளுக்குப் பயந்து அகதிகளாக அடைக்கலம் தேடி இந்த நாட்டுக்கு வந்தவர்கள், துப்பாக்கி ஏந்தித் தம் இனத்தையே குறி வைத்ததை நினைக்க, நினைக்க– 'நானும் ஏன் துப்பாக்கி எடுத்து இவர்களை இனங்கண்டு சல்லடைகளாக்கக் கூடாது?' என்ற கேள்வி மனதுள் எழுந்து, என்னையும் ஆயுதங்கள்பக்கம் சிந்திக்கத் தூண்டியது.

அந்தச் சின்னஞ்சிறிய பிஞ்சுகள் இரண்டும் சோர்வாக ஒரு கதிரையில் அமர்ந்திருக்கின்றன. பெற்றோர் இறந்ததை அவர்களால் புரிந்துகொள்ள முடியுமா? புரிந்திருந்தால் அவர்களின் மனநிலை எவ்வாறு இருக்கும்?

மூத்தவனுக்கு எட்டு வயதுதான் இருக்கும். இளையவளுக்கு இரண்டு வயது குறையக் கணிக்கலாம்.

நான் காலையில் இருந்து அங்கே நிற்கிறேன். பெண்கள், ஆண்கள் என வந்து அவர்களிடம் ஏதோ பேசுகிறார்கள். சோகத்துடன் பார்க்கிறார்கள். சோகமாகக் காட்டுகிறார்கள். சோகமாகக் காட்டுவதற்காக முயற்சிக்கிறார்கள்.

அந்தப் பிஞ்சுகள் அழவில்லை. ஆனால் கண்களில் கலக்கம். தலை கலைந்திருந்தது. உடைகள் கசங்கியிருந்தன. விடிய வெள்ளண்ணப் படுக்கையால் எழுப்பி, உச்சிமோர்ந்து, தலைவாரி உடைகள்மாற்றி அழகு பார்த்து உணவூட்டிப் பாடசாலைக்கு வழியனுப்பும் அம்மா உயிரற்ற உடலாகப் பெட்டிக்குள் கிடக்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழப்படி செய்யாமல் இருந்தால் சொக்லேற் தருவேன் என்று கூறிக் குழப்படி செய்தாலும் வாரியணைத்து இனிப்புகள் வழங்கும் அப்பாவும் பிணமாக அங்கே.

அந்தப் பிஞ்சுகளின் அன்புக் கூட்டைப் பிய்த்தெறிந்து, அவர்களை நிர்க்கதியாக்கிய பிணந்தின்னிக் கழுகுகளை நினைக்கும்போது இரத்தம் கொதித்தது.

அங்கு வருவோர் போவோரெல்லாம் துக்கம் விசாரிப்பதும், புதினம் சேகரிப்பதுமாக நடமாடினார்களேயொழிய- அந்தச் சின்னஞ்சிறிசுகள் சாப்பிட்டார்களா என்று கவனிப்பதாகத் தெரியவில்லை.

அங்கே ஒரு வயதான பெரியவர் மும்முரமாக ஓடியாடிக் கொண்டிருந்தார்.

"ஐயா!"

'என்ன' என்பதுபோலப் பார்த்தார்.

"பாவம் குழந்தையள். என்னவாலும் சாப்பிட்டுதுகளோ தெரியேலை..."

சொல்லக் கூடாததைச் சொல்லிவிட்டதைப்போல ஏளனமாக என்னைப் பார்த்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தாய் தேப்பன் கண்ணுக்கு முன்னாலை கிடக்கேக்கை அதுகளுக்கு எப்படிச் சாப்பாடு கொடுக்கிறது? இன்னும் கொஞ்சத்தாலை புதைக்கப் போறம். பேந்து பாக்கலாம். இப்ப பேப்பர்காரங்கள் வாறன் எண்டவங்கள். எனக்கு நிறைய வேலை இருக்கு."

என்னைக் கடந்து சென்றார்.

இளையவள் தமையனிடம் என்னவோ கேட்கிறாள். அவன் கலக்கத்துடன் அங்குமிங்கும் பார்த்து மலங்க மலங்க விழிக்கிறான்.

'தமையனிடம் பசிக்கிறது என்று கூறியிருப்பாளோ?!'

மெதுவாக அவ்விடத்தைவிட்டு வெளியே வந்து சிகரட் ஒன்றை எடுத்து வாயில் வைத்தேன்.

என்னைப்போல நாலைந்து தமிழர்கள் சிகரட்டை வாயில் வைத்தவாறு கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

"எனக்கென்னவோ இது எங்கடையாக்கள் செய்தமாதிரித் தெரியேலை. நாசியளாய்த்தான் இருக்க வேணும். அவங்கள் தான் இப்ப மும்முரமாய் வெளிநாட்டாக்களைத் தாக்குறாங்கள். ஜேர்மன்காரர் சுத்துறாங்கள்!"

"இல்லை குமார். நான் அறிஞ்சமட்டிலை இவர் ஊரிலை இயக்கம் ஒண்டிலை இருந்துகொண்டு கசிப்புக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காச்சினவங்களைப் பிடிச்சுக் கம்பங்களிலை கட்டுத் தூக்கினவராம். பாதிக்கப்பட்டவங்கள் ஆரோதான் இப்பிடிச் செய்திருக்க வேணும்...."

இருக்கலாம்.... அதற்காக ஒரே சூட்டால் ஆளை முடித்தால் மாத்திரம் கம்பங்களில் தொங்கியவர்கள் எல்லாம் புது அவதாரம் எடுத்துவிடுவார்களா என்ன?! அவர் செய்த பாவத்திற்காக அந்தப் பிஞ்சுகள் இரண்டையும் அந்நிய மண்ணில் அநாதைகளாக்கிய செயலை எந்த நியாயத்தில் சேர்க்க முடியும்?!

அவர்களின் உரையாடலை மீண்டும் காது கொடுத்துக் கேட்டேன்.

"அப்பிடியில்லை. இவைபிட்டை எக்கச்சக்கமான பேர் வட்டிக்குக் கடன் வாங்கியிருக்கினம். காசைத் திருப்பிக் கொடுக்க வேணுமெண்டதுக்காக ஆக்களை முடிச்சுப் போட்டாங்கள்."

அங்கு நடந்த கொலைக்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணங்களைக் கூறிப் பொழுதைக் கரைத்துக் கொண்டிருந்தார்கள். இன்னும் சிறிது நேரத்தில் எல்லோரும் சேர்ந்து, நாசிகள்தான் இதைச் செய்தார்கள் என்று தீர்மானம் எடுத்து ஊர்வலமாகி எவராவது ஒரு பிரமுகரை அழைத்துப் பேசச் செய்யலாம். அவரும் 'மைக்கைப் பிடித்து, நாசிகளை எதிர்த்துப் போராடி உயிர்நீத்து வீரத் தமிழர் என்று நிரூபித்து எம்மினத்திற்குப் பெருமை சேர்த்துவிட்டார்கள் எனப் பேசிவிட்டுப் போகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பிஞ்சுகள் இன்னும் பட்டினியுடன் அந்தக் கதிரையில் சோர்ந்து போனவர்களாய் மலங்க மலங்க விழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒருவர் பேப்பரும் பேனாவுமாக வருகிறார்.

"இந்தக் குடும்பத்துக்காக நிதி சேர்க்கிறம். உங்கடை பங்களிப்பைக் கொடுங்கள்..."

தற்கால வாழ்வுக்கு நிதி அவசியம்தான். அந்தக் குழந்தைகளின் வாழ்க்கைக்கு நிதி அவசியம்தான்.

தாய் நாட்டில் அல்லலுறும் அநாதைச் சிறுவர்களுக்காக எத்தனையோ மாமனிதர்கள் நிதி சேகரிக்கிறார்கள்.

அதேபோல் பெற்றோர்களைப் பறிகொடுத்து, எதிர்காலம் என்னவாகுமோ என்று சிந்திக்கக்கூட இயலாத பருவத்திலுள்ள அந்தப் பிஞ்சுகளுக்கும் நிதி தேவைதான்.

'அவர்களின் எதிர்கால வாழ்வுக்காக நிதி சேகரிப்பவர்களே! இப்போது அவர்கள் பசியாய் இருக்கிறார்கள். ஒருபிடி சோறு கொடுங்களேன். நாளைய தினத்துக்காக இன்று இருப்பவைகளைத் தொலைத்துவிடாதீர்கள்!' என்று ஓங்கிய கத்தலால் அவர்களை அறையவேண்டும்போல எழுந்த உணர்வுகளை இயலாமையுடன் அடக்கிக் கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருகிய மொட்டுக்கள்

வாசற் கதவைத் திறந்து புன்னகையுடன் வரவேற்றவளைப் பார்த்துப் பிரமித்துவிட்டேன். எவ்வளவு மாறிவிட்டாள். கடைசியாக இவளைச் சந்தித்துப் பத்து வருடங்களாவது இருக்கும்.

அன்று நாற்றுமேடையாக இருந்த நிலம் பூவும் பிஞ்சும் காய்களும் கனிகளும் விளைந்த தோட்டமாகியது. பெரிய மனுசியாகிவிட்டாள். கன்னக்கதுப்புகளில் திரண்ட தசைகளில்கூட பெரிய மனிதத்தனம் பளிச்சிட்டது.

"உள்ளுக்கு வாங்கோ!" என்று என்னை வரவேற்றாள்.

"லட்சுமியா? எவ்வளவு மாறிவிட்டாய்?" என்று சொல்லி ஆச்சரியமாக அவளைப் பார்த்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"லட்சுமிதான்!" என்று புன்னகை மாறாமல் கரிய முகத்தில் செம்மைபடரக் கூறியவள்,

"ஏன் மறந்துட்டீங்களா?" என்று கேட்டாள்.

"முழங்காலளவு பாவாடையில் தலை மயிரைக் கூட்டி அள்ளிக் கட்டிக்கொண்டு குறுகுறெண்டு ஓடித்திரியும் லட்சுமியை அல்லவா எதிர்பார்த்து வந்தேன். அமைதியாக நின்று என்னை ஆச்சரியப்படுத்துகிறாய்!" என்று பழையதுகளை நினைவில் நிறுத்தினேன்.

"இப்ப வயசாச்செல்லே!" என்று இலேசான சிரிப்புடன் என்னை அன்பாகப் பார்த்தாள்.

அதில் பாசம் தெரிந்தது. பழசை மறக்கவில்லை என்ற பாவனை பொதிந்திருந்தது.

லட்சுமி ஜேர்மனிக்கு வந்து ஒருமாதம்தான் இருக்கும். வரும்போது ஊரில் உள்ள அம்மா எனக்காக ஏதோ கொடுத்துவிட்டிருந்தாளாம். கடிதம் போட்டிருந்தாள். அதுதான் லட்சுமியைத் தேடி வந்தேன். நான் வந்த நேரம் லட்சுமியின் கணவன் வீட்டில் இல்லை. தொழிற்சாலை ஒன்றில் வேலை. வேலைக்குச் சென்றுவிட்டான்.

லட்சுமிதான் தனியாக இருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இருங்கோவன்...."

"வீட்டை அழகாய் வைச்சிருக்கிறாய்!"

"யூஸ் குடிக்கிறியளே?"

"தேத்தண்ணிபோடப் பஞ்சியாக்கும்...!"

"இல்லை... குடிப்பியளோ தெரியாது..." என்று தயங்கினாள்.

"ஏன் லட்சுமி.... தேத்தண்ணி குடிப்பன்தானே.... அதுவும் நீ போட்டால்...."

தயக்கத்துடன் தடுமாறியவள் குசினிக்குள் சென்று, வெள்ளிக்கிண்ணம் ஒன்றில் தேனீர் கொணர்ந்து மேசையில் வைக்கப்போனாள்.

"கையிலை குடு லட்சுமி.... நீ இப்பிடிக் குடுத்து எத்தினை வருசமாச்சு!"

"நீங்கள் பழைய ஞாபகத்திலை இருக்கிறியள்...."

"அப்பிடியான நாட்களை இனி எப்ப காணமுடியும் சொல்லு? அந்த இனிமையான அனுபவங்கள் எல்லாம் ஒரு கனவு மாதிரி இருக்கு!"

நான் கூறுவதையே அவதானித்துக் கொண்டிருந்தவள், எனது பார்வையைச் சந்தித்ததும் தலையைத் தாழ்த்தினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது லட்சுமிக்குப் பன்னிரண்டு வயது இருக்கலாம். எனக்கும் அவளது வயதுதான். நான் பாடசாலை ஒன்றில் படித்துக் கொண்டிருந்தேன். அவள் கையெழுத்துப் போடுமளவிற்குப் படித்திருந்தாள். தினமும் எனது வீட்டுக்கு வருவாள். முற்றம் கூட்டுவாள். மாட்டுத் தொழுவத்தைச் சுத்தம் செய்வாள். மாடு ஆடுகளுக்கு வயலில் இருந்து புல்லுக் கொண்டுவந்து போடுவாள். நெல் அறுவடை காலங்களில் வயலிலும் வேலை செய்வாள்.

விராந்தையில் உள்ள பலகைக் கட்டிலில் இருந்தவாறு அவளையே நோட்டமிடுவேன். அவளுக்கு வேலை சொல்லும் அம்மாமீது ஆத்திரமாக வரும். வேலை இல்லாவிட்டால் லட்சுமி வரமாட்டாள் எனும்போது அம்மா செய்வது நியாயம்தான் எனத் தோன்றும்.

உழைப்பின் பலனோ என்னவோ அவளது கைகள் எல்லாம் இரும்புமாதிரிக் கடினமாயிருக்கும். செம்பட்டை அடித்த கூந்தலை வாரிப் பின்னால் வழித்துப் பழைய துணி நாடா ஒன்றினால் முடிச்சுப் போட்டிருப்பாள்.

அம்மா வீட்டில் இல்லாத வேளைகளில் எங்கள்பாடு கொண்டாட்டம்தான்.

"லட்சுமி..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன...?"

"கொக்கான் விளையாடுவமே?"

"அம்மா வந்தால் ஏசுவா."

"போடி.... நீ கல்லுக் குறுணி பொறுக்கியா" என்று அதிகாரத்துடன் விரட்டுவேன்.

சின்னஞ்சிறிய கற்களைக் கையுள் அடக்கி, அந்தரத்தில் எறிந்து புறங்கையால் இலாவகமாக ஏந்துவாள். அவளின் வேகத்துக்கு என்னால் ஈடுகொடுக்க முடியாது. அவளுடன் போட்டிபோட்டு வெல்லமுடியாது. சினம் பொங்கும். ஆத்திரத்துடன் விலகுவேன்.

அவள் சிரிப்புடன் எனக்காகக் கொக்கானில் கற்களைத் தவற விடுவாள். எனக்குத் தெரியும். என்றாலும் காட்டிக் கொள்ள மாட்டேன்.

"லட்சுமி.... நான்தான் வெற்றி."

"வெற்றியைக் காய்ச்சிக் குடிக்கவா முடியும்?"

"போடி...!" என்று அவளின் தலையில் ஓங்கிக் குட்டுவேன்.

"ஆ..." என்று வலியுடன் அலறுவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளை அலறவிட்டு வேடிக்கை பார்ப்பதில் எனக்குள் அலாதி ஆனந்தம்.

"இனிமேல் விளையாட வரமாட்டன்."

"அதையும் பாப்பம்...!"

"பார்ப்பம்...!" என்று கோபம்காட்டி அம்மா வருவதைக் கண்டவுடன் நார்க் கடகத்தை எடுத்துக்கொண்டு மாட்டுக் கொட்டிலை நோக்கி விரைவாள்.

ஒருநாள்—

கைக்குள் எதையோ மறைத்து வைத்திருந்தாள்.

"என்னடி"

"கண்டு பிடி பாப்பம்!"

"கைக்கை பொத்தி வைச்சுக்கொண்டு கண்டுபிடி எண் டால் எப்பிடி....?"

"முள்ளுப் பற்றைக்குள்ளை கறுப்பியும் சிவப்பியும் நிண்டு சிரிச்சினம். அதுதான் இது!" என்று புதிர்போட்டாள்.

யோசித்தேன்.

விடை தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தெரியாது... சொல்லடி!" என்று கெஞ்சினேன்.

வெற்றிப் பெருமிதத்துடன் கைகளை அகல விரித்துக் காட்டினாள். கறுப்பும் சிவப்புமாக ஈச்சம் பழங்களும் காய்களும்.

"இதுதான் அது!"

ஈச்சம் காயாக அவள் சிரித்தாள்.

வாங்கிச் சுவைத்தேன். சிவப்புக் காய்கள் கசந்தன. கறுப்புப் பழங்கள் இனித்தன.

லட்சுமியும் கறுப்புத்தான்.

"காய்களைச் சாப்பிடாதை. தொண்டை கட்டிப்போடும். உப்புத் தண்ணியிலை போட்டுவைச்சால் நாளைக்குப் பழுத்துவிடும்."

நாட்கள் நகர்ந்தன.

லட்சுமியும் நானும் வயல்வரப்புகளில் நடந்தோம். ஓடினோம். துள்ளினோம். குதித்தோம். மிளகாய்த் தோட்டத்தில் அவள் குந்தியிருந்து உழவாரத்தால் அறுகம் புல்லைச் செதுக்கும்போது நான் குறும்பு பண்ணினேன்.

"இப்ப வேண்டாம்... இருளமுந்தி நான் புல்லுச் செதுக்கிக் கடகத்தை நிறைக்க வேணும்....!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் கடகத்தினுள் போட்ட புல்லை எடுத்து வெளியே விசிறினேன்.

அவளுக்கு ஆத்திரம் வந்துவிட்டது. சிறு மண்ணாங்கட்டி ஒன்றை எடுத்து என்னை நோக்கி வீசினாள். குறி தப்பாமல் எனது நெற்றியில் பட்டுத் தெறித்தது. கோபத்துடன் அவளின் சட்டையைப் பிடித்து இழுத்தேன். 'டர்'ரென்று கிழிய என்னைத் தள்ளிவிட்டாள். நான் பின்புறமாக நிலைதடுமாறி விழுந்தேன். தலை வரப்பில் முட்டி வலியெடுத்தது.

அவளை முறைத்தவாறு துலாவின் கீழ் இருந்த முதிரைக் கல்லில்போய் அமர்ந்தேன். அவளைப் பார்க்கவே பிடிக்கவில்லை. சிறிதுநேரம் என்னையே உற்று நோக்கியவள், கண்களில் சிறிது கலக்கம் தோன்ற ஓடிவந்தாள்.

"நோகுதா?"

"போடி!"

"கேக்கிறனெல்லே...?"

"நீ என்னோடை கதையாதை.... நானும் கதைக்கமாட்டன்."

"அப்பிடிச் சொல்லாதையடா. நான் அழுவன்...."

"அழு.... எனக்கென்ன...?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கை.... என்னைப்பார்த்துச் சொல்லு பாப்பம்!"

கிட்ட வந்து என்னைத் தன் மார்புடன் சேர்த்தணைத்துப் பிடரியைத் தடவியவாறு கேட்டாள்.

அந்த அணைப்பின் மெல்லிய வெப்பத்தில் என்னை மறந்து ஏதோ ஒரு உணர்வில் அவளை அப்படியே இறுக அணைத்துக் கொண்டபோது, 'ச்சீ!' என்று என்னை விலத்தி முகம் சிவந்தாள்.

அதன் பிறகு எங்கள் நெருக்கம் அதிகமாகியது.

தொட்டதுக்கு எல்லாம் அவளைச் சீண்டுவதும் நாண வைப்பதுமாகப் பொழுதுகள் கழிந்தன.

"லட்சுமி.... எனக்கொரு ஆசை!"

"என்ன?"

"ஆருக்கும் சொல்லமாட்டியே?"

"ம்கூம்...!"

"எனக்குக் கொஞ்சம் கள்ளுக் கொண்டு வந்து தருவியா?"

"ம்.... மாட்டன். அம்மாவுக்குத் தெரிஞ்சா அடிப்பா...!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மாவுக்குத் தெரிஞ்சால்தானே? பின்வீட்டு வேலிப் பொத்துக்காலை கொண்டுவந்து வை. கோடீக்கை இருந்து குடிக்கிறன்..."

"வேண்டாம்.... நீ கெட்டுப் போவாய்...."

"கொஞ்சம்தானேடி!"

"மாட்டன்...."

"கொண்டராட்டில் இந்தப்பக்கம் வரவிடமாட்டன்..."

"என்ன நீ...?"

"பயப்பிடாதை.... ஆசைக்குத்தானே கேட்கிறன்."

"கொஞ்சம்தான் கொண்டருவன்.... சோடாப் போத்திலுக்கை.."

"போத்திலோடை எப்பிடிக் குடிக்கிறது?"

"சிரட்டையை எடுத்து வேலி மூரீக்கை சொருகி வை!"

"சரீடி.... என் சாமத்தியம்!"

இவ்வாறே சென்று மறைந்த பொழுதுகளுக்குத்தான் எவ்வளவு அவசரம்?!

திடீரென அவள் வீட்டுக்கு வருவதை நிறுத்திவிட்டாள். சில நாட்களாக எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமை பிடித்தமாதிரி இருந்தது.

'எங்கே அவள் என்றே மனம்

தேடுதே ஆவலாய் ஓடிவா!'

அவள் பெரிய மனுசியாகி விட்டாளாம்.

அம்மா யாரிடமோ கூறினாள்.

அதன் பின்னர் அவளைச் சந்திக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை.

என்றாலும் அவளுடன் அளவளாவிய சம்பவங்கள் யாவும் பசுமரத்தாணிபோல மனதில் ஆழமாகப் பதிந்திருந்தன.

கடந்த கால நினைவுகள் மனதை அலைக்கழிக்க அவளைப் பார்த்தேன்.

அவளும் அந்த நிலையில்தான் இருந்திருக்க வேண்டும். நெற்றியில் முத்துமுத்தாக வியர்வைத் துளிகள். துடைக்க மறந்தவளாய் நின்றாள்.

"லட்சுமி...!"

கண்கள் கருவண்டுகளாகச் சிறகடிக்க நிமிர்ந்தாள்.

"அப்பிடி ஒரு வாழ்க்கை இனி வருமா லட்சுமி?" என்று ஏக்கத்துடன் கேட்டவாறு அவளது கரங்களைப் பற்றினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது தேகம் ஒரு கணம் சில்லிட்டு நடுங்கியது.

மறுகணம் தன் கைகளை விடுவித்துக்கொண்டு விலகும்போது, இரு சொட்டு நீர்த்துளிகள் என் காலடியில் விழுந்து தெறித்தன.

வியர்வையா.... கண்ணீரா...?

"லட்சுமி...!"

"அதெல்லாம் ஒரு காலமுங்க.... அப்ப நாங்கள் சின்னப் பிள்ளையள்.... மனசிலை வஞ்சனை கிடையாது...!"

எவ்வளவு அழகாகக் கூறிவிட்டாள். அதில்தான் எத்தனை அர்த்தங்கள் ஆழப் புதைந்துள்ளன?!

மனிதனின் வளர்ச்சியில் வஞ்சகமும் கபடமும் வந்து சேர்கிறதோ இல்லையோ, சமூகம் அப்படித்தான் நினைக்கிறது.

முகிழ்விடும் மொட்டுக்கள் மலர்ந்து மணம்வீசும் முன்பே கருகிப்போனால், அவற்றின் தோற்றம் கூட வெறுமைதானோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன விகாரங்கள்

குளிரைப் பார்த்துப் பதறியடித்து இலைகளை உதிர்த்துவிட்டுப் பட்டுப் போனவைகளைப் போன்ற தோற்றத்துடன் வீதியின் இருமருங்கும் அமைதியாக நிற்கும் மரங்களை மேலும் பயமுறுத்தும் நோக்கத்துடன் முண்டியடித்து முன்னேறும் வாகனங்கள், சோகத்துடன் குளிரைத் தாங்கும் மரங்களைத் தாண்டி ஆரவாரமாகச் சென்று கொண்டிருந்தன. குளிரில் இருந்து உடம்பைப் பாதுகாக்கவென வாங்கியணிந்த உடைகளையும் மீறி நடுங்கியவாறு அருகிலிருந்த தேவாலய உச்சியில் தெரிந்த மணிக்கூட்டை அண்ணாந்து பார்த்தான் செந்தில்.

மணி சரியாக மாலை 4.50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்ரதம் (Electric Train) வர இன்னும் இருபது நிமிடங்கள் இருக்கின்றன. ஆறுதலாக நடந்து சென்றாலும் பத்தே நிமிடங்களில் மின்ரத நிலையத்தை அடைந்துவிடலாம்.

'மலிவு விலை, மலிவு விலை' என வண்ண வண்ணச் சுவரொட்டிகளைக் கண்ணாடியில் பொருத்தி, 'வா' என வரவேற்புக்கூறும் கடைகளையும் சிற்றுண்டிச்சாலைகளையும் இயந்திரகதியில் விரைந்து செல்லும் மனிதச் சங்கிலிகளையும் பார்வையிலிருந்து விலத்தியவாறு மின்ரத நிலையத்தை அடைந்தான் செந்தில்.

மின்ரதம் வருவதற்கு இன்னும் பத்து நிமிடங்கள் காத்திருக்க வேண்டும். அதில் சென்றால்தான் ரெஸ்ரோரண்ட் வேலைக்குப் பிந்தாமல் செல்ல முடியும்.

தாமதமாகச் சென்றால் ஒருமாதிரிப் பார்வையாலேயே எச்சரிப்பான் இத்தாலிய முதலாளி. அதேபோல் வேலை எல்லாம் முடித்துச் சரியான நேரத்துக்கு வெளியேறினாலும் 'ஏன் பிந்திப் போகவில்லை?' என்பதுபோல் பார்வையாலேயே முறைப்பான்.

இவையெல்லாம் செந்திலுக்குப் பழகிப் போனவை. இவனைப்போல எத்தனை முதலாளிகளைப் பார்த்திருப்பான்?

இளிச்சவாய்த் தொழிலாளி கிடைத்துவிட்டால், பார்வையாலேயே பச்சடிபோட்டுக் காரியம் சாதித்து ஏப்பம் விடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனைப் பொறுத்தவரையில் முதலாளிகள் எல்லோருமே சுயநலவாதிகள்தான். அவர்களுடைய அணுகுமுறைகள்தான் வித்தியாசமானவை....!

சிலர் வார்த்தைகளால் சுடுவார்கள். சிலர் பார்வையாலேயே வதைப்பார்கள். சிலர் அன்பாகப் பேசியே வேலை வாங்குவார்கள். மொத்தத்தில் எல்லா முதலாளிகளுமே தாங்கள் நினைத்ததைச் சாதித்துவிடுவார்கள்.

இது புரியாத சிலர், 'என்ரை முதலாளி நல்லவன்! உன்ரை முதலாளி பொல்லாதவன்!!' என்று வாதத்தில் நேரத்தைக் கரைக்கும் அறியாமையைக் கண்டு மனதுக்குள் நகைத்திருக்கின்றான்.

மின்ரதம் வந்தது. 'சிகரட்' புகைக்க அனுமதிக்கப்பட்ட பெட்டிக்குள் சனங்களோடு சனமாக நெருங்கியடித்து இருக்கை ஒன்றில் அமர்ந்தவன், சுற்றுமுற்றும் பார்வையை ஓடவிட்டவனாய், 'சிகரட்' ஒன்றை உருவியெடுத்து வாயில் பொருத்திக்கொண்டான்.

அப்போது அவசர அவசரமாக ஒரு சோடி உள்ளே வந்து செந்திலின் எதிரே வெறுமையாக இருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டனர். பார்த்தவன் திகைத்தான். அவளும் செந்தில் என்ற இலங்கையனை அங்கே எதிர்பார்க்காதது போல் பயம் கலந்த திகைப்பைக் கண்களில் படரவிட்டவள், மறுகணம் பார்வையை வேறுபுறமாகத் திருப்பிக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுப்பு நிற நீல ஜக்கற். பொருத்தமான கலரில் ஜீன்ஸ். காதுகள் இரண்டிலும் தூங்கும் 'ஜிமிக்கிகள். நெற்றியில் சிறிதாக ஒரு சிவப்புப் பொட்டு. தலையை மேவி வாரிப் பின்னால் கட்டியிருந்தாள். உயரமும் நிறமும் அங்க அமைப்புக்களும் அவள் ஒரு பதினாறின் பருவத்தில் நிற்கும் இலங்கைத் தமிழ்ப் பெண் என்பதை ஐயமின்றித் தெரிவித்தன.

அவளுடன் உரசியவாறு அமர்ந்திருப்பவன் ஜேர்மன் நாட்டு வாலிபன். முடியைக் கட்டையாக வெட்டிக் கண்ணியமானவன்போலக் காணப்பட்டான்.

அவளின் கையைப்பற்றி ஏதோ கூறிச் சிரித்தான் அவன். மெதுவாகக் கையை அவனின் பிடிக்குள் இருந்து விலக்கியவாறு செந்திலின் பக்கமாகப் பார்வையைச் செலுத்தியவள், தயக்கத்துடன் தலையைக் குனிந்து கொண்டாள்.

கவனித்தும் கவனிக்காததுபோல் யன்னல் வழியாக வெளியே பார்வையைச் செலுத்த முற்பட்டாலும், செந்திலின் கண்கள் அவர்களின் பக்கமே நோக்கத் துடித்தன.

அவள் கைப்பையைத் துழாவி 'சிகரட் பைக்கற்' ஒன்றை வெளியே எடுத்தாள்.

"MARLBORO LIGHTS" சாம்பல் கலரில்.

அது அவனுள் விநோத உணர்வுகளைக் கிளர்ந்தெழச் செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எங்கடை பெட்டை சிகரட் பிடிக்குது.'

இலங்கைப் பெண்கள் இந்நாட்டவருடன் குடும்பம் நடாத்துவதை அறிந்தாலும், கண்முன்னால் ஒரு இளம் சோடியைப் பார்ப்பது இதுதான் முதல்தடவை.

அதுவும் அவள் சிகரட் புகைப்பது அவனுக்கு என்னவோ போலிருந்தது.

'ஆணுக்குள்ள உரிமைகள் பெண்ணுக்கும் கிடைக்க வேண்டும். பெண்ணும் ஆணும் சமுதாயத்தின் சமபங்கினர்' என்று பலருடன் வாதிட்ட செந்திலால் ஏனோ அவள் புகைப்பிடிப்பதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

என்னதான் வெளியில், 'பெண்ணுரிமை வேண்டும்' என்று பேசினாலும், தனக்குள்ளும் ஓர் ஆணாதிக்க வெறிபிடித்த மனது உள்ளதை அப்போதுதான் அவனால் உணர முடிந்தது.

ஒரு ஆண் வேற்று நாட்டவளுடன் கூடிக் குலாவலாம் என்றால், ஒரு பெண்ணால் ஏன் முடியாது?

அந்தப் பெண் அந்த ஜேர்மன்கார இளைஞனை எந்த நிலையில் காதலனாக ஏற்றுக் கொண்டிருப்பாள்?

'சீதனம்' என்ற பேயை நெருங்கவிடாமல் தடுக்கவா? அல்லது தாய்நாட்டுக்குத் திரும்பிப் போக நேரிடாது என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்ப்பா? அல்லது பாடசாலையில் சகல மாணவியரும் சோடி சேர்ந்திருக்க, தான்மட்டும் சோடியில்லாமல் இருந்தால், தன்னை ஒதுக்கிவிடுவார்கள் என்ற பயத்தினாலா?

எதுவோ ஒன்று அவளை அவனுடன் சேர்த்திருக்கிறது.

சிலவேளை வெறும் உடல் கவர்ச்சியாகக்கூட இருக்கலாம். ஜேர்மனியில் வெறும் உடல் கவர்ச்சியாலேயே பலர் இணைகிறார்கள்; பிரிகிறார்கள்; வேறு சோடிகளாக உருவாகிறார்கள்.

அப்படியொரு நிலை இவளின் வாழ்விலும் இடம்பெறக் கூடிய சாத்தியங்களே பெருமளவில் உள்ளதால், அப்போது இவளின் வாழ்வு எவ்வாறிருக்கும்?

வேறொரு வாலிபனுடன் சேர்வாளா? அல்லது 'தமிழ்ப் பண்பாடு' என்று காலமெல்லாம் தனிமையில் கழிப்பாளா? அல்லது தனக்கேற்பட்ட களங்கத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி வாழ்வாளா?

பலதரப்பட்ட கேள்விகள் மனதைக் குடைய, அவளை நோக்குவதும், அவளின் பார்வையைச் சந்திக்க நேரும்போது மறுபுறம் பார்ப்பதுமாக இருக்கையில் தவித்தான் செந்தில்.

அவளுக்குத் தற்போது சிறிது தைரியம் வந்திருக்க வேண்டும். அந்த இளைஞனின் தோளில் தலைசாய்த்தவாறு ஏதோ பேசிக் கொண்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'முக்காடு நனைந்த பிறகு முழுதும் நனைந்தால் என்ன?' என நினைத்திருப்பாளோ?

செந்திலால்தான் அவர்களைத் தைரியமாக நிமிர்ந்து நோக்க முடியவில்லை. 'காணாததைக் கண்டவனைப்போல்ப் பாக்கிறானே?' என்று நினைப்பார்களோ என்ற எண்ணம்.

அந்தநிலையில் ஏதோ, அவர்களைக் கண்டு பயப்படும் குற்றவாளியின் நிலையில் தானிருப்பதை அவனால் உணர முடிந்தது.

'அதற்குக் காரணம் தன் மனவிகாரங்களோ' என்ற கேள்வி முதல் தடவையாக அவனுள் துளிர்த்தது.

'அவளைப்பற்றி ஏன் சிந்திக்க வேண்டும்? கவலைப்பட வேண்டும்? ஆராய வேண்டும்?'

'என்னதான் பெண்ணுரிமை, பெண் சமத்துவம்' என்று பேசினாலும், 'தமிழ்ப் பெண் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும்: இப்படித்தான் வாழவேண்டும்' என்ற எண்ணம் விகாரமாக மனதுள் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது என்பதை உணர்ந்தபோது....

தன் மனவிகாரங்களுக்காக செந்திலால் அப்போதைக்கு வெட்கப்படத்தான் முடிந்தது!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்ப்பங்கள்

அகிலன் தனது குழந்தையின் முதலாவது பிறந்ததின விழாவுக்கு அழைத்திருந்தான்.

மலிவான கடையொன்றில் பிளாஸ்ரிக் விளையாட்டுப் பொருள் ஒன்றை வாங்கி, வர்ணப் பூப்போட்ட கடதாசியால் சுற்றி, சிவப்பு நாடாவொன்றால் கட்டிக்கொண்டு பிறந்தநாள் விழா நடைபெறும் மண்டபத்தை அடைந்தான் காந்தன்.

போகும்போது கழுத்தைத் தடவிக் கொண்டான். சங்கிலி தடக்கியது. மோதிரம் பளிச்சிட்டது. மணிக்கூட்டைத் திருப்பினான். தங்க முலாமிட்ட சங்கிலியிலான கடிகாரம் குலுங்கிப் பளபளத்தது.

இவைகளைப் போட்டுக்கொண்டு போனால்தான் கணக்கெடுப்பார்கள். மண்டபத்துக்கு வெளியே சில தமிழர்கள் தமக்குள்ளே சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து ஏதோ கூடிக் கதைத்தவாறு இருந்தார்கள். உள்ளே நுழைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூமில டீசைவானயல –நிமலன் என்ற மினுங்கலாலான பெரிய எழுத்துக்கள் மண்டபச் சுவரில் தொங்கியவாறே வரவேற்றன.

உள்ளே பலர் குழுமியிருந்தார்கள். எங்கும் ஒரே பேச்சொலிகள். பெற்றோரின் கண்காணிப்பில் இருந்து விலகிய பிள்ளைகள் அந்த மண்டபம் முழுவதும் ஓடியாடிக் கூச்சலிட்டவாறு திரிந்தார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் அது விளையாட்டு. பெரியவர்களைப் பொறுத்தவரையில் அது அவர்களின் உரையாடல்களுக்கு இடையூறு.

அவர்களைக் கூப்பிட்டுப் பக்கத்தில் இருத்துவதற்கு அம்மாவுக்கு மனம் வராது. பட்டுப்புடவை கசங்கிப் பாழாய்ப் போய்விடுமே என்ற பயம். அப்பாவும் அப்படித்தான்.

அவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தால் தாய் நாட்டின் நிலைமைகளைப்பற்றி நாலு வார்த்தை கதைத்து ஏனையோருக்குத் தனது மேதாவிலாசத்தைக் காட்ட முடியாதே என்ற தவிப்பு.

'மக்களே! நீங்கள் எங்களைத் தொந்தரவு செய்யாவிட்டால் சரி. இது பிறந்தநாள் விழா.'

அந்தச் சின்னஞ் சிறிசுகளின் சிற்றுண்டிகளும், கை துடைக்கும் கடதாசிகளும், பலகாரம் சுமந்த மட்டைத் தட்டுகளும் அந்த மண்டபம் முழுவதுமாய்த் தாறுமாறாய் நிறைந்து கொண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களைப்பற்றிக் கவனிக்க எவருக்கு நேரம்?! வீட்டு வேலைகளாலும் சமையல்களாலும் வீடியோத் தமிழ்ப் படங்களாலும் வீட்டுக்குள்ளே முடங்கி வாழும் பெரியவர்களுக்கு இப்படியான விழாக்கள்தானே சந்திப்பு மகாநாடுகளின் ஊக்குவிப்பு நடுவம். அந்தச் சந்திப்பில்தான் எத்தனை விதம் விதமான கருத்துக்களும், கதைகளும் கனதியாகப் பரிமாறப்படுகின்றன.

கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்தான்.

நேரம் இரவு எட்டு மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. இன்னும் அகிலனையோ, அவனது மனைவியையோ அல்லது பிறந்தநாளுக்குரிய நிமலனையோ அங்கு காணவில்லை.

மண்டபத்துள் முன்னால் அமைந்திருந்த சிறு மேடையில் உள்ள மேசை ஒன்றில் அழகாக அடுக்கப்பட்ட பலகாரங்களின் நடுவே 'கேக்' ஒன்று மிகவும் கம்பீரமாக, ஒரேயொரு சிறிய மெழுகுதிரியைத் தாங்கிக் கொண்டிருந்தது.

வீடியோக் கமராக்காரர்கள் பரபரப்பாகத் தமது கடமையில் ஈடுபட்டிருந்தார்கள்.

எவரோ ஒரு அறிமுகமில்லாதவர் பலகாரத் தட்டு ஒன்றைக் காந்தனின் கைகளில் திணித்துவிட்டு அவசர அவசரமாக அடுத்தவரை நாடிச் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அண்ணை...."

ஒருவர் தயக்கத்துடன் வந்து நெருங்கி நின்றார்.

'என்ன?' என்பதுபோலப் பார்த்தான்.

"நீங்கள் ஏதாலும் பாவிக்கிறதெண்டால் அந்த அறைக்குப் போங்கோ... அங்கை எல்லாம் கிடக்கு...."

அவர் சுட்டிக்காட்டிய அறையைத் திரும்பிப் பார்த்தான். பல ஆடவர்கள் அங்கே குழுமியிருப்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன.

"பியரும் இருக்கு.... குறை நினையாமைத் தேவையானதை நீங்களே எடுத்துக் கொள்ளலாம்."

அன்பான உபசரிப்பு.

"நன்றி..."

அவர் போய்விட்டார்.

காந்தன் குடிப்பழக்கம் இல்லாதவன் இல்லை. எனினும் இவ்வாறான பொது இடங்களில் மதுபானம் பாவிப்பதால் ஏதாவது வம்பை விலை கொடுத்து வாங்க நேரிடலாம் என்ற எண்ணம் அவனை அங்கே செல்லவிடாமல் தடுத்தது.

எட்டரை மணியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகிலன் குடும்ப சமேதராக மண்டபத்துள் நுழைந்தான்.

"ஹாய்....! ஹலோ...!!" என்ற அறிமுக அழைப்புகளில் சில நிமிடங்கள் கரைந்தன.

கறுத்தநிறக் கோட் சூட்டில் அந்த ஒரு வயதான குழந்தை நிமலன் 'கேக்'கின் முன்னால் நிறுத்தப்பட்டான்.

பாவம் குழந்தை. சிவந்த கண்களால் அலங்க மலங்க விழித்தவாறு தூக்கக் கலக்கத்துடன் தள்ளாடியபடியே, அப்பா அம்மா அருகிருக்க ஒருவழியாகக் 'கேக்'கினுள் கத்தியை நுழைத்தது.

"ஹப்பி பேர்த் டே டூ யூ...!!"

மண்டபம் எங்கும் ஒருகணம் ஒருசேரக் கோரஸாகியது.

"ஓமோம், இப்பவாகிலும் சந்தோஷமாய் இருங்கோ.... அங்கை எத்தினையோ சனம் சாகுது.... இங்கை இதுதான் இல்லாத குறை...."

பக்கத்து அறை வாசலில் இருந்து கர்ணகடூரமாக ஒருகுரல் ஒலித்தது.

'யார் இந்த நேரத்தில் அபசகுனம்மாதிரி....' என்று திரும்பிப் பார்த்தான் காந்தன்.

எந்தச் சூழ்நிலையில் எதைப் பேசுவதென்று சிலருக்குத் தெரிவதில்லை. அந்தந்த இடத்தில் பொருத்தமானவற்றைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினால்தான், அவை காத்திரமானவையாகவும் பெறுமதியானவையாகவும் ஏற்கப்படும் என்பதைச் சிலர் புரிய மறுக்கிறார்கள்.

அங்கே ஒருவர் குடிபோதையில் தள்ளாடிக் கொண்டிருந்தார். குடிவெறியில் அவருக்கு ஞானம் பிறந்திருக்கிறது...!

அந்த ஞானம் பிறந்தநாளையே குழப்பி வீண் பிரச்சனைகளை வளர்த்துவிடுமோ என்ற பயத்தில் அவரை நெருங்கினான் காந்தன்.

"அண்ணை.... இந்த நேரத்திலை என்ன கதையிது?"

"வந்து தம்பி, இந்த நேரத்திலை கதையாமை எப்ப கதைக்கிறது? நான் பிழையாயே கதைக்கிறன். எங்கடை நாட்டைப்பற்றியெல்லே கதைக்கிறன். நாலுபேருக்கு எங்கடை நாட்டைப்பற்றித் தெரிய வேணும்...."

"அது எல்லாருக்கும் தெரியும்.... இப்ப பிறந்தநாளுக்கு வந்திருக்கினம்."

"பிறந்தநாள் தேவையே...? இல்லைத் தெரியாமைத்தான் கேக்கிறன், பிறந்தநாள் தேவையே...?!"

"உதைப் பிறந்தநாளிலை தாற தண்ணியளைக் குடிச்சுப்போட்டே கேக்கிறது?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன தம்பி, கதை ஒருமாதிரிப் போகுது? என்னையே கேள்வி கேக்கிறீரோ.... நான் ஆர் தெரியுமே?"

"இப்ப சத்தம் போட்டு எல்லாத்தையும் குழப்பப் போறியளோ?"

"ஓம். குழப்பத்தான் போறன். உன்னாலை ஏலுமெண்டால் நிப்பாட்டிப் பார். உனக்கு என்னைப்பற்றித் தெரியேலை... நான் ஆடும் எண்டால் எல்லாம் ஆடும்...."

"ஓமோம். இப்ப எல்லாம் ஆடும்தான்...."

"என்ன நக்கலோ..." என்று கத்தியவரை மேலும் பலர் சூழ்ந்து கொள்ளக் காந்தனை ஒருவர் கையைப் பிடித்து அப்பால் அழைத்துச் சென்றார்.

"நீங்கள் ஏன் அந்தாளிட்டைப் போய் வாயைக் குடுத்தனீங்கள்? இப்பிடியானதுகளைத் திரும்பிப் பாக்கக் கூடாது."

"இல்லை. இந்த இடத்திலை கூச்சல் போடுறாரே எண்டு போனன்."

"இவரோ... இப்பிடியான ஆக்களைக் கணக்கெடுக்கிறதாலைதான் வீணான குழப்பங்களும் பிரச்சினையளும் வருது. ஓசியிலை குடிச்சுப்போட்டு ஆர்ப்பாட்டம் செய்யவெண்டே சிலபேர் இருக்கினம். இவை தரவழியள் ஆக்களைக் கண்டால்தான் வெறி எண்ட சாட்டிலை கூடக் கூடத் துள்ளுவினம். ஏன் எண்டு திரும்பிப் பாராமை இருங்கோ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருக்கா ரண்டுதரம் கத்திப்போட்டுத் தங்கடைபாட்டிலை ஓரமாய் ஒதுங்கிவிடுவினம்."

உண்மைதான்.

"பாவம். குடிவெறியிலை தள்ளாடுதுகள் எண்டு இவையளுக்கு உதவி செய்யப்போனால், அதைவிட வில்லங்கம் வேறை எதுவுமே இல்லை. றோட்டிலை விழுந்து படுப்பினம். போற வாறவையோடை கொழுவுவினம். கண்ணாடியளைப் போத்திலளை உடைச்சு விலாசம் காட்டுவினம். பக்கத்திலை ஒருத்தர் இருக்கிறார் எண்ட துணிவுதான் இதுகளுக்குக் காரணம். இவையளைக் கவனியாமை விட்டால் தங்கடைபாட்டிலை ஒழுங்காய் வாலைச் சுருட்டிக்கொண்டு வீட்டை போய்ச் சேருவினம். பாம்புக்குப் பக்கத்திலை போனால் படமெடுக்கத்தான் செய்யும். இன்னும் கிட்டப் போனால் கொத்தி விசத்தைத்தான் கக்கும். இவையளும் பாம்புகள்மாதிரித்தான்."

பொது இடங்களில் மற்றவர்களின் எண்ணங்களுக்கு மதிப்புக் கொடுக்காமல் தான்தோன்றித்தனமாகச் செயற்படுபவர்களைச் சர்ப்பத்துக்கு ஒப்பிட்டதில் நியாயமிருப்பதாகத் தென்பட்டது காந்தனுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுதுளி

"அப்பா...!" என்று கூவியவாறு கையில் ஒரு கடதாசியுடன் ஓடிவந்தாள் சர்மிளா. பத்து வயது. என்னுடைய செல்ல மகள். இரண்டு பொடியங்களுக்குப் பிறகு பிறந்த பெட்டைப்பிள்ளை. அதனால் செல்லம் கொஞ்சம்கூட. பிள்ளைகளைத் தடியெடுத்து அதட்டினால் அவர்கள் தாழ்வு மனப்பான்மைக்கு ஆளாகிவிடுவார்களோ என்ற அச்சத்தில் அவர்களின் சுதந்திரத்திற்கு அவ்வளவு கட்டுப்பாடு கிடையாது.

அதுவும் சர்மிளாவுக்கு அறவே கிடையாது. அதனாலோ என்னவோ அவளது துடியாட்டம் அளவுக்கு அதிகம். ஆனால் அந்தத் துடுக்குத்தனத்தில் பல சமயங்களில் என் மனச்சஞ்சலங்களை மறந்ததும் உண்டு.

"அப்பா...!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னடா?"

"இதைப் பாத்தீங்களா?"

கையிலிருந்த கடதாசியைத் தூக்கிக் காட்டினாள்.

"ஆரோ நல்லாய்க் கீறியிருக்கினம்...!" என்றபடி அந்தக் கடதாசியில் இருந்த படத்தை நோட்டமிட்டேன்.

வானத்திடையே சாந்தத்தை உமிழும் வதனத்துடன் ஒரு மாது. இரண்டாவதாக சாதாரண வீடொன்றின் தரையில் தலைவிரிகோலமாய் முழந்தாளில் முகம் புதைத்திருக்கும் பெண்ணொருத்தி. மூன்றாவதாக கசங்கிய ஆடையுடன் வெறுங்காலால் தரையில் தடம் பதித்து நேரிய பார்வையுடன் அவசரமாகச் செல்லும் நடுத்தர வயதான நங்கை. இந்த மூன்று பெண்களின் பின்புறமாகத் தூரத்தே தெரியும் அடர்ந்து ஓங்கி வளர்ந்த மரங்கள். இவைகள்தான் கரிய கிறுக்கல்களில் ஓவியமாகக் காட்சியளித்தது.

"அப்பா... இந்தப் படம் நல்லாயில்லை. நீங்கள் பொய் சொல்லுறீங்கள்!"

"ஏனடா...?"

"எல்லாம் கறுப்பாய்க் கிடக்கு. கலர் குடுத்திருக்கலாம் தானே.. நான் குடுக்கட்டே...."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கறுப்பும் வடிவுதான்டா..."

"இல்லை.... கறுப்பு அழுகல். எனக்குப் பிடிக்காது. பள்ளிக்கூடத்திலை பெஞ்சமின் கூடச் சொல்லுறவன்..."

"என்னெண்டு...?"

"நான் கறுப்பாம். என்னோடை விளையாடமாட்டன் எண்டு."

திடீரென ஏதோ நெஞ்சில் கனமாக அழுத்துவதுபோன்ற பிரமையில் மனம் துணுக்குற்றது.

நாங்கள் புலம்பெயர்ந்ததனால் ஏற்படப்போகும் பாதிப்பை இந்தப் பிள்ளைகள்தான் அனுபவிக்கப் போகிறார்களோ?

ஆதாம் ஏவாளின் பாவம் மனித இனத்தையே பற்றியதுபோல, புலம்பெயர்ந்த தமிழரின் செயல் அவர்களின் சந்ததியையே பயமுறுத்தப்போகிறதா?

சர்மிளாவைக் கிட்ட இழுத்து அணைத்து முன்நெற்றியில் வழிந்த கேசத்தைக் கோதிவிட்டேன்.

என்னால் இதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்?

வாழும்வரையில் அன்பு ஒன்றைத்தான் தர முடியும் மகளே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சம்மி..."

"ம்...."

"சிலருக்குக் கறுப்புப் பிடிக்காது. சிலருக்கு வெள்ளை பிடிக்காது."

"எனக்கும் கறுப்புப் பிடிக்காது. சிவப்புத்தான் விருப்பம்..."

"உனக்குச் சிவப்பிலை விருப்பம்.... இப்ப ஊரிலை எல்லா இடமும் சிவப்பாய்த்தான் கிடக்கு..."

"அப்ப நாங்களும் ஊருக்குப் போவமப்பா...."

"இப்ப நாங்கள் அங்கை போனால் நாங்களும் சிலவேளை சிவப்பாய்ப் போய்விடுவம்..."

"ஐய.... என்னைக் கூட்டிக்கொண்டு போப்பா..."

"உனக்கு ஊருக்குப் போக விருப்பம். ஆனா ஊரிலை இருக்கிறவைக்கு எங்கை போறதெண்டு தெரியேலை.... அவைக்குச் சிவப்பெண்டால் சத்திராதி..."

"மொக்கு மொக்கு.... எனக்குச் சிவப்புத்தான் நல்ல விருப்பம்."

"எங்களிலை கனபேருக்கும் சிவப்புத்தான் விருப்பம்.... அப்பதான் இங்கை இருக்கலாம்...."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குழந்தையோடை என்ன கதைக்கிறியள்.... அவளுக்கு உதெல்லாம் விளங்குமே...." என்றவாறு வந்தாள் சாந்தி.

எனது மனைவி.

"சம்மிக்கு இப்ப எத்தினை வயசு...? பத்து. இதுகளைச் சொன்னால்தான் கொஞ்சமாலும் விளங்கும். அவள் வளர வளர நாங்கள் ஆர்.... எங்கை இருந்து எப்பிடி வந்தனாங்கள்.... எதுக்காக இங்கை இருக்கிறம் எண்டதெல்லாம் தெரியவேணும்..."

"ஓமப்பா.... அம்மாவுக்கு ஒண்டும் தெரியாது...."

"ஓமோம்.... தேப்பனும் மேளும் மேதாவியள்தான்.... நேரகாலம் இல்லாமை தேவையில்லாத கதையள்...."

"அம்மா இதைப் பாத்தனீங்களே...!"

படத்தைக் காட்டினாள்.

"அந்த அன்ரி ஏனம்மா மேகத்துக்கை இருக்கிறா...?"

"கொப்பரைக் கேள்!"

"குழந்தை கேக்கிறாளெல்லே...."

"அது சம்மி.... ஒரு அன்ரி குந்தியிருக்கிறாவெல்லே...?"

"ஓ..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்த அன்ரியின்ரை அம்மா தலையிலை சாமான்களைத் தூக்கிக் கொண்டுபோய் சந்தையிலை வித்து வாற காசிலைதான் அந்த அன்ரியும் அம்மாவும் சாப்பிடுறவையாம்...."

"அன்ரியின்ரை அப்பா வேலைக்குப் போறேல்லையா...?"

"ஆருக்குத் தெரியும்...."

"சொல்லுங்கோ. உங்களுக்குத் தெரியும்...!"

"அப்பா...? ஆ.... சாமியிட்டைப் போவிட்டாராம்...!"

"பேந்து..."

"அம்மா உழைக்கிற காசு ரண்டு பேரும் சாப்பிடத்தான் காணுமாம். அந்த அன்ரிக்குக் கலியாணம் கட்டக் காசில்லையாம்.... பொட்டு வைச்சு வடிவாய் இருக்கிறதுக்கு வழியில்லையாம்.... அதுதான் அன்ரி அதை நினைச்சு அழுறா..."

"பாவம் அன்ரி.... அன்ரி கலியாணம் கட்டலாம்தானை...."

"அதுக்குக் காசெல்லே வேணும்.... காசு குடுத்தால்தான் அன்ரியைக் கலியாணம் கட்ட வருவினம்..."

சற்றுநேரம் தலையைச் சாய்த்தவாறு யோசித்தாள்.

"அம்மா.... நீங்களும் காசு குடுத்தே அப்பாவைக் கலியாணம் கட்டினீங்கள்...?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம்.... உன்ரை பாட்டி கொஞ்சமே கேட்டவ..."

"இப்ப ஏனப்பா உதுகள்?"

"ஏன் இதுகளையும் அவள் அறிஞ்சு வைக்கட்டுமே.... எங்கடை ஆக்கள் என்னமாதிரி எண்டு..."

"ஓ... எங்கடை ஆக்களுக்கு டொக்டரோ இஞ்சினியரோ வாத்தியாரோதான் மாப்பிளையாய் வர வேணுமெண்டால் அவையளும் அதுக்கேத்தமாதிரிச் சீதனம் கேப்பினம்தானே.... ஆரையும் ஆரும் கட்டலாம் எண்டு பொம்பிளையள் வெளிக்கிட்டால் ஏன் சீதனப் பிரச்சினை வருது...? உத்தியோகத்தையும் வசதியானவையையும் சீதனம் குடுத்துக் கட்டப் பொம்பிளையள் இல்லையெண்டால் அவையளும் சீதனம் கேப்பினமே..."

"ஓமோம்.... நீங்கள் உங்களை விட்டுக்குடுப்பியளே.... தாய் தேப்பன் மேளோ மேனோ நல்ல இடத்திலை வாழவேணும் எண்டுதான் விரும்புவினம். அதுக்காகக் கேக்கிறதைக் குடுக்கினம். இதை ஆம்பிளையள் தங்களுக்குச் சாதகமாய்ப் பயன்படுத்தீனம்..."

"நீங்கள் கதைக்கிறது எனக்கு விளங்கேலை..." என்று சிணுங்க ஆரம்பித்தாள் சர்மிளா.

"அம்மா உப்பிடித்தான்.... கண்டதெல்லாம் கதைப்பா. படத்தைப் பாரடா சம்மி.... அந்த அன்ரி கலியாணம் கட்டேலை எண்டதுக்காக அழேலை...."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்ப...?"

"அவவின்ரை அக்காவோ தங்கச்சியோ சாமியிட்டைப் போவிட்டாவாம். அதுதான் அழுறா..."

"செத்துப் போனாவோ?"

"ஓம். செத்துத்தான் போனா..."

"ஏனப்பா செத்தவ?"

"இப்ப ஊரிலை சனங்கள் செத்துக் கொண்டுதான் இருக்கினம்..."

"ஏனப்பா...?"

"அவையள் தமிழராய்ப் பிறந்து போட்டினம். ஏனெண்டு கேக்கிறதுக்கும் ஆருமில்லை.... அதாலை செத்துக் கொண்டிருக்கினம்...!"

"ஆமிக்காரன் குண்டு போடுறானோ...!"

"ஓமடா.... ஆமிக்காரன் குண்டு போடுறான். சுடுறான்.... கனபேர் சாகினம்.... அப்பா அம்மாவைக் காணாமைக் கதறுகிற குழந்தையள்.... குழந்தையளைக் காணாமை அழுற அப்பா அம்மா.... கால் கையள் இல்லாமைத் துடிக்கிற பெரியாக்கள்.... சம்மியைப்போலை சின்னப்பிள்ளையள்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காலில்லாட்டி.... எப்பிடி நடப்பினம் அப்பா?"

"ஆராலும் உதவி செய்வினம்..."

"கையில்லாட்டி எப்பிடிச் சாப்பிடுவினம்...?"

"ஆராலும் தீத்தி விடுவினம்..."

"தீத்திவிட ஆரும் இல்லாட்டி...?"

'யாரும் இல்லையெனில்.... எவரும் இல்லையென்றால்...?'

நினைத்துப் பார்க்கவே பயங்கரமாக இருந்தது. நெஞ்சம் ஒருகணம் இயங்காமல் மரத்தது.

"இருக்கினம் சம்பி.... அவைக்குச் சாப்பாடு குடுக்க.... பக்கத்திலை இருந்து ஆறுதல் சொல்ல, இந்தக் கஸ்டங்களுக்கையும் ஆக்கள் இருக்கினம்...."

"ஏனப்பா..."

"ம்...."

"அவையள் நெடுக இருப்பினமோ....?"

"ஓமடா. நெடுக இருப்பினம்.... அங்கை தமிழாக்கள் இருக்குமட்டும் அவையளும் நெடுக இருப்பினம்.... எல்லாற்றை மனங்களிலையும் அவையள் நெடுக இருப்பினம்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டை அடைத்தது. குரல் கம்மியது.

"ஏனப்பா அழுறியள்...?"

"என்னாலை அழத்தான் முடியும் சம்மி...."

"நாங்களும் அங்கைபோய் அவையளுக்குச் சோறு தீத்தி விடலாம்தானை....?"

"அங்கை போற தைரியம் இருந்தால் நாங்கள் ஏன் இங்கை வந்திருக்கிறம்...? அங்கை போகாட்டாலும் சோறு குடுத்தால் காணும். அவை தீத்திவிடுவினம்..."

"அங்கை சோறில்லையே...!"

"சோறிருந்தாலும் வேண்டக் காசெல்லே வேணும்...."

"அப்ப காசை அனுப்பிவிடுவம்...."

"ஓம் சம்மி.... நாங்கள் காசைத்தான் அனுப்பலாம். அதையாலும் அனுப்பத்தான் வேணும்.... அந்த அன்ரியின்ரை அம்மாவைப் பாரடா.... என்ன நடந்தாலும் பரவாயில்லை எண்டு.... ஆமிக்காரன் குண்டு போட்டாலும் பரவாயில்லை எண்டு கடகத்தைத் தலையிலை சுமந்துகொண்டு போறாவே.... சோத்துக்காகத்தானடா போறா...."

சர்மிளா திடீரென உள்ளறையை நோக்கி ஓடினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சம்மீ...."

"பொறு அப்பா...."

ஐக்கியம் ஒன்றியம் சமத்துவம் விழிப்பு

அதன் உரமாய்ப்போட்டிடுவோம்!

விடியல் என்ற கலப்பையைப் பூட்டி

விளைநிலம் உழுதிடுவோம்!

அதிலொரு பயிராய் உருவிடும் களையை

அறுத்தே வீசிடுவோம்!

அங்கே முளைக்கும் சுதந்திர பாலகர்

இனிதா யெழும்பயிர்கள்!

– (கோசல்யா சொர்ணலிங்கம்)

"அப்பா, இதையும் அனுப்பிவிடுவம்!" என்றவாறு தனது உண்டியலுடன் வந்தாள் சர்மிளா.

பத்துப் பெனிக் ஐம்பது பெனிக் என்று சிறுகச் சிறுகச் சேர்த்த அவளது சேமிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் சம்மிக்குட்டிக்கு இன்றைய நிலைமையில் என்ன செய்ய வேண்டுமென்பது ஓரளவுக்காவது புரிந்துவிட்டது.

அவளது இந்தச் சிறுதுளி வருங்காலத்தில் பெருவெள்ளமாக மாறும்.

ஏனெனில் அவள் ஒரு தமிழச்சி.

பெனிக் – ஜேர்மன் நாணயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசம் இழந்த மலர்கள்

செந்தணலாக ஜொலித்துச் சிவந்திருந்தது மாலைநேரத்து வானம். சூரியனின் அஸ்தமனத்தின் முன்னே தினமும் வானத்தில் நிகழும் போராட்டத்தால் பீறிட்டெழும் செந்தணல் ஒளிக்கீற்றுக்கள் வரிவரியாக முகில் கூட்டங்களில் பட்டுத் தெறிக்கும் காட்சி அது.

நாளை சூரியன் மீண்டும் உதிப்பான். மீண்டும் மறைவான். அப்போது வானம் மீண்டும் இரத்தச் சிவப்பாகிக் களரியாகும். இதேபோல் தாயகத்தில் எத்தனையோ உயிர்கள் விடுதலைத் தீயில் மரணிக்கின்றன. அவற்றின் மறைவு தமிழ் மண்ணை இரத்தத்தால் நனைக்கும். அந்த இரத்தப் பதிவுகள் காயும் முன்னே பல்லாயிரம் மக்கள் விடுதலை வேள்விக்காய்த் தோற்றமாவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிகழ்வுகள் கற்பனைகள் அல்ல. கண் முன்னே நீண்டு விரியும் தியாகப் பரிமாற்றங்கள். எனினும் தோற்றங்களினால் ஏற்படும் இறுமாப்புடனான பூரிப்புகள், இழப்புகளின் தாக்கத்தில் தள்ளாடும் அவலத்தை மாதவனால் தவிர்க்க முடியவில்லை.

10.07.1995 காலை நேரம்.

முதல்நாள் இரவு றெஸ்ரோரண்ட் அடுப்படி ஒன்றில் சட்டி பானைகளுடன் வேலை என்ற பெயரில் போராடிக் களைத்துப் போனவனாய் அறைக்கு வந்து படுக்கையில் விழுந்தவனைத் தொலைபேசியின் அலறல் துயில் கலைய வைத்தது.

மாதவனால் கண்களைத் திறக்க முடியவில்லை. எரிந்தன. கை மூட்டுக்கள் இரண்டும் வலித்தன. றெஸ்ரோரண்டில் மணித்தியாலம் பன்ரெண்டு மார்க்– நல்ல சம்பளம் என்ற பெயர். ஆனால் ஒரு நிமிசம்கூடக் களைப்பாற முடியாதவாறு வரிசையாக வந்து குவியும் எச்சில் கோப்பைகள், பிளாஸ்ரிக் வாளிகள், சட்டிகள், அண்டாக்கள் என்று அவனது மனிதவலு அவைகளால் உறிஞ்சப்படும்போது, 'இப்படி ஒரு வேலை தேவைதானா?' என்ற வெறுப்பு மேலோங்கும்.

வேலையைச் சுலபமாகத் தூக்கி எறிந்துவிடலாம். அதனால் முதலாளிக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை. அந்த வேலைக்குப் போட்டிபோட எத்தனையோ மூன்றாம் உலக நாட்டவர்கள் வரிசையில் முண்டியடிப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வேலை போனால், அவனை நம்பித் தாயகத்தில் ஏற்படும் தேவைகளை மாதம் ஒருதடவையாவது வரையும் கடிதத்தில் அதிகரித்துக்கொண்டே போகும் குடும்பத்தினரை நினைக்கையிலே, அவனது களைப்பும் அலுப்பும் வில்லங்கமாக விலகி நிற்கும்.

யுத்தம் என்று ஒன்று ஏற்படும்போது அழிவுகளும் இழப்புக்களும் தவிர்க்க முடியாதவை என நன்கு தெரிந்தும், பிறந்த மண்ணில் வாழ்ந்தே தீருவோம் என்று உறுதியுடன் வாழும் குடும்பத்தினரின் அற்ப சொற்ப தேவைகளைக்கூட நிறைவேற்றாதுபோனால், பிறந்ததில் என்ன அர்த்தம் உண்டு எனும் வினாவின் விடையால் தன் உடலை உழைப்பாக்கினான் மாதவன்.

தொலைபேசி ஓயாது அலறியது.

"ஹலோ..."

"மாதவன்.... நான் நாதன் கதைக்கிறன். ரீவி பாத்தனியே?"

"ஏன்.... என்ன விசயம்?"

"பத்தாயிரம் ஆமி குடாநாட்டிலை இறங்கி இருக்காம். அங்கை சரியான சண்டை நடக்குதாம். கொழும்புக்கு ரெலிபோன் எடுத்தனான். உண்மை நிலவரம் என்னவெண்டு அறிய முடியேலை" என்று மறுமுனையில் படபடத்தான் நாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதவனுக்குத் தலைசுற்றியது. உற்றம் சுற்றம் கண்முன்னே வந்தனர்.

பத்தாயிரம் ஆமி! பத்தாயிரம் ஆமி!! தமிழனை அழித்து அதிகார வெறியை இரத்தத்தால் தீர்க்கவெனப் பத்தாயிரம் ஆமி!!!

உள்ளம் குமுறியது. உடல் பதறியது. தொலைபேசியை வைத்துவிட்டு ரீவியைப் போட்டான். செய்தியைக் காணவில்லை. தனக்குத் தெரிந்த தகவல் நிலையங்களுடன் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டான். தகுந்த விபரம் இல்லை.

மனம் நிம்மதியை இழந்துவிட்டது. எதையுமே அறிய முடியாத கையாலாகாத நிலை.

பிஞ்சுக் குழந்தைகள்: நிறைமாதக் கர்ப்பிணிகள்: தள்ளாத வயதில் தடுமாறும் முதியவர்கள்– இப்படியான மக்கள் கூட்டம் துப்பாக்கி ரவைகளுக்காலும் 'செல்' தாக்குதல்களுக்காலும் எவ்வாறு தமது உயிர்களைப் பாதுகாக்கப் போகிறார்கள்? கால் வலிக்க எவ்வளவு தூரம் செல்வார்கள்? பசியால் கதறும் பாலகர்களை என்ன சொல்லிச் சமாளிப்பார்கள்?

பற்பல எண்ணங்கள் மனதைத் தாக்கின. சற்று நேரம் சிந்திக்கும் திறன் மழுங்கிவிட்டது. மூளை மரத்தாற்போன்ற உணர்வு, அதனால் உடல் சிலையான பிரமை. இருந்த இடத்தைவிட்டு அசைய முடியவில்லை. அசையாமல் அப்படியே இருந்தால் போதும்போலவும் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிகாரம் வேலைக்கு நேரமானதை அறிவித்தது.

'வேலை செய்ய ஏலாது. எதையும் இப்ப செய்யேலாது. இப்பிடியே நீட்டி நிமிர்ந்து படுத்தால் போதும். வேலையாம் வேலை. அங்கை ஊரிலை ஆர் ஆர் என்னபாடுபடுதுகளோ தெரியேலை. உயிரைக் கையிலை பிடிச்சுக்கொண்டு எங்கை அலையுதுகளோ தெரியேலை. இந்த நேரத்திலை கண்டறியாத வேலை' என்று தனக்குள் புலம்பினான்.

'சென்றதினி மீளாது மூடரே! நீர்

எப்போதும் சென்றதையே சிந்தைசெய்து

கொன்றழிக்கும் கவலையெனும் குழியில்வீழ்ந்து

குமையாதீர்! சென்றதனைக் குறித்தல் வேண்டாம்' என்ற பாரதியின் கவிதை வரிகள் நினைவில் எதையோ அச்சுறுத்தியது.

இனிமேல்தான் தாயகத்தின் தேவைகள் அதிகமாகும். அவற்றிற்கான பங்களிப்புக்கு வேலை அவசியம் என்ற தெளிவு தோன்ற, வேலைக்குச் செல்ல ஆயத்தமானான் மாதவன்.

வேலை முடிந்தவுடன் நாதனின் வீட்டிற்குச் சென்றான் மாதவன். அங்கு நாதனின் சகோதரனான ஜீவனும் தனது குடும்பத்துடன் வந்திருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதனின் குழந்தைகள் தூக்கக் கலக்கத்துடன் ரீவி பார்த்துக்கொண்டு இருந்தார்கள். எல்லோரது முகங்களிலும் ஒருவித சோகம் குடியிருந்தது.

"என்ன இந்த நேரத்திலை..." என்றவாறு மாதவனை வரவேற்றான் நாதன்.

"ஏதாலும் புதினம் அறிஞ்சனீங்களோ எண்டு கேட்க வந்தனான். அறைக்குப் போகவும் மனம் கேக்கேலை."

"லண்டன் சன்றைஸ் றேடியோவிலை முந்நூறுக்கும் மேலை சனங்கள்தான் செத்திருக்கெண்டு சொன்னாங்கள். அதிலையும் குழந்தையளும் பொம்பிளையளும்தான் எக்கச்சக்கமாம்.... கோவிலிலையும் பள்ளிக்கூடத்திலையும் போயிருங்கோ எண்டு நோட்டீசு போட்டுட்டு அதுகளுக்குத்தான் அடிச்சிருக்கிறாங்கள்...."

"அப்பா அம்மாவை.... ரண்டு தங்கச்சியளின்ரை குடும்பங்கள் என்ன பாடுபடுதுகளோ தெரியேலை" என்று கவலையுடன் கூறினான் ஜீவன்.

"ஊதுகளுக்காலை அதுகள் தப்பி வந்தால், இனி கொழும்பிலை வீடு ஒண்டை எடுத்து எல்லாரையும் கூப்பிட வேணும் பாவம் அதுகள். காசைப் பாக்காமல் கொழும்பிலையாலும் குடியிருத்த வேணும்" என்று கூறினான் நாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கொழும்புமட்டும் பாதுகாப்பே?' என்று கேட்க நினைத்த மாதவன் நாவை அடக்கிக்கொண்டான்.

'கொழும்புக்கு வந்தால் என்ன.... வேறு நாட்டிற்குப் புலம்பெயர்ந்தால் என்ன.... தமிழனுக்கென ஒரு நாடு இல்லாதவரையில் தமிழனின் வாழ்வு நிம்மதி இல்லாததுதான். எனினும் இவர்கள் தாயகத்திலுள்ள பெற்றோர்கள், சகோதரங்கள் என்ற உறவுகளுக்காய் தங்களால் இயன்றதைச் செய்யவேண்டும் என முனைவது நல்ல செயல்தான்' என்ற எண்ணத்தில் கேட்க நினைத்த கேள்வியை மனதுள் புதைத்துக் கொண்டான்.

'இவ்வாறு புலம்பெயர்ந்த தமிழர்கள் ஒவ்வொருவரும் தன் இனத்திற்காகத் தன்னால் இயன்றதைச் செய்யவேண்டும் என விழைந்தால், தாயகம் போராட்டத்தாலே துவண்டு விடாது. அது வாழும். விடுதலைத் தீயில் புடம்போட்ட தங்கமாக ஜொலிக்கும். அந்த ஒளி எல்லாத் தமிழனையும் அணைக்கும்' என்ற நினைவே இனித்தது.

நாட்கள் நிம்மதியற்று நகர்ந்தன. உறக்கம் தினமும் தூர விலகிநின்று வேடிக்கை காட்டியது. சஞ்சலம் அடைந்த மனம் ஆதரவிற்காய் இறைவனிடம் மன்றாடியது. தாய்நாட்டின் உறவுகளுக்காக, மக்களுக்காக வேண்டி நின்றது.

'தண்ணீர் விட்டோ வளர்த்தோம்? சர்வேசா! இப்பயிரைக்
கண்ணீரால் காத்தோம்: கருகத் திருவுளமோ?'
—(பாரதியார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதற்கும் ஒரு முடிவு.... ஆம்: இனத்தை அழிக்கவென வந்த வெறிபிடித்த படைகளின் பின்நோக்கிய பாய்ச்சலில் மக்கள் தமது சொந்த இடங்களுக்கு மீண்ட செய்தி கேட்டு நிம்மதியடைந்தான் மாதவன். உறவுகளின் உயிர்களுக்கு எவ்வித ஆபத்தும் இல்லை என்ற தகவலால் புத்துணர்ச்சி பெற்றான்.

நாதனைப்பற்றிய எண்ணம் எழுந்தது. அவனது பெற்றோர்கள், சகோதரிகளின் குடும்ப நிலவரம் அறிவதற்காகத் தொலைபேசியைச் சுழற்றினான்.

மறுமுனையில் நாதன்தான் பேசினான்.

"எல்லாம் கடவுள் செயல். எல்லாரும் சுகமாய் இருக்கினம். யாழ்ப்பாணத்திலை வந்து நிண்டவையாம். இப்ப ஊருக்குப் போவிட்டினம்."

"ரொம்பச் சந்தோசம் நாதன். அப்ப இனி எல்லாரையும் கொழும்புக்குக் கூப்பிடப்போறியே?"

"அதிலை ஒரு சிக்கல் மாதவன்.... கொழும்பிலை வீட்டு வாடகை எக்கச்சக்கம்.... இனி அதுகளுக்குச் சாப்பாடு துணிமணி எண்டு கனக்க முடியும். அதோடை தங்கச்சிமாற்ரை பிள்ளையளையும் சும்மா வைச்சிருக்க முடியாது. அதுகளின்ரை படிப்புக்கும் செலவழிக்க வேணும்.... இதெல்லாம் முடியுற காரியமே? அதுகளுக்கு ஊரிலை சண்டை எல்லாம் பழகிப்போச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவைக்கு இதுகள் தூசுமாதிரி...." என்று விலாங்காக வழுக்கிய நாதனின் சொற்கள் வாசம் இழந்த மலர்களாக மாதவனின் செவிப்பாறையில் பட்டுத் தெறித்தன.

சே.... என்ன மனிதர்கள்?!

சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல் தங்களது சுயநலன்களுக்காகக் காரணங்களை உருவாக்கும் பச்சோந்திகள். நினைக்கவே வெறுப்பாக இருந்தது.

யாரங்கே! கூப்பிடுங்கள் பாரதியை!!

'நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே, நீங்களெல்லாம்

சொற்பனந்தானோ? - பல தோற்ற மயக்கங்களோ?

கற்பதுவே கேட்பதுவே கருதுவதே நீங்களெல்லாம்

அற்பமாயைகளோ? உம்முள்ஆழ்ந்த பொருளில்லையோ?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாகா வரம்

கதவைத் திறந்துகொண்டு குளியல் அறையைவிட்டு வெளியே வந்தாள் சகுந்தலா.

இன்னும் சிறிதுநேரத்தில் சந்திரன் வேலையால் வந்துவிடுவான். அதற்குள் எல்லாவற்றையும் தயாராக்க வேண்டும். இல்லையேல் மூக்குநுனியில் கோபம் சிவப்பாக இனம்காட்ட, சந்தர்ப்பம் சூழ்நிலைகளை மறந்து கத்த ஆரம்பித்துவிடுவான்.

தலையை அரைகுறையாக உணர்த்திக் கூந்தலை வாரி நுனியில் சிறிதாக முடிச்சொன்றைப் போட்டுப் பின்னால் தள்ளியவாறு சுவாமி படங்களுக்கு முன்னால் சென்றாள். இயந்திரகதியில் சில ஊதுபத்திகளைப் பெட்டிக்குள்ளால் உருவி, கொளுத்தி, அதன் கமகம வாசனையில் சில விநாடிகள் ஏதோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தேவாரத்தை முணுமுணுத்து முடிக்க முன்னரே சமையலறைக்கு விரைந்தாள் சகுந்தலா.

இரண்டு தினங்களாக அடுப்பு வெப்பத்துடனும் எண்ணெய் மணத்துடனும் போராடிப் போராடிச் செய்து வைத்த சிற்றுண்டிகளை வெள்ளித் தாம்பாளங்களில் இட்டு வரவேற்பறை மேசையில் வரிசையாக அடுக்கினாள்.

அவற்றின் நடுவே வண்ணத்தால் அலங்காரம்செய்த 'கேக்'கைக் கொண்டுவந்து வைத்தாள்.

முன்னால் நின்று பார்த்தாள்.

'வீடியோவுக்கு வடிவாக இருக்கும்.'

இல்லையேல் சந்திரன் துள்ளிக் குதிப்பான். எவர் இருந்தாலும், அவர்களைப்பற்றிக் கவலைப்படாமல் அவளை வார்த்தைகளாலேயே அவமானப்படுத்திவிடுவான்.

இத்தகைய அவமானங்கள் ஆரம்பத்தில் அவளின் இதயத்தை ஈட்டிகளாகத் தைத்து இரத்தமில்லாக் காயங்களை ஏற்படுத்தியது என்னவோ உண்மைதான். இப்படியொரு வாழ்க்கை தேவைதானா.... எத்தனை நாளைக்குத்தான் சந்திரனின் ஆதிக்கத்துக்கு அடிபணிந்து அடங்கிப் போன ஊமையாயிருப்பது? அறுத்துக் கொண்டு போய்விடுவோமோ?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்தில் இப்படியான எண்ணங்கள் ஏற்பட்டதுண்டு. காலப்போக்கில் அவமானங்கள் யாவுமே பழகிப்போனவைகளாய், அவள் 'இதுதான் வாழ்க்கை' என்ற நிலைக்கு வந்துவிட்டாள்.

இன்று அவர்களின் திருமணநாள். இரண்டாவது ஆண்டு.

வேலைமுடித்து நண்பர்களுடன் வருவதாகக் கூறியிருந்தான் சந்திரன். வரும்பொழுது எல்லாம் ஆயத்தமாக இருக்கவேண்டும் என்ற உத்தரவு வேறு.

அந்த 'எல்லாம்' என்பதில் பல அர்த்தங்கள் உண்டு. அது சகுந்தலாவுக்குமட்டும்தான் புரியும்.

மற்றவர்களின் வீட்டு விசேசங்களுக்குக் கொஞ்சம்கூடக் குறையாதவிதத்தில் பலகாரவகைகள்- நாலைந்து கறிகளுடன் சாப்பாடு- நண்பர்களுடன் சேர்ந்து குடிக்கும் தண்ணிக்கு ஏற்றமாதிரிக் காரத்துடன் கூடிய பொரியல்- இவைதான் சகுந்தலாவுக்குப் புரிந்த அந்த 'எல்லாம்'.

'எல்லாம்' தயாராகச் சந்திரனின் வரவிற்காகக் காத்திருக்க, தன்னை அலங்காரம் செய்யவென மேசைக்கண்ணாடியின் முன்னால் சென்றாள் சகுந்தலா.

படாடோபமான அலங்காரம் அவளுக்குப் பிடிக்காததொன்று. எளிமையும் தூய்மையும் அவளுக்கு மிகவும் விருப்பமானவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் சந்திரன்...?!

திருமணநாளில் அவள் எளிமையாக நின்றால்– 'என்ரை மரியாதையைக் கெடுக்கவெண்டே உப்பிடி நிக்கிறாய்? நான் உனக்கொண்டும் வேண்டிக் கொடுக்காமை வீட்டுக்கை பூட்டி வைச்சிருக்கிறன் எண்டெல்லே கதைக்கப் போறாங்கள்?' என்று சீறுவான்.

இந்த இரண்டாண்டுகளில் சந்திரன் கத்துவான்– சந்திரன் துள்ளுவான்– சந்திரன் சீறுவான் என்று அவள் சிறுகச் சிறுகத் தன்னை அவனுக்காக மாற்றியதுதான் அவள் அனுபவித்த வாழ்க்கை.

இரண்டாண்டுகளுக்கு முன்னர்....!

அப்பா வாயெல்லாம் பல்லாக வந்தார்.

"குடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்ச்சுக் கொண்டு குடுத்திருக்கு..."

"என்னப்பா.... என்ன விசயம்...?"

அம்மாவுக்குப் புரியவில்லை.

சகுந்தலாவுக்கும்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கோமளம்.... மூத்தவளுக்கு எப்பிடிக் கலியாணம் காட்சியெண்டு பார்க்கப் போறனெண்டு கவலைப்பட்டன். இப்ப அதுக்கு ஒரு வழியை ஆண்டவன் காட்டியிருக்கிறான். கல்வீட்டுப் பாக்கியம் அக்காவின்ரை பொடியன் ஜேர்மனியிலையெல்லே இருக்கிறான்.... அவன் சகுந்தலாவைக் கேக்கிறானாம்...."

"அவையின்ரை வசதிக்கு உது சரிவருமே?"

"கோமளம்.... அந்தப் பொடியனுக்கு ஒரு சல்லிக்காசுகூடத் தேவையில்லையாம். அழகும் குணமும்தான் முக்கியமாம். அந்தப் பொடியன் தாயைக் கேட்டு எழுதியிருக்கு. தாய்க்குப் பொடியன்ரை சந்தோசம்தான் முக்கியமாம். அதாலை பாக்கியமக்காதான் என்னைக் கேட்டவ. எங்களுக்குச் சம்மதமெண்டால் பொடியன் 'பொன்சர்'பண்ணிக் கூப்பிடுமாம்..."

"எதுக்கும் பிள்ளையிட்டை ஒரு வார்த்தை...."

"கேளன்.... கரும்பு தின்னக் கசக்கவே செய்யும்...?!"

சந்திரனை அவளுக்கு ஏற்கெனவே தெரியும்.

அவனின் உருவம் மங்கலாக மனதில் எட்டிப்பார்த்தது.

இறுதியாக அவனைக் கண்டு ஏழெட்டு வருடங்களாவது இருக்கும். இந்த ஏழெட்டு வருடங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை நினைவில் வைத்துத் திருமணம் செய்ய விரும்புகிறான் என்றால்.... ஒருவிதத்தில் அவளுக்குப் பெருமையாகக்கூட இருந்தது.

மறுபுறம் பெற்றோர்களின் பொருளாதார நிலை- அதில் தனக்கு வலிய வரும் வாய்ப்பை நழுவவிட்டு, பெற்றோருக்குச் சுமையாக வாழக்கூடாது என்ற எண்ணம்- சம்மதித்தாள்.

அதன் பின்னர் அப்பாவும் அம்மாவும் ஒரு இடத்தில் நிலையாக இல்லை.

பரபரப்பாகக் காரியங்கள் நடந்தேறின.

சம்பிரதாயப்படி வீடு தேடிவந்த பாக்கியமக்கா, வாயெல்லாம் பல்லாகச் சகுந்தலாவைக் கட்டிப்பிடித்து உச்சிமோர்ந்த கையோடு.... நல்லதொரு நாளில் கொழும்பு வந்து ஜேர்மனியை அடைந்தாள்.

சந்திரன் விமானநிலையத்துக்கு வந்திருந்தான்.

சொந்தக் 'கார்' இளம் பச்சை நிறத்தில்...

'கண்ணுக்கு அழகான கணவன். வசதியானவன்.... தான் கொடுத்து வைத்தவள்' என நினைத்துக் கொண்டாள் சகுந்தலா.

அவளின் வரவை அறிந்து அவனது நண்பர்கள் குடும்பமாக வந்து குசலம் விசாரித்துப் போனார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொம்பிளை வீட்டிலை நான் ஒரு சல்லிக்காசுகூட வாங்கேலை. எல்லாம் என்ரை செலவுதான். சீலையள் நகையள்கூடச் சிங்கப்பூரிலை இருந்து வாங்கி வந்திருக்கிறன்...." என்று தனது பரந்த மனப்பான்மையைப்பற்றி மூச்சுக்கு முந்நூறுதடவை சொல்லிக்கொண்டான்.

முதலில் அது சாதாரணமாக இருந்தாலும், நாள் செல்லச்செல்ல அது அவளுக்கு முள்ளாக உறுத்தியது.

'தன்னையொரு வாழ வழியற்றவள்' எனப் பலருக்குப் பறைசாற்றுவதுபோல இருந்தது.

'இதற்காகவா சீதனம் வாங்காமல் கலியாணம் கட்டினான்...'

நாட்கள் செல்லச்செல்ல சந்திரனின் சுயரூபம் அவளுக்கு மெல்லமெல்லப் புரிய ஆரம்பித்தது.

"சகுந்தலா.... ரொய்லட்டை வடிவாய்க் கழுவு.... உடுப்பைத் தோய்ச்சு 'அயன்' பண்ணி வை.... சப்பாத்தைத் துடைச்சு வை... தேத்தண்ணி கொண்டு வா... காலைப் பிடிச்சு விடு... பொடியள் வாறாங்கள்- நாலைஞ்சு கறியோடை சமைச்சு வை.... வேலையாலை களைச்சுப்போய் வாறன். உனக்கென்ன வீட்டிலை காலாட்டிக் கொண்டிருக்கிறாய்..."

சீதனமில்லாமல் திருமணம் செய்து வீட்டோடு வேலைக்காரியாக வைத்திருக்கத் தீர்மானித்துவிட்டான் போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளால் பெருமூச்சுத்தான் விட முடிந்தது.

"சகுந்தலா... ஐஞ்சாறு கிளாஸ் கொண்டு வா..." என்றவாறு உள்ளே நுழைந்தான் சந்திரன்.

கையில் ஒரு துணி 'வாய்க்'. அதனுள் சில போத்தல்கள் சிணுங்கின. அவனைத் தொடர்ந்து ஐந்தாறு பேர்- நண்பர்கள்.

வரவேற்பறையில் இருந்த மேசையில் போத்தல்களை எடுத்து அடுக்கினான்.

"மச்சான்! முதலிலை 'வீடியோ' எடுக்க வேணும். என்னட்டை இருக்குது. நானும் சகுந்தலாவும் 'கேக்'கை வெட்டேக்கை நீ 'சூட்' பண்ணு..."

"பண்ணினால் போச்சு...."

"வடிவாய் எடுக்க வேணும். ஊரிலை அம்மா, மாமா மாமி எல்லாருக்கும் அனுப்பவேணும்.... ஏய் சகுந்தலா.... கிளாஸ் எங்கை?"

"என்ன பொரிச்சனீ..... அதையும் கொண்டு வா..."

சகுந்தலா மௌனமாகப் பரிமாறினாள்.

"உதுக்குத்தான் சொல்லுறது, எங்கடை ஊர்ப் பொம்பிளையளைக் கலியாணம் செய்யவேணும் எண்டு. வேறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுக்காரியளெண்டால் நீ உன்ரை வேலையைப் பார், நான் என்ரை அலுவலைப் பாக்கிறனெண்டு போவிடுவாளவை..." என்றான் பாலன்.

"ஓமோம்.... செல்வம் ஒரு ஜேர்மன்காரியைக் கட்டிப் படுறபாடுதான் தெரியுமே? காசிருக்கோ இல்லையோ ஒவ்வொரு சனிக்கிழமையும் றெஸ்ரோண்டிலை சாப்பிட வேணும். அவையவேன்ரை வேலையளை அவையவைதான் செய்யவேணும். வேலையாலை வந்து அதை எடு, இதை எடெண்டு அதிகாரம் செய்யேலாது.... எங்கடை பொம்பிளையள் எவ்வளவு மேல்...."

"நான் சீதனம் வேண்டாமையெல்லே கலியாணம் கட்டினனான்..." என்று பெருமையாகக் கூறினான் சந்திரன்.

ஒருநாளைக்கு ஒருமுறையாவது சொல்லாவிட்டால் அவனுக்குத் தலை வெடித்துவிடும் போலும்.

சகுந்தலாவுக்கு அவமானமாகக்கூட இருந்தது. தன் தலைவிதியை நொந்துகொண்டாள்.

"என்ன 'ம்'மெண்டிருகிறாய்... இண்டைக்காலும் சிரிச்சுக் கொண்டிரன்...."

சிரிக்க முயன்றாள். முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பட்டிக்காடு.... பட்டிக்காடு... ஆக்களோடை எப்பிடி 'மூவ்'பண்ணுறதெண்டே தெரியாது. எல்லாம் சொல்லிக் குடுக்கவேணும்...."

'நான் பட்டிக்காடென்றால் இவர்...?!'

இவர்களின் தண்ணியடித் திருவிழாவுக்கு திருமணநாள் ஒரு சாட்டு. ஊரில் உள்ள உறவுகளை ஏமாற்றுவதற்கு ஒரு 'வீடியோப் படப்பிடிப்பு.

இப்படியொரு போலி வாழ்க்கை தேவைதானா?!

'உலகமெனும் நாடக மேடையில் எல்லோரும் நடிகர்கள்' என்பதைச் சந்திரன் சொந்த வாழ்க்கையில் நிரூபிக்கிறானா? இதற்கு இவளையும் துணையாக....

வேதனையில் குமுறும் மனது வெறுப்படைந்து, அதில் சினம் கிளர்ந்தெழ, சகுந்தலா தன் மனவுணர்வுகளை அடக்க முயன்றாள்.

"ஏய் சகுந்தலா..."

இம்முறை சந்திரனின் குரலில் போதையும் கலந்திருந்தது.

"கெதியாய் துணியொண்டு கொண்டுவந்து 'கார்பெட்'டைத் துடைச்சு விடு. சிவா வாந்தி எடுத்துப்போட்டான்..."

சந்திரனின் உத்தரவைக்கேட்டு ஒருகணம் விறைத்துப் போனாள் சகுந்தலா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நிய ஆடவனொருவனின் வாந்தியைத் துடைக்க நானா கிடைத்தேன். இறைவா! ஏன் இப்பிடி ஒரு வாழ்க்கையை எனக்குத் தந்து சோதிக்கிறாய்? இரவிலே விபச்சாரியைப்போல அவனுக்காக என்று.... பகலிலே வேலைக்காரியிலும் கேவலமாக அவனுக்காக என்று.... இந்த இல்லற வாழ்க்கையிலே எனக்காக எந்த சுகத்தைத் தந்தாய்? இந்த நரக வாழ்வில் தினமும் செத்துப் பிழைப்பதைவிட என்னை ஒரேயடியாய் அழித்துவிடு...

ஆற்றாமையுடன் இறைவனை மனதில் வேண்டியவளின் கண்களில் நீர்த் துளிகள் சில வெளிக்கிளம்பின.

"நான் கூப்பிட்டுக் கொண்டிருக்கிறன். நீ உங்கை என்ன செய்யிறாய்..." என்றவாறு அங்கே வந்த சந்திரன், அவளின் கண்ணீரைக் கண்டு முகம் சுளித்தான்.

"இப்ப என்ன நடந்து போச்செண்டு இப்பிடி அழுறாய்? வாந்தியைத் துடைக்கிறதிலை என்ன அவமானம்? இந்த வெளிநாட்டிலை இதுகள் எல்லாம் சர்வசாதாரணம். இங்கை கனபேற்றை வேலையே எச்சில்கோப்பை கழுவுறதுதான்...."

தண்ணி சாப்பாடு எல்லாம் முடிந்து எல்லோரும் போய்விட்டார்கள்.

"சகுந்தலா..."

"........"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன கோபமே... இங்கை வந்து பார். உனக்காக நெக்லஸ் ஒண்டு வாங்கி வந்திருக்கிறன். ரண்டாயிரம் மார்க்குக்கு மேலை..."

அழகாகப் பளபளக்கும் கற்களால் இழைக்கப்பட்டு ஜொலித்த 'நெக்லஸ்'ஸைத் தூக்கிக் காட்டினான்.

அதைப் பார்த்த சகுந்தலாவின் முகம் தாமரையாக மலர்ந்தது.

'என்னதான் ஏசினாலும் பேசினாலும் இவருக்கு என்னிலை அன்பு இருக்குதான். இறைவா! இப்பிடியொரு கணவனோடை நான் பல்லாண்டு காலம் வாழ நீதான் வரம்தர வேணும்..'

மனதிற்குள் வேண்டிக் கொண்டாள்.

இந்த ஒரு நெக்லஸ்ஸை வைத்தே இன்னும் ஒரு வருடத்துக்காவது தன் தேவைகளை அவள் மன மகிழ்வுடன் நிறைவேற்றுவாள் எனக் கணக்கிட்டான் சந்திரன்.

✪

கார்பெட் – தரைவிரிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுவிசாரணை

சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி. அதேபோல, தான் உண்டு தன் வேலையுண்டு என்றிருந்தவனை அம்மாவின் கடிதம் உசுப்பிவிட்டு, தற்போது 'உணவு செல்லவில்லை சகியே, உறக்கம் கொள்ளவில்லை' என்ற நிலை.

நந்தகுமாரன். செல்லமாக நந்தன். ஜேர்மனிக்கு வந்து பத்து வருடங்கள் இருக்குமா? இருக்கும். வசதியாக உள்ளானா? உள்ளான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று அம்மாவின் கடிதம் வந்திருந்தது.

'அன்புள்ள நந்தன்!....' என்று ஆரம்பித்து, ஊர்ப் புதினங்கள் கொழும்புப் புதினங்கள் எனச் சுற்றிச் சுழன்று விசயத்துக்கு வந்தாள்.

'இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இப்பிடியே வாழப்போறாய்? உனக்கும் முப்பது வயதாகுது. காலாகாலத்திலை ஒரு நல்ல இடமாய்ப் பார்த்துக் கலியாணம் கட்டவேண்டிய நேரம் வந்துவிட்டது. பிறக்கறாசியார் பொன்னம்பலம் தன்னுடைய இரண்டாவது மகளுக்கு உன்னைக் கேட்டு வந்தவர். அவையும் வெள்ளவத்தையில்தான் இருக்கினம். உனக்குச் சம்மதம் என்றால் மேற்கொண்டு கதைக்கலாம்...'

கடிதம் வந்த விசயத்தைச் சொல்லி, சில வேண்டுகோள்களை விடுத்துப் பதிலை எதிர்பார்த்து, அன்பைத் தெரிவித்து முடிந்தது.

'பிறக்கறாசியார் பொன்னம்பலத்தின்ரை மகள்....?!'

நினைத்துப் பார்த்தான்.

மனத்திரையில் பத்து வருடத்துக்கு முந்திய காட்சிகள் பசுமையாகப் படம் விரித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தியில் இருக்கும் தபாற்கந்தோர். அதற்குப் பக்கத்தில் உள்ள மதவடிக் கல்வீடு. அதில் இரண்டு பெட்டைகள். அதில் ஒன்றாக இருக்குமா? அட... அதுகள் கிளாக்கர் நாகலிங்கத்தாற்றை மகள்மார்.

அந்தப் பள்ளிக்கூடம். அதன் பின்பக்கத்து முள்ளு வேலியாலை தெரியும் வீட்டிலை ஒருத்தி. சைக்கிள்கூட வைத்திருந்தாள். கிப்பித் தலை. அவளாக இருக்குமா?

அட... அது ஜேபியின்ரை மகள்.

பிறக்கறாசியார் பொன்னம்பலமே நினைவில் வர மறுத்தபோது... மகளை எப்படி நினைத்துப் பார்க்க முடியும்?!

அம்மாமீது ஆத்திரமாக வந்தது.

கடிதத்தோடு ஒரு போட்டோவாவது கேட்டு வாங்கி அனுப்பியிருக்கலாம்.

கலியாணம்தானே... இவ்வளவு காலத்துக்குப் பிறகு அம்மாவுக்கு அக்கறை ஏற்பட்டிருக்கிறது. சம்மதம் தெரிவித்துவிடலாமா?!

பெட்டை எப்படி இருப்பாள் என்று தெரியாமல் எவ்வாறு சம்மதம் தெரிவிப்பது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளியை எதிர்பார்த்துக் கற்பனைகளில் காதல் சாம்ராஜ்யம் அமைத்துக் கனவு கண்டுகொண்டிருக்கும்போது, மைனா வந்து குதித்துச் சாம்ராஜ்யத்தைச் சிதறடித்துவிட்டால்.... வாழ்க்கையே நரகமாகிவிடும்.

'போட்டோ அனுப்பினால்தான் முடிவு கூறலாம்' என அம்மாவுக்கு அறிவித்தால் என்ன?! தவறாக நினைத்துவிடுவாள். தனது பிள்ளை தன்னிலை நம்பிக்கை இல்லாமல் போட்டோ கேட்கிறானே என்று வருத்தப்படுவாள்.

பெட்டை எப்படி இருப்பாள் என்று தெரியாமல் பதில் எழுத மனம் ஒப்பவில்லை.

அம்மாவுக்குத் தீர விசாரித்துப் பெட்டையைப்பற்றி அறிந்ததன் பின்னர் பதில் போட்டால் என்ன? தாமதமானால் வலிய வந்த சம்பந்தம் தூர விலகிப் போய்விடும்.

பிறகு, பதில் 'லேற்'– அதனால் சம்பந்தம் 'லொஸ்ற்'– வாழ்க்கையே 'வேஸ்ற்'– 'அம்மா சொல்லுவாள் நீ எதிலையுமே 'லாஸ்ற்'.

நந்தனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. என்னவாவது செய்தாக வேண்டும். அதுவும் மிக விரைவாக.

யாராவது ஊர் ஆட்களைத் தேடிப் பிடித்தால்தான் விசாரிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேர்மனியில் வாழும் ஊராரைப் பட்டியல் போட்டான். மிகவும் தூரத்தில் வசிப்பவர்களைத் தள்ளிவிட்டான். அவசரம் என்றால் பிறகு தேடிப் பிடிக்கலாம்.

வசந்தி அக்கா.... நூறு கிலோமீற்றர் தூரத்தில்தான் வசிப்பிடம். குடும்பமாக வாழ்கிறார். விசாரிக்கலாம்.

வசந்தி அக்காவுக்கு எத்தனை பிள்ளைகளோ தெரியவில்லை.

போகும்போது வெறுங்கையுடனா போவது?!

**வ**ரிசையாக வீதியெங்கும் உயர்ந்து கம்பீரமாக நிற்கும் அடுக்கு மாடி வீடுகள். அவற்றுள் ஒன்றின் வாசலில் போய் வீட்டிலக்கத்தைச் சரி பார்த்துக்கொண்டு, வசந்தியின் பெயர் பொறித்த அழைப்பு மணியைத் தேடினான்.

'கணேசன்'

வசந்தியின் கணவன்.

அழுத்தினான்.

சிறிது மௌனத்தின் பின் சுவரில் பதிந்திருந்த சிறிய ஒலிபெருக்கியில் வசந்தி அக்காதான்....

"ஹலோ! ஆரது..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் நந்தன்...."

"நந்தனோ...? எனக்குத் தெரியேலை..."

"என்ன அக்கா உப்பிடிச் சொல்லுறியள்?! நான் சின்னையா வாத்தியாற்றை மகன்..."

"ஓ.... ஓ.... தெரியும். தெரியும். என்ன திடீரெண்டு இந்தப் பக்கம்..."

"உதை றோட்டிலை நிக்க வைச்சே விசாரிக்கிறது? கதவைத் திறவுங்கோவன்..."

பிரயாணக் களைப்பு. அவசரத்தில் தேனீரைமட்டும் பருகிவிட்டு வெளிக்கிட்டது. வசந்தியின் வீட்டில் சாப்பிடலாம்தானே என்ற எண்ணம்.

வீட்டிற்கு வரும் விருந்தினர்களை.... அதுவும் பல வருடங்கள் கழித்து வரும் விருந்தினர்களை விழுந்து விழுந்து உபசரிப்பார்கள் என்ற திடமான நம்பிக்கை அவனுக்கு.

சிறிதுநேரம் வசந்தியின் குரலைக் காணவில்லை.

"என்ன அக்கா.... என்ன யோசினை....?!"

"யோசினை இல்லை நந்தன். பயம்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பயமோ...?"

ஆச்சரியத்துடன் கூவினான்.

"எனக்கோ..."

"அவருக்குப் பயம்.... நீர் ரெலிபோன் எடுத்துக்கூடச் சொல்லாமை வந்திட்டீர்...."

"உங்கடை ரெலிபோன் நம்பர் என்னட்டை இல்லை அக்கா..."

"குறை நினையாதையும்.... அவர் இல்லாத நேரத்திலை ஆரையும் வீட்டுக்குள்ளை விடக்கூடாதெண்டு உத்தரவு.... அதுதான் நந்தன். நீர் என்ன நினைப்பீரோ தெரியாது..."

வசந்தியின் குரல் பரிதாபமாக ஒலித்தது.

நாகரீகத்தின் உச்சியில் நிற்கும் ஒரு நாட்டில் இப்படியொரு கணவன். அவருக்கு இப்படியொரு மனைவி, கூண்டுக்கிளியாக...!!

நாடு மாறினாலும் பாஷை மாறினாலும் உடைகள் மாறினாலும் உள்ளத்தை மாற்ற விரும்பாத மனிதர்கள்.

"அக்கா! அப்ப நான் போவிட்டு வாறன்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொஞ்சம் பொறும் நந்தன்.... வீட்டுக்குள்ளைதான் கூப்பிட முடியேலை. என்ன விசயமாய் வந்தனீரெண்டு கேக்கலாமில்லையா?"

'நாலு சுவர்களுள் அடைபட்டுக் கிடக்கும் இவளிடம் சொல்லுவதால் என்ன பயன் கிடைத்துவிடப் போகிறது?'

யோசித்தான்.

"விருப்பமில்லாட்டால் வேண்டாம்...."

"இல்லை அக்கா... விசயத்தைச் சொல்லி விசாரிக்கத்தானே விடிய வெள்ளண்ண எழும்பி இவ்வளவு தூரம் வந்திருக்கிறன்.... ஆனால் இப்பிடி வாசலிலை நிண்டு கதைக்கிறது புது அனுபவம்..."

"எனக்கு இது பழகிப்போன விதி.... அப்பா அம்மா பெரிசில்லை, காதலன்தான் வேணுமெண்டு நானே என்ரை வாழ்க்கையை அமைச்சுக் கொண்டன். இப்ப பாழாய்ப்போன சந்தேகம்.... அதுக்குப் பயந்து பயந்து வாழவேண்டிக் கிடக்கு...."

"கவலைப்படாதேங்கோ.... காலம் எப்பவும் கஸ்டமாக இருக்காது. அக்கா, எனக்கொரு சம்பந்தம் ஊரிலையிருந்து பேசி வந்தது. பிறக்கறாசியாற்றை மகளாம்.... அவவைப்பற்றி உங்களிட்டை ஏதாலும் விசாரிக்கலாம் எண்டுதான் வந்தனான்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னத்தைப்பற்றி விசாரிக்கப் போறீர்? அழகு... குணம்.... படிப்பு... பண்பு... இல்லாட்டில் பணம் காசு...?! நான் சொல்லுறனெண்டு குறை நினைக்காட்டில் ஒண்டு சொல்லுறன்..."

"சொல்லுங்க..."

"உங்கடை தாய் தேப்பன் உங்களுக்கு நல்லதைத்தான் செய்வினம்.... அவையிலை சந்தேகப்படாதையுங்கோ... ஒவ்வொரு மனுசருக்கும் ஒவ்வொரு குறை இருக்கு. ஒருத்தருக்குப் படிப்பு இல்லாட்டில் நல்ல குணம் இருக்கும். பணம் இல்லையெண்டால் நல்ல அழகு இருக்கும். வாழ்க்கைக்கு இதுகளெல்லாம் ஓரளவுக்குத்தான் தேவை... விட்டுக் கொடுத்து வாழுற மனம்தான் முக்கியம்... இண்டைக்கு என்ரை வாழ்க்கையைப் பாருங்கோ... காதலிச்சம்.... படிப்பு ரியூசன் எண்டு தாய் தேப்பனை ஏமாத்திக் காதலிச்சம்.... ஒருயிர் ஈருடல் எண்டமாதிரி.... ஆனால் எல்லாம் கொஞ்சநாள் கவர்ச்சி.... இப்ப கவர்ச்சி போய் சந்தேகம் வந்து நான் ஒரு சிறைப்பறவையாய்.... ஓமோம்.... அவருக்கு என்னிலை சந்தேகம்... அடி உதை... குத்து.... நான் ஆசையாகத் தேடிக்கொண்ட வாழ்க்கை. என்ரை 'பாஸ்போட்'கூட என்னட்டை இல்லை. அவர்தான் கொண்டு திரியுறார்.... ஓடீடுவனாம்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவரில் பொருத்தியிருந்த ஒலிபெருக்கியில் வசந்தியின் குரல் விம்மியது.

நந்தனுக்கு என்ன கூறுவதென்று தெரியவில்லை.

"நந்தன்.... விசாரணைகளாலை ஒரு வாழ்க்கையை வளமாக அமைக்க முடியாது. எல்லாத்துக்கும் மனம்தான் முக்கியம். மனம் இருந்தால் மார்க்கம் தானாய்த் தெரியும்.... இப்பிடிச் சொல்லுறதுக்காகக் கோபிக்கிறீரோ..."

"இல்லை அக்கா.... நான் மெனக்கெட்டு வந்ததுக்கு உங்கடை அறிவுரை மூலம் பலன் கிடைச்சிருக்கு.... நான் போவிட்டு வாறன் அக்கா...."

ஒருவரின் அனுபவம் மற்றவருக்குப் படிப்பினையாகிறது.

அம்மாவுக்குச் சம்மதம் தெரிவித்துக் கடிதம் எழுதினான். நிச்சயமாக அம்மா சந்தோசப்படுவாள். அவள் சந்தோசமடைந்தால் அதுவே வாழ்வின் களிப்பிற்கு அஸ்திவாரமாகும்.

அம்மாவின் பதிலுக்காகக் காத்திருந்தான்.

'அன்புள்ள நந்தன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது கடிதம் கிடைத்து மிகவும் சந்தோசம். ஆனால் விதி வேறுவிதமாக அமைந்துவிட்டது.

பெண் வீட்டார் உன்னைப்பற்றி விசாரித்தார்களாம். உனக்கு உந்த நாட்டுப் பாஸ்போட் புத்தகம் இல்லையாம். சொந்த வீடு இல்லையாம். தொழிற்சாலை வேலை இல்லையாம். ஒரு கார்கூடச் சொந்தமாக இல்லையாம்.

அதனால் வேறு இடத்தில் சம்பந்தம் பேசுகிறார்களாம்.......'

கடிதம் தொடர்ந்தது.

'வசந்தி அக்காவைப்போல ஒருத்தியை அவர்கள் சந்திக்கவில்லைபோலும்.'

நந்தனுக்கு உரத்துச் சிரிக்க வேண்டும்போல் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூண்டுப் பறவை

கூண்டினுள் சோகமே வடிவாக அமர்ந்திருந்தன அப்பறவைகள். -'லவ் பேர்ட்ஸ்'. காதல் பறவைகள். கூண்டைத் திறந்து விரல்களைக் குவித்து, கையை உள்ளே நீட்ட, அதில் தாவி அமர்ந்து கொண்டது காதல் சோடியில் ஒன்று. அலகைத் தாழ்த்தி அவனது கரத்தை மென்மையாகக் கொத்தி, மீண்டும் அவனது முகத்தில் ஏதோ தேடி.... மறுபடியும் கையை உற்றுப் பார்ப்பதுமாக....

அவனது முகத்தில் முகிழ்த்த உணர்ச்சி ரேகைகளையும், கரத்தின் ரேகைகளையும் ஒப்பிட்டு, எதிர்காலத்துக்குப் பதில் தேடுகிறதோ?

யாரது எதிர்காலம்.... தனதா? எனதா....?

எதிர்காலத்திற்கான கேள்விகளை விதைத்துச் சென்ற யாழினியின் தாக்கம்... அவள் தந்ததை உருவாக்கி, வளர்த்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானித்து, முடிந்த முடிவாய் அவனின் நிம்மதியை முடித்த செயலுக்குப் பரிகாரம் உண்டா என அப்பறவை கேட்கிறதா?

அவனது கண்கள் கலங்கின. மனம் நெகிழ்ந்தது. கன்னங்களில் வழிந்த நீர்த்துளிகள் பளபளத்தன. சோர்வும் களைப்பும் கவலைகளும் அவனது முகத்தில் முண்டியடித்தன.

அந்தப் பறவை அவனது முகத்தை உற்றுநோக்குவதைப் பார்க்கையில் உலர்ந்துபோன உள்ளத்து உணர்வுகளையும் மீறிச் சிரிக்கத் தோன்றியது.

சிரித்தான்.

அந்தப் பறவையை உதட்டோரம் உயர்த்தி உச்சிமோர்ந்தான்.

இப்பிடித்தான்... அவளும் உற்றுப் பார்ப்பாள். பார்வையில் ஆயிரம் எதிர்பார்ப்புகள்.... கேள்விகள்... இளக்காரங்கள்.... 'கேட்டால்மட்டும் நிறைவேற்றிவிட முடியுமா உன்னால்?' என்ற ஏளனங்கள்.... இவை எல்லாமே பட்டும்படாமலும் தொட்டும்தொடாமலும் வெளிக்காட்டும் பார்வை அவனைக் குழப்பி அவனது மனதைத் தைக்கும்....

சக்தியின்றேல் சிவமில்லை.... சிவமின்றேல் சக்தியில்லை. நானே குடும்பத்தின் ஆணிவேர்.... நீ என்னை வைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரிசுகளை உருவாக்கி, ஆளாக்கி, உலகத்தில் உனக்கொரு குடும்பமென்று ஒன்றென உலாவருவாய்....

அதற்காக என் ஆசைகளை.... ஏக்கங்களை.... உணர்வுகளை.... எதிர்பார்ப்புகளை அழித்துவிடாதே.... நான் கேட்பதைக் கொடு.... மற்றவர்கள் தங்களுக்கெனத் தேடுவதைத்தான் உன்னிடம் நாடுகிறேன். அவற்றைத் தேவையில்லாதனவென்று உனக்கு நீயே உருவாக்கிக் கொண்ட கோட்பாட்டு வட்டத்துக்குள்போட்டு நசுக்கிவிடாதே!

"சாந்தா இண்டைக்கு ரண்டு சோடிக் காப்பு வேண்டினவள்...." என்று பெருமூச்செறிந்தாள் யாழினி.

சாந்தா அதே நகரத்தில் வசிப்பவள்.

"அதுக்கென்ன.... உம்மட்டைத்தான் இருக்கே....?"

"ம்.... இருக்கு.... ஏதோ இருக்கு. பழைய மொடலிலை.... புதிசாய் என்ன இருக்கு.... சாந்தா கொடுத்து வைச்சவள்...."

நானும் பழைசுதான்....

வாய்வரை வந்தது தொண்டையுள் அமுங்கியது.

புதிசு புதிசாக.... சடப்பொருள்கள் சருகாக மறையும்.... தோன்றும்.... ஒன்று உருவாக, மற்றது மறையும்.... இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக வரலாறு. ஆனால் உயிர்களுக்காக.... அந்த உயிர்களின் உருவகங்களை, இயல்புகளை வேறுபடுத்தி வித்தியாசப்படும் மனங்கள் மாறுபடாதவை.... மாறுபாடாகத் தெரிந்தாலும் அவை வலிந்தேற்ற வேசங்கள்.... மற்றொன்றின் அடிமைகளானதில் விளைந்த விபரீதங்கள். மனித மனங்களின் ஊடலும் கூடலும் தேடலும் சடப்பொருள்களின் புதுப்புதுத் தோற்றங்களினால் மாற்றீடு செய்யப்படுமெனில்.... மனங்கள் சடப்பொருள்களிலும் கேவலமானவையா....?!

இது அவளுக்குப் புரியாது.

சடப்பொருள்களுக்கு அவள் சகாயமாகிவிட்டாள்.

"அவையளுக்கு வேறை செலவில்லை.... வாங்கீனம். ஒண்டிலை வாறது மற்றொண்டிலை போகத்தானே வேணும்...."

"உங்களுக்கென்ன செலவு....? ஒவ்வொருத்தி ஒவ்வொரு கலியாண வீடு, பிறந்தநாள் எண்டு.... ஒவ்வொண்டுக்கும் ஒவ்வொரு 'சாறி' வேண்டுறாளவை...."

"என்ரை நிலமை தெரியாதே.... ஊரிலை அப்பா, அம்மா.... அவைக்கே ஒழுங்காய்க் காசனுப்ப முடியேலை...."

"அவைக்கு அளவாய் அனுப்பலாந்தானே...."

"அவை என்னை அளந்து வளக்கேலை.... அளவாய்ச் சாப்பாடு போடேலை.... கணக்குப் பாத்துப் படிப்பீக்கேலை....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இண்டைக்கு அந்தக் கஸ்டமான நிலமையள்ளை.... இஞ்சையிருந்து அனுப்புற காசு அவேன்ரை சாப்பாட்டைச் சமாளிக்கத்தான் காணும்.... கேவலம் உந்த நகையள், சீலையளுக்காக.... அவையளுக்கு அளவுச் சாப்பாடு போடச் சொல்லுறீரோ...."

"அதுதான் வேண்டாமெண்டால் பங்களிப்பு எண்டு மாதாமாதம் செலவழிக்கிற காசை நிப்பாட்டலாந்தானே?"

"ஏனப்பா இப்பிடிக் கதைக்கிறீர்.... என்னாலை புண்ணுக்கு மருந்து போட ஏலாட்டாலும், ஒத்தணம் கொடுக்கிறன்.... அதுக்கும் பாக்க இப்ப நகையளும் சீலையளுந்தான் முக்கியமோ...?" என்று எரிச்சலுடன் கேட்டவனைச் சினத்துடன் பார்த்தாள் யாழினி.

யாசகத்திலிருந்துதான் நேசம் ஆரம்பமாகிறது. 'அன்பே!' என்ற அழைப்பிற்கு அன்பு கிடைக்க வேண்டும். அப்போதுதான் அங்கே 'அன்பே!' என்ற அழைப்பில் உறவு உருவாகி, உணர்வாகி, கலந்தோடி, வியர்வையில் விரைந்தோடி பாசம் உருமாறி உருவமாகிறது.

யாசிப்பின் பலன் பூச்சியமானால்.... சுகமென்ன.... சொர்க்கமென்ன...?! உச்சியிலிருந்து தலைகுப்புற விழுந்து வலியெடுத்துத் தவிக்கும் நிலையையும் மிஞ்சிய நரகம்தான் தஞ்சம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, யாசகத்தை நீ நசுக்கினால்.... யாசிப்பவள் பாதகியானாலும் வியப்பில்லை. பாதிக்கப்பட்டவர்கள்தான் பயங்கரவாதிகளாகிறார்கள்!

"தாலி கட்டின மனைவியின்ரை சின்னச் சின்ன ஆசையளைக்கூடத் தீர்த்து வைக்காதவனெல்லாம் கலியாணங்கட்டக் கூடாது..."

"இது சின்னச் சின்ன ஆசையில்லை.... சின்னஞ் சின்னனாய் முளைச்சு ஒண்டாய்த் திரண்டு கொண்டிருக்கிற பென்னாம் பெரிய ஆசை...."

'உன்னோடை பேசிப் பலனில்லை.... என்ரை ஆசையளைத் தீர்க்க உன்னாலை முடியாது....' என்பதுபோல், 'வெடுக்'கென முகத்தைத் திருப்பியவாறு அங்கிருந்து அகன்றாள் யாழினி.

அவளது பெருமூச்சு அவனைச் சுட விழைந்தது. முடியவில்லை. பலமுறைவிட்ட மூச்சுக்களால் கறுத்துக் காய்ச்சுப் போனவன்.

ஆனால் அவள்....

சக்தி....!! சக்தியின்றேல் சிவமில்லை. நீ அர்த்தநாரீஸ்வரனல்ல.... என் உணர்வுகளில் பாதி கேட்டு, உன்னில் பாதி தர, உன்னால் முடியாது. நான் சக்தி....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிப்பேன்.... நானே நான்.... நானாக வாழ்வேன்.... தோற்றமும் தெரியாது, முடிவும் தெரியாது என்றானபோது.... மிஞ்சிக் கிடக்கும் கொஞ்ச நாட்களில் என் உணர்வுகள்.... ஆசைகள்.... அவற்றுக்குத் தீனிபோட்டு, என் எண்ணப்படி நான் வாழுவேன்.... வாழ்ந்து காட்டுவேன்!

அவள் சொல்லாததைச் செய்துகாட்டினாள்.

அந்தப் பறவைகள் எவ்வளவு அழகு?! கழுத்தில் வரிவரியாகக் கறுத்த கோடுகள் மாலைகளாக மனதை மயக்கின. அவனது நாசித் துவாரத்திலிருந்து வெளிவந்த மூச்சுக் காற்றின் உஷ்ணத்தால் மருண்டு இறக்கைகளை ஒடுக்கிக் கொண்ட பறவையை, மெல்லத் தன் நெஞ்சுடன் அணைத்துக் கொண்டபோது, அவன் இதயநாளங்கள் அவளின் பெயரை மீட்டத் தொடங்கியது.

"யாழினி... யாழினி...."

கூண்டுக்குள்ளிருந்த சோடிப் பறவை சிறகுகளைச் 'சட,சட'வென அடித்துக் கொண்டு, 'கீச், கீச்' எனக் கத்தியது.

அதைக் கண்டு அவனது கரத்திலிருந்த பறவை பரிதாபமாக அவனைப் பார்த்தது.

'இறக்கிவிடன்.... என்னை எதிர்பார்த்து ஒரு உயிர் கூண்டுக்குள்ளை தத்தளிக்கிறது' என்று கெஞ்சுவது போலிருந்தது அதன் பார்வை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும்தான் தத்தளிக்கிறன். கூண்டுக்குள் இருந்தல்ல.... இந்த வீட்டுக்குள் இருந்து.... உனக்குப் புரியுமா?'

புரியாது.... ஆறறிவு பெற்ற மனித ஜென்மங்களுக்கே புரியாதபோது, உனக்கெங்கே புரியப் போகிறது?!

'புரியும் புரியும்...'

ஏளனமாகச் சிரித்தது கூண்டுப் பறவை.

'உனக்கு நீயே ஆறறிவு இருப்பதாக நினைத்த முடிவு. உனக்கில்லாத அறிவு எனக்குண்டு. இந்தக் கூண்டுக்குள்ளேயே எங்களால் நிம்மதியாக வாழ முடிகிறது.... துணையில்லாமல் தனித்து வாழமாட்டோம். ஆனால் நீ.... எங்கே உன் துணை.... தனக்கென ஒருவனைத் தேடிப் பறந்துவிட்டாள். எங்கே உன் நண்பன்.... வில்லன்.... இன்றுனக்கு வில்லன்.... எங்கே உன்னுடைய ஆறு வயது மகள்.... அப்பா அப்பா என்று வளைய வருவாளே....?! அவள்கூட அம்மாவின் பின்னால் போய்விட்டாள்.... அவளும் உன்னை விலத்தி, தப்பானவனை அப்பாவாக்கிவிட்டாளோ....?!'

கூண்டுப் பறவை சிறக்கைகளைத் தட்டி அலறியது.

'இப்ப நீ தனிமரம்.... கட்டிய மனைவி இல்லை. பெற்றெடுத்த மகள் பாமினி இல்லை. இழந்துபோன உறவுகளுக்காய் உருகமட்டுந்தான் உன்னால் முடியும்....'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எதிர்பார்க்கவில்லை.... யாழினி இப்பிடிச் செய்வாளெண்டு எதிர்பார்க்கவில்லை.'

அன்று....

பிடரியில் வாய்க்கால் அமைக்கும் இரட்டை சடைப் பின்னல் தோளில் தவழ, இடுப்பில் பாடப் புத்தகங்களை அணைத்தவாறு சென்றுகொண்டிருந்தாள்.

மழை சற்று ஓய்ந்திருந்தது. குண்டும் குழியுமான வீதியில் தண்ணீர் அருவியாகி, வீதியைச் சமதரையாக்கிக் கொண்டிருந்தது.

ஏதோ சிந்தனையுடன் வந்து கொண்டிருந்தவனின் 'சைக்கிள்' பள்ளத்தில் விழுந்து எகிறித் தடுமாறி அவள்மேல் சாய்ந்தபோது, அவளின் புத்தகங்கள் வீதியில் சிதறுண்ட.... அவன் பயந்தவாறு மன்னிப்புக் கேட்டு, சிதறியவைகளைச் சேர்க்க, அவள் கோபமுறாமல் புன்னகைக்க....

அறிமுகத்துக்கு ஆரம்பக் காரணி அது. அறிமுகம் அர்த்தமாக எதையோ தேடி, எதிலோ தைக்க.... அவர்கள் காதலர்கள்.

பற்றையை நாடி, செத்தையைத் தட்டி இரகசியமாய் ஆரம்பித்து, இரசனைகளில் மூழ்கி, நம்பிக்கை வசனங்களால் துணிந்து நின்று, ஊர் கதைத்து, உற்றம் சேர்ந்து திருமணமாகி, வெளிநாட்டுக்கு வந்து, வாரிசாக ஒன்றையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றுவித்த பிறகு.... பிரிவு.... சடப்பொருள்களின் மீதுள்ள சகாயம் சல்லாபத்தை விழுங்கி ஏப்பமிட்டு, விபரீத விளைவைத் தோற்றுவிக்க, எங்கிருந்தோ வந்தவன் எத்திப்பறித்த கதையாக.... காதல் வெறும் காமமாய், உறவு வெறும் மாயையாய், அவன்மட்டும் அலங்கோலமாய்....

கூண்டுப் பறவை வீறிட்டுக் கத்திச் சிரித்தது.

'எதிர்பாக்காத பிரிவு....'

'மானுடனே... உறவு பிரிவு, பந்தம் பாசம்.... இவை யாவுமே உன் கையில் இல்லை. உலகம் ஒரு சக்தியால் சுழல்கிறது. அதோடொத்து நான், நீ.... புல் பூண்டு என இந்த அண்டத்து உயிர்கள், பொருள்கள் யாவுமே அந்தரத்தில் சுழலும்போது.... இதுதான் நிலையானது.... இதுதான் நிரந்தரம் என்று நினைப்பதா உன் ஆறறிவு....?!'

'நம்பிக்கைதானே வாழ்க்கையின் அஸ்திவாரம்....?'

'நம்பிக்கை.... யார் யாரை நம்புவது? ஆஸ்திகன் கடவுளை நம்புகிறான். நாஸ்திகன் சக்தியை நம்புகிறான். நீ இலட்சியங்களை நம்பினாய். உன் மனைவி நகையை, சேலையை நம்பினாள்.... அவைகளுக்காக எவனையோ நம்பினாள்.... உன் உதிரத்தில் உதித்த மகள் தாயை நம்பினாள். ஆக நம்பிக்கைகள் அழிவுக்கா, ஆக்கத்துக்கா வழிவகுக்கிறது....'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'குழப்பாதை....'

தலையில் அடித்துக் கொண்டான்.

'உலகமே குழப்பம். உலகம் உருண்டை, தன்னைத்தானே சுற்ற ஒருநாள் எடுக்கிறது. அப்படியாயின் விமானங்கள் நகரத் தேவையில்லை.... அந்தரத்தில் மேலே எழுந்து, அசையாமல் சிலமணி நேரம் அங்கேயே நின்று, கீழே இறங்கினால், வேறுநாடு வந்துவிடுமா? இது குழப்பமில்லையா.... உனது மனைவியின் ஆசைகள் அந்தரத்தில் மேலெழுந்து, ஊசலாடிக் கீழே வந்தபோது, அது இடம் மாறிவிட்டது....'

ஏதோ ஒரு நகைச்சுவையைக் கூறியதுபோல், அந்தப் பறவை கூண்டுக்குள் அங்குமிங்குமாகப் பறந்து திரிந்து அலறி அலறிச் சிரித்தது.

கூண்டை எட்டி உதைத்தான்.

'திமிர்.... திமிர்....'

அலறித் துடித்த பறவை, திறந்த கதவின் வழியே வெளியே பறந்து, அலுமாரியின் மேல் அமர, அவனது கரத்திலிருந்த பறவையும் தாவி அதன் அருகே அமர்ந்தது.

'அந்தரமான உலகத்தில் நிரந்தரமான உறவுகள்.... நல்ல வேடிக்கை. நிரந்தரத்துக்கு நீ விலை கொடுக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும்.. இல்லையேல் எல்லாமே அந்தரம்.... அந்தரம்.... நாளைக்கு உன்ரை மகள் உன்னைப் பார்க்க வரலாம்.... அப்பா என்று அழைக்கலாம். ஆனால் இப்ப அவளுக்கு யார் அப்பா?! நீயா.... அவனா....?! அவளையும் சூழ்நிலையோ, மனச்சாட்சியோ விலை கேட்கலாம். அப்பா ஞாபகம் வரலாம். அப்போது வருவாள்....'

'வருவாளா....'

'வருவாள்.... வருவாள். அதுவரைக்கும் நீ அவளுக்காக மீண்டும் நம்பிக்கை வைத்து உன்னையே ஏமாற்றிக் கொள்ளப் போகிறாயா?'

பறவை பரிகசித்தது.

அவனால் தாங்க முடியவில்லை.

காதுகளைப் பொத்திக் கொண்டான்.

'சீ.... சனியனே, முன்னுக்குப் பின் முரணாகப் பேசிக் குழப்புகிறாய்?'

மேசையிலிருந்த புத்தகத்தை எடுத்து வீசி எறிந்தான்.

பறவைகள் விலகி ரீவிக்குத் தாவ, அலுமாரிக் கண்ணாடிக் கதவுகள் 'கலீர்' என்ற சத்தத்துடன் சிதறின.

'விசரன்.... விசரன்....'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேலியாகச் சிரித்தன.

"சனியன்களே.... என்னையா ஏமாற்றுறீங்கள்..." என்று கத்தியவாறு மேசை விளக்கை எடுத்தெறிய, அது ரீவியை நொறுக்கியது.

'பைத்தியம்.... பைத்தியம்....'

காதுகளைப் பொத்திக் கொண்டான்.

மனதில் இனம்புரியாத கொதிப்பு. அந்தக் கொதிப்பில் சிரசு சூடாகி, மூளையே உருகி மெழுகாகி, சொரு சொரென்று நெற்றியில் படர்ந்து, கண்களை மறைப்பதுபோன்ற பிரமை.

கைகளில் கிடைத்ததை எல்லாம் தூக்கி வீசினான்.

'விசரன்.... விசரன்.... எங்களையா கூண்டுக்குள் அடைத்து அழகு பார்த்தாய்....?! விசரன்.... விசரன்.... பெண்டாட்டி ஓடினதால் விசரன்.... மகள் போனதால் விசரன்.... விசரன்.... இப்பிடித்தான் க்தைப்பார்கள்....'

பறவைகள் உல்லாசமாக வெளியே பறக்கும்போது, அவனது சிரிப்பொலியும் வெளியே நீண்ட நேரமாக ஒலித்துக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரைப் பற்றி...



இந்நூலாசிரியர்
**இராஜன் முருகவேல்**

மிக இளம்வயதிலேயே எழுத்துத் துறைக்கு வந்தவர். கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவர். புலம்பெயர் வாழ்வின் பன்முகப்பட்ட அவலங்களுக்கிடையிலும் எழுத்தை விடாமல் காதலிக்கும் தமிழ் எழுத்தாளர்களில் முன்னணி எழுத்தாளர் வரிசையில் இடம் பிடித்திருப்பவர். 80களில் வெளியான 'வசந்தம்' சஞ்சிகையின் ஆசிரியர். சிறுகதை, கவிதை, கட்டுரை, எனப் பல படைப்புக்கள் இவரது சொந்தப் பெயரிலும் புனைப்பெயரிலும் பல சஞ்சிகைகளில் வெளியாகியுள்ளன. அண்மைக்காலமாக பூவரசை இவரது எழுத்துக்கள் அலங்கரித்து வருகின்றன. இவரது முதலாவது சிறுகதைத் தொகுதியான 'யௌவனமில்லாத யதார்த்தங்கள்' பூவரசு கலை இலக்கியப் பேரவையின் முதல் வெளியீடாக வருகிறது.

இவரது இரண்டாவது படைப்பான 'பெயர் ஒன்று வேண்டும்' என்ற இந்த சிறுகதை மணிமேகலை வெளியீடாக வெளிவருகிறது. இந்த தொகுப்பில் சமுதாய சிந்தனை மேலிடுகிறது.

- *இந்து மகேஷ்*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
044-8224803